கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

KARKATHAR OPPURAVU

மலர்–16, இதழ் – 1 Volume - 16, Issue - 1	மார்கழித் திங்கள் December 2024	விலை ரூ. 25/– Price Rs. 25/-	ஆண்டு சந்தா ரூ. 300/– Annual Subscription Rs. 300/-	தமிழ் மாத இதழ் Tamil Monthly

"Delivered by India Post"

www.indiapost.gov.in

PARVATHY
MULTISPECIALITY HOSPITAL

டே கேர் முழங்கால்
மாற்று அறுவை சிகிச்சை
2018 முதல்

காலை -8 மணி
குடும்பத்துடன் காலை உணவு

மதியம்-2 மணி
முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை

மாலை -8 மணி
குடும்பத்துடன் இரவு உணவு

திருமதி கீதா தனது தினசரி
வழக்கத்தை தடங்கலின்றி தொடர்ந்தார்.

உங்களுக்கும் அதையே நாங்கள்
உறுதியளிக்கிறோம்.

12 மணி

நேரத்தில்
வீடு
திரும்பலாம்

டே கேர் முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை

குரோம்பேட்டை: 24, ஜிஎஸ்டி சாலை, குரோம்பேட்டை, சென்னை - 600 044
ஓரகடம்: 405/5A ஜமுனாபட்டு கிராமம், ஸ்ரீபெரும்புதூர், ஓரகடம் - 602 105

Website: www.parvathyhospital.com
மேலும் தகவல்களுக்கு: 044 2238 2248

SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM
SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION

WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

CUT DOWN YOUR ELECTRICITY COST

MARUTHI POWER CONTROL SYSTEM

CALL US @ 9841828077

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com

S.SELVAKUMAR - C.E.O



ஓட்டல் சாரதாராமின்

36 வது ஆண்டு விழா

15.11.2024

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு – குறள் (86)

பொருள் : வந்த விருந்தினர்களை மகிழ்ச்சியுடன் உபசரித்து வழியனுப்பி, வரும் விருந்தினரை ஆவலோடு எதிர்நோக்கி இருப்பவன், தேவர்களுக்கும் நல் விருந்தினன் ஆவான்.

THANK YOU
for being with us

நன்றி!

hotel saradharam chidambaram

Saradharam's LAKSHMI VILAS HERITAGE HOTEL

villa SENTOSA AT PONDICHERRY

saradharam residency kottumannarkoil

Incredible India

Kalyan Grand is a 3 Star Business Class Hotel, well equipped with modern amenities that blend comfort with functionally to provide comfortable, restful stays.

KALYAN GRAND
a business hotel

108 Rooms & Suites | 03 Banquet Halls

[For Weddings & Receptions, Birthday Parties and Corporate Events]

Ph: 044 66289999 | Mob: 7812009999
reservations@kalyangrand.com | www.kalyangrand.com

Thiruvasantham
PURE VEG

A Traditional South Indian Pure Vegetarian Restaurant

Authentic Indian Sweets, Savouries and Outdoor Catering

Ph: 044 22752999 | Mob: 9884092244
hotelthiruvasantham@gmail.com | www.thiruvasantham.com

No. 247, GST Road, Vandalur, Chennai, Tamil Nadu - 600048
(Adjacent to Kilambakkam New Mofussil Bus Terminus)


DAC MIDTOWN
SMART LIVING, ELEVATED
DAC
DREAM ASCEND CONQUER
DAC
CELSIUS TO CASH
ON GST ROAD
HOTTEST DEAL ON GST ROAD
°C
50°
45°
40°
35°
30°
25°
20°
15°
10°
₹50,000 /month
₹40,000 /month
₹30,000 /month
₹20,000 /month
₹10,000 /month
1 YR RENTAL
2 & 3 BHK APARTMENTS | ₹59L* ONWARDS
The Higher the Temperature,
The Higher Your Assured Rental Income*
TN/35/BUILDING/0383/2024 | www.rera.tn.gov.in | *T&C APPLY
GUDUVANCHERY
93003 93003

CHENNAI RADHA ENGINEERING WORKS (P) LTD.,

AFFIGENIX BIO SOLUTIONS PVT LTD.,

Diagnostics. Biopharma Products & Services

AREA OF EXPERTISE

- Biochemistry Reagents & Instruments
- Molecular Diagnostics
- Blood Grouping
- ELISA
- Rapid Diagnostics
- Turbidimetry Reagents

Affigenix®

• Devise • Develop • Deliver

CREW GROUP OF COMPANIES

CALL FOR MORE INFO +91 9444 978 209

VISIT OUR WEBSITE www.affigenix.com

MAIL US sales@affigenix.com

R & D CENTER: 5/1F, KSSIDC Industrial Area, Bommasandra, Anekal Taluk, Bangalore, Karnataka - 560 099.

IVD MANUFACTURING FACILITY: #88 & 89, SIDCO Industrial Estate, Alathur, Chengalpet Dist.Tamil Nadu - 603 110.

CHIDAMBARAM SPIRITUAL STAY

146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM

சிதம்பரம் நடராஜர் திருவருளால் சிதம்பரம் கனகசபை நகரில் ஆன்மீக சுற்றுலா பயணியர் மற்றும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு குழுவாக வருபவர்களுக்கும் மேலும் குடும்பத்துடன் வருகைபுரியும் அன்பர்களுக்கும் குளிர்சாதன வசதியுடன் (A/c) தங்குவதற்கு விடுதி அமைந்துள்ளது. திருமண விசேஷங்களுக்கு மணமகன், மணமகள், வீட்டார் உறவினர்கள் ஒரே இடத்தில் 50 நபர் வரை தங்குவதற்கு சிறந்த இடம் **"Chidambaram Spiritual Stay"**

மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.

9790292444, 9790215833

முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கு "Booking.com" மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்

- பிறந்தநாள் விழா, மஞ்சள் நீராட்டு விழா மாணவ / மாணவிகளின் Get together போன்ற சிறிய அளவில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் நடத்துவதற்கு ஏதுவாக எங்கள் விடுதி அமைந்துள்ளது.
- மருத்துவ காரணங்கள் மற்றும் தற்காலிகமாக சில நாட்கள் தங்க சமையலறை வசதியுடன் கூடிய தங்குமிடம் எங்களிடம் உள்ளது. இவ்வசதி வேண்டுவோர் மேற்கண்ட செல் நம்பர்களை நேரடியாக தொடர்பு கொள்ளவும்.
- Free Driver Accommodation Available

இதழின் உள்ளே....

மாதா, பிதா, கூகுள், தெய்வம் ! 11

குடும்ப அமைதிக்கான வழி ! 13

சங்கப் பலகை 17

சுற்றுச் சூழல். 20

பணம் கடன் கொடுத்த வழக்கு 22

மணமகன் / மணமகள் தேவை ..... 39 – 43

சிறுவர் பகுதி 46–49

சங்க நிகழ்வுகள் 50

கார்காத்தார் ஒப்புரவு

கார்காத்தார் சங்கம் (சென்னை)

64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882
Whatsapp : 82484 49204

ஆயுள் சந்தா ரூ. 2000/-

ஆண்டு சந்தா ரூ. 300/-

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
மீ. நடராஜன்
மயூர் பிரிண்டர்ஸ்
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.

ஏடு இட்டோர் இயல்

கார்காத்தார் ஒப்புரவின் ஒப்பற்ற வாசகர்களுக்கு எங்களது வணக்கங்களும், வாழ்த்துக்களும். உலகளவில் மக்களைக் கவர்ந்த தேர்தல் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல். நவம்பர் 5–ஆம் தேதி நடந்த தேர்தலில், குடியரசுக் கட்சியின் வேட்பாளரான திரு. டொனால்டு டிரம்ப் அவர்கள், ஜனநாயக கட்சியின் வேட்பாளரான கமலா ஹாரிஸ் அவர்களை எதிர்த்து வெற்றி பெற்றுள்ளார். இரண்டாவது முறையாக அமெரிக்க அதிபராகி உள்ள அவருக்கு எம் வாழ்த்துக்கள். 47–ஆவது ஜனாதிபதியாக அவர் ஜனவரி 20, 2025 ஆண்டு பதவியேற்க உள்ளார். அன்றைய தினமே உதவி அதிபராக டிம் வால்ஸ், மின்னசோட்டா கவர்னரும் பதவி ஏற்கின்றார்.

கடந்த நவம்பர் 14–ஆம் தேதி இலங்கை நாடாளுமன்ற தேர்தல் நடந்து முடிந்தது. கடந்த செப்டம்பர் மாதம் அதிபர் தேர்தல் நடந்து, தேசிய மக்கள் கட்சி வெற்றி பெற்று, அதன் தலைவர் அனுரா குமார திச நாயகே, இலங்கை அதிபராக பதவியேற்றார். தற்போது நடந்த நாடாளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் கட்சி மொத்தமுள்ள 225 இடங்களில் 159 இடங்களைக் கைப்பற்றி உள்ளது. அதன் மூலம் அதிபர் அனுரா குமார திச நாயகே பல நல்ல திட்டங்களை மக்களுக்காக முன்னெடுப்பார் என நம்புவோம்.

நமது நாட்டில் இரண்டு மாநிலங்களில் தேர்தல் நடந்து, மகாராஷ்டிராவில் பா.ஜ.க. கூட்டணியும், ஜார்க்கண்டில் 'இண்டி' கூட்டணியும் வெற்றி பெற்றுள்ளது. ஜார்க்கண்டில் நவம்பர் 28–ஆம் தேதி ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியின் தலைவர் ஹேமந்த் சோரன் முதல்வராக பதவியேற்க உள்ளார். மகாராஷ்டிராவில் தேவேந்திர ஃபட்னவிஸ் அல்லது ஏக்நாத் ஷிண்டேவா என இன்னும் முடிவாகவில்லை, யார் வந்தாலும், மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என உளமார கோருகிறோம்.

நமது தேசத்தில் வடகிழக்கு மாகாணங்களில் ஒன்றான மணிப்பூரில் அவ்வப்போது கலவரம் வெடித்து வருகின்றது. இம்பால் உள்ளிட்ட பகுதிகளில் 53% மெய்டி இனத்தவரும், மலைப்பிரதேசத்தில் நாகா, கூகி உள்ளிட்ட பழங்குடியினர் 40% ம் வசிக்கின்றனர். மற்ற சமூகத்தினர் 7% உள்ளனர். மெய்டி சமூகத்தினர், அவர்களுக்கு பழங்குடியினர் அந்தஸ்து வழங்குமாறு நீண்ட காலமாக கோரி வருகின்றனர்.

கடந்த ஆண்டு மே மாதத்தில் பழங்குடியினர் ஒற்றுமை பேரணியை மெய்டி சமூகத்தினர் நடத்த அதில் கூகி சமூகத்தினருக்கும், அவர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டு கலவரமாக மாறியது இன்று வரை தொடர்ந்து, மணிப்பூர் மாநிலம் அமைதி இழந்து கலவர பூமியாக மாறியுள்ளது. அந்நிலை மாறி அமைதி ஏற்பட ஆண்டவனைப் பிரார்த்திப்போம்.

மனதுக்கு வேதனை அளித்த சம்பவங்களென கிண்டி அரசு மருத்துவமனை டாக்டர் பாலாஜி ஜகந்நாதன்ஒரு நோயாளியின் மகனால் ஏழு இடங்களில் குத்துப்பட்டு, பிழைத்து வந்துள்ளார். ஸ்டான்லி மனநல டாக்டர் ஹரிஹரன் அவர்களை ஒரு நோயாளி முகத்தில் குத்தி, கீழே தள்ளி உள்ளார். ஒரு ஆசிரியை வகுப்பில் பாடம் எடுத்துக் கொண்டிருக்கும் போதே கொலை செய்யப்பட்டது, மிகுந்த அதிர்ச்சியை அளிக்கிறது. மக்களின் மனம் ஏன் இவ்வளவு வக்கிரமாக செயல்படுகிறது ? இறைவன் தான் மனித குலத்தைக் காக்க வேண்டும்!

அதே சமயம; மனதுக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கும் விதமாக, கலிபோர்னியாவில் நடந்த உலக கோப்பை கேரம் சாம்பியன் ஷிப் போட்டியில், தமிழகத்தின் காசிமா, மித்ரா, நாக ஜோதி மூவரும் மகளிர் தனி நபர், இரட்டையர் மற்றும் குழு பிரிவு என மூன்று பிரிவுகளிலும் சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்துள்ளனர். அவர்களுக்கு நமது மனம் நிறைந்த பாராட்டுக்கள்.

ஐப்பசி பௌர்ணமி அன்னாபிஷேகம் மிகவும் சிறப்பாக பல கோவில்களிலும் கொண்டாடப்பட்டது. கங்கை கொண்ட சோழபுரத்தில் பிரகதீஸ்வரருக்கு அன்னாபிஷேகம் மிகவும் சிறப்பாக நடந்தது. பெசன்ட்நகர் ரத்னகிரீசுவரர் கோவில் முழுதும் காய்கறிகள், பழங்களால் அலங்கரிக்கப்பட்டு கண்ணைக் கவரும் வகையில் இருந்தது. அடுத்த மாதம் அதாவது மார்கழியில் திருவாதிரை, வைகுண்ட ஏகாதசி, சொர்க்கவாசல் திறப்பு சிறப்பாக நடைபெறும். அனைவரும் இறைவனின் ஆசியைப் பெற வாழ்த்துகிறோம்.

வாசகர்களுக்கு 2025 ஆம் ஆண்டின்புத்தாண்டு வாழ்த்திணையும், பொங்கல் வாழ்த்துக்களையும், கார்காத்தார் ஒப்புரவும், சென்னை கார்காத்தார் சங்கமும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி கொள்கிறது.

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் !

மற்றும்

பொங்கல் நல்வாழ்த்துக்கள் !

நன்றி !

வணக்கம்.

"கார்காத்தார் ஒப்புரவு" கட்டண விபரங்கள்

ஆண்டு சந்தா	ரூ.	300/–
ஆயுள் சந்தா (12 ஆண்டுகளுக்கு மட்டும்)	ரூ.	2000/–
கலர் (¼) கால் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்)	ரூ.	1500/–
கலர் (½) அரைப்பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்)	ரூ.	3000/–
மணமகன் மணமகள் தேவை கருப்பு வெள்ளை (மாதம் ஒன்றுக்கு)	ரூ.	500/–
கருப்பு வெள்ளை (¼) கால் பக்கம்	ரூ.	750/–
கருப்பு வெள்ளை (½) அரைப்பக்கம்	ரூ.	1500/–
கருப்பு வெள்ளை முழுப்பக்கம்	ரூ.	3000/–

ஜனவரி 2025 முதல்

கலர் முழு பக்கம்	**ரூ.**	**7000/-**
முன் அட்டை உட்புறம்	**ரூ.**	**8000/-**
பின் அட்டை உட்புறம்	**ரூ.**	**8000/-**
பின் அட்டை வெளிப்புறம்	**ரூ.**	**10,000/-**

மாதா, பிதா, கூகுள், தெய்வம் !

Dr. D. Kalyanakumar,
Trichy - 18.

நம் கலாச்சாரத்தில் எப்போதும் மாதா, பிதா, குரு, தெய்வம் என்னும் முறைப்படியே வணங்கி வந்திருக்கிறோம். எதற்காக இப்படி வரிசைப்படுத்தியுள்ளோம்? மனிதன் தன்னுடைய வாழ்க்கையை படிப்படியாக புரிந்து கொள்வதற்காக இப்படி வரிசைப்படுத்தி இருக்கிறார்கள். இந்த வரிசை என்ன சொல்கிறதென்றால், நமக்கு முதலில் உயர்ந்தது மாதா, அதற்கடுத்து பிதா, அவர் பின் குரு, கடைசியாக தெய்வம் என்கிறது. இந்த வரிசையை நிர்ணயித்தது அவர் உயர்ந்தவர், இவர் தாழ்ந்தவர் என்று கணக்கு போடுவதற்காக அல்ல. மாறாக நாம் இந்த உலகை உணருவது இந்த வரிசையில் தான் நிகழ்கிறது என்பதை சொல்வதற்காக நாம் பிறந்தவுடன் அன்னையைப் பார்ப்போம், பின்னர் தந்தை யாரென்று தெரிந்து கொள்வோம். ஒரு வேளை நமக்கு அதிர்ஷ்டம் இருந்தால் குருவை உணர்வோம். இதற்கு மேலும் நமக்கு அதிர்ஷ்டம் அடித்தால் தெய்வத்தை உணர முடியும். மாதா, பிதா என்ற இரண்டையும் தாண்டி வளர்ந்தால் தான் குரு என்பவரை உணர்ந்து கொள்ள முடியும். அவரையும் தாண்டும் போது தெய்வீகம் மலரும் அதனால் தான் குறிப்பால் இந்த முறையை சொல்லிவிட்டு சென்றிருக்கிறார்கள்.

மாதா எல்லாவற்றுக்கும் அடிப்படையானவள் அவள் இல்லையென்றால் நாம் இந்த மண்ணிற்கு வந்திருக்க முடியாது எனவே இந்த மாதா பிதா இந்த இருவரும்நாம்இந்தமண்ணில்உயிர் வாழ்ந்திருப்பதற்கு மூலகாரணமாய் இருப்பவர்கள். ஆனால் நாம் இருக்கும் நிலை தாண்டி இன்னொரு பரிமாணத்திற்கு போக வேண்டும் என்றால் நமக்கு குரு மற்றும் தெய்வத்தின் துணை வேண்டியிருக்கிறது. மனிதனுடைய இயல்பான தன்மை எப்படி இருக்கிறதென்றால் அவன் தான் எந்த நிலையில் இருக்கிறானோ அந்த நிலையை தாண்டி வளர வேண்டும் என்னும் ஆர்வம் இயல்பிலேயே அவனுள் இருக்கிறது. அவன் இருக்கும் நிலையை தாண்டி ஒரு படியாவது எடுத்து வைக்கவில்லை என்றால், நான் எதற்காக பிறந்தேன் என்னும் கேள்வி அவனுள் எழுகிறது. அவன் படிப்படியாக தன் நிலை தாண்டி வளர்ந்தான் என்றால் தன் மாதாவிற்கும் பிதாவிற்கும் என்றென்றும் நன்றியுடன் திகழ்வான். அதை விடுத்து தான் இருக்கும் நிலையிலேயே சிக்கி விட்டான் என்றால் எதற்குத்தான் என் பெற்றோர் என்னை பெற்றெடுத்தார்களோ என்னும் விரக்தியிலேயே வாழ்வான்.

பணத்தை இழந்தால் எதையுமே இழக்கவில்லை என்று அர்த்தம் ஆரோக்கியத்தை இழந்தால் எதையோ இழந்தாய் என்று அர்த்தம். ஆனால் ஒழுக்கத்தை இழந்தால் எல்லாவற்றையும் இழந்து விட்டாய் என்று அர்த்தம் என்றார் மகாத்மா காந்தி. இது போன்ற ஒழுக்கத்தை கல்வியோடு சேர்த்து கற்பிக்கும் ஆசிரியர்கள் சமூகத்தில் மதிக்கப்பட வேண்டியவர்கள். மாதா பிதா குரு தெய்வம் என்று இறைவனுக்கு முன்னதாக ஆசிரியரை குறிப்பிடுவதே அவர்கள் சமூகத்தில் வணங்கப்பட வேண்டியவர்கள் என்பதற்காக தான். கல்வி கற்கும் இடம் கோயிலாகவும் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள் தெய்வமாகவும் போற்றப்பட வேண்டும். ஆனால் ஒரு சில இடங்களில் நடக்கும் பெரும் தவறுகளால் ஒட்டுமொத்த ஆசிரியர் சமுதாயத்திற்கும் தலைக்குனிவு தான். உலக அளவிலும் கூட கல்வி துறையும் மருத்துவத் துறையும் முக்கியத்துவம் வாய்ந்த துறைகள் தான் இவ்விரு துறைகளிலும் உள்ளோர் கடவுளுக்கு நிகராக பார்க்கப்பட வேண்டியவர்கள்.

மனித எண்ணங்கள் யாராலும் எளிதில் புரிந்து கொள்ள முடியாத சிக்கலான குழப்பமான சமாச்சாரங்கள். நம் எண்ணங்கள் பல நமக்கே புரிவதில்லை. நமக்குள் தோன்றும் எண்ணங்களை சமயங்களில் நாமே அறிவதில்லை. அப்படியே அறிந்தாலும் அதில் பலவற்றை மற்றவரிடம் சொல்வதுமில்லை. மனிதர்களின் ஆழ்மனதை, அதிலுள்ள எண்ணங்களை, வேறு யாரிடமும் கூறாத ரகசியங்களை, அவர்களிடமிருந்தே கண்டெடுக்கலாம் என்று கிளம்பியிருக்கிறார். 'செத் ஸ்டீஃபன்ஸ்–டேவிடோவிஸ் கடந்த ஏழெட்டு வருடங்களாக இதைத்தான் முழுநேர தொழிலாகக் கொண்டிருக்கிறார். இவர் ஒரு இன்டர்நெட் டேட்டா எக்ஸ்பர்ட் தினம் இன்டர்நெட்டில் பயணிக்கும் மக்களின் டிஜிட்டல் பாதையை கண்காணிப்பவர் முக்கியமாக கூகுளில் மக்கள் தேடும் விஷயங்களை பிரித்து மேய்ந்து ஆராய்பவர்.

அருகில் யாரும் இல்லாத தனிமையில் கம்ப்யூட்டர் கீபோரட்டில் நம் சந்தேகங்களை, ஆசைகளை, கனவுகளை, வெறுப்புகளை, குழப்பங்களை, பயங்களை கேள்விகளாகக் கேட்கிறோம். நம் மனதின் கேள்விகளை கூகுளின் வெள்ளை ஸ்க்ரீனின் செவ்வக வடிவ பாக்ஸில் உள்ளீடு செய்யும் போது நம் மனதை படம்பிடித்துக் காட்டுகிறோம் என்பதை நாம் உணர்வதில்லை.

உடம்பு இளைப்பது எப்படி; மகனின் வருங்காலம்; காதல் தோல்வியிலிருந்து மீள்வது எப்படி; மனைவி நடத்தையை கண்காணிப்பது எப்படி என்று நம் குழப்பம் முதல் குமுறல்கள் வரை சப்பை கேள்விகள் முதல் சம்போக சமாச்சாரம் வரை கூகுளில் நாம் தேடும் விஷயங்கள் கூட்டி கழித்து அதிலிருந்து மனிதர்கள் மன ஓட்டத்தை ஆய்வு செய்வது தான் ஸ்டீஃபன்ஸின் வேலை கூகுளில் நாம் கேட்கும் கேள்விகள் என்பதை நினைவில் கொள்க நான் மட்டும் தானே கேட்கிறேன் என்றும் நினைக்காதீர்கள். உங்களைப் போல் நான். அவர், அவள், அவர்கள் என்று தினம் உலகெங்கிலும் கோடிக்கணக்கானவர்கள் கூகுளில் தங்கள் மனதை திறந்து கேள்விகளை கொட்டுகிறார்கள்.

அனுதினம் நாம் இன்டர்நெட்டில் பதியச் செய்வது சுமார் 2.5 மில்லியன் ட்ரில்லியன் டேட்டா இதில் எத்தனை சைபர்கள் என்பதை சைபர் க்ரைம் நிபுணரிடம் தான் கேட்கவேண்டும் அத்தனை டேட்டாவும் நம்மை அறிந்துகொள்ள நம் எண்ணங்களை புரிந்துகொள்ள நாமே விரும்பித் தரும் துப்புக்கள் அந்த துப்புகளிலிருந்து நம்மை நாம் அறிந்ததை விட இன்னமும் அறிந்துகொள்ள முடியும் என்கிறார் ஸ்டீஃபன்ஸ். இவர் எழுதியிருக்கும் புத்தகம் 'Everybody Lies' யாரிடமும் சொல்லாத ஆனால் மனிதர்களின் தேடல்கள் மூலமே மனித மனதை ஆய்வு செய்வதைப் பற்றிய அட்டகாசமான புத்தகம். தகவல் தேடுபவர்களின் தகவலே ஒரு தகவல் என்கிறார் ஸ்டீஃபன்ஸ். நாம் உலகை புரிந்துகொள்ள கூகுள் தொடங்கப்பட்டாலும் நம்மை புரிந்துகொள்ள கூகுள் டேட்டா பயன்படுகிறது என்பதுதான் அதில் விசேஷம். யோசித்து பாருங்கள். கூகுளில் தேடும் கேள்விகள் மற்றவரிடம் கேட்காத கேள்விகளாக இருக்கலாம். அக்கேள்விகளை கூட்டி கழித்து பெருக்கி அதில் டேட்டா அறிவியலை சேர்த்து ஆய்வு செய்தால் மனிதர்களின் நடத்தை முதல் அவர்கள் ஆசைகள் வரை பயங்கள் முதல் அவர்கள் கனவுகள் வரை தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும் அதைத்தான் செய்கிறார் ஸ்டீஃபன்ஸ்.

கம்ப்யூட்டரின் தனிமையில் நம் சுய ரூபத்தை நம்முள் இருக்கும் அந்த இருட்டு மனிதனை வெளிப்படுத்துகிறோம். நம் எண்ணங்களை எழுதுகிறோம். நம் பாரத்தை இறக்குகிறோம். கூகுளில் உலக மக்கள் தேடும் தகவல்களிலிருந்து அவர்களைப் பற்றி நிறைய தெரிந்துகொள்ளலாம் என்கிறார் ஸ்டீஃபன்ஸ். தேடும் விஷயங்களிலிருந்து அவர்களுக்கு என்ன வேண்டும் என்ன செய்கிறார்கள் என்பதை அறிவதோடு உண்மையிலேயே அவர்கள் யார் என்பதை புரிந்துகொள்ள முடிகிறது என்கிறார். பொதுவாகவே டாக்டர்களிடம், நண்பர்களிடம் சமயங்களில் நம்மிடமே பொய் சொல்கிறோம் ஆனால் கூகுளில் நாம் கூறுவதெல்லாம் உண்மை; கேட்பதெல்லாம் சத்தியம்; தேடுவதெல்லாம் நிஜம் சமூக ஆய்வுகளில் ஆய்வாளர்கள் கேள்விகளுக்கு உண்மையான பதில் கூற தயங்குகிறோம். ஆனால் கூகுளில் யாருக்கு தெரியப்போகிறதென்று மற்றவரிடம் கேட்கத் தயங்கும் விஷயங்களை, கேள்விகளை கூட பயமின்றி கேட்கிறோம். கூகுளில் ஆயிரக்கணக்கான தேடல்கள் பதிவதை விட அதிலிருந்து ஆழமான உண்மைகள் தெரிவது தான் கூகுள் டேட்டாவின் மகாத்மியம்!

ஆழ்மனது பற்றிய தகவல் சேகரிப்பில் கூகுள் தேடல்களிலிருந்து பெறப்படும் தகவல் போல் இதுவரை எந்த ஆய்வுகளிலிருந்தும் யாரும் பெற்றதில்லை என்று அடித்துக் கூறுகிறார் ஸ்டீஃபன்ஸ் அய்யோ கூகுளில் நான் தேடுவதை யாரோ பார்க்கிறார்களா என்று பயப்படாதீர்கள். நீங்கள் தேடுவதை யாரும் உங்கள் ஃபோட்டோ ஆதார் கார்ட்டை வைத்துக்கொண்டு கண்காணிப்பதுமில்லை. தாங்கள் கண்டதை கர்ம சிரத்தையாய் உங்கள் வீட்டு கதவை தட்டி உங்கள் மனைவியிடம் சொல்லப்போவதுமில்லை. நம் உள்ளீடுகளை மொத்தமாய் கூட்டி அந்த மொத்தத்தை கணக்கிட்டு ஆய்வு செய்கிறார்கள். உங்கள் தேடலை உங்கள் பெயர் கொண்டு யாரும் பார்ப்பதில்லை பயப்படாமல் கூகுளில் தேடுங்கள் நம் கேள்விகளுக்கு சந்தேகங்களுக்கு கூகுளை விட்டால் வேறு நாதி ஏது.

மொத்தகூகுள்டேட்டாவைஅலசஒருஆராய்ச்சி படையே தேவைப்படுகிறது என்கிறார் ஸ்டீஃபன்ஸ் இதுவரை மனிதர்களை புரிந்துகொண்டதை விட இன்னமும் புரிந்துகொள்ள முடியும். புரிந்துகொள்ளப் போகிறோம் என்கிறார். சமூக அறிவியலுக்கு புதிய பாதை அமைத்துத் தந்திருக்கிறார் ஸ்டீஃபன்ஸ் புத்தகத்திற்கு முன்னுரை எழுதியிருக்கும் கனடா நாட்டு அறிவாற்றல் உளவியலாளர் (Cognitive Paychologist) ஸ்டீவன் பிங்கர் தண்ணீரில் நாம் கண்டதை விட இன்னமும் உண்டு என்று காட்டியது மைக்ராஸ்கோப் அண்டசாராசரத்தில் நாம் பார்த்ததை விடஇன்னமும்உண்டுஎன்றுகாட்டியதுடெலெஸ்கோப் மனித சமுதாயம் பற்றி நாம் தெரிந்துகொண்டதை விட இன்னமும் உண்டு என்று காட்டப் போகிறது கூகுளும் டிஜிட்டல் டேட்டாவும்.

மாறி வரும் சூழலில் இனி மாதா, பிதா, கூகுள், தெய்வம் என்றாகிவிட்டதே!

குடும்ப அமைதிக்கான வழி !

'மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம். அது போல' கணவன் அமைவதெல்லாம் என்பதும் இறைவன் கொடுத்த வரம் தான். குடும்பத்தில் தம்பதியினருக்கிடையே புரிதல் தன்மை மிக மிக அவசியம். ஏதோ ஒரு காரணத்தினால் பிரச்சனை வரும் போது, மாறி, மாறி இவருவரும் விட்டுக்கொடுக்காமல் பேசிக் கொண்டே போனால் பிரச்சனைக்கு தீர்வு கிடையாது. தன் கூற்றில் தவறே இல்லை என்று இருந்தாலும், பிரச்சனைக்கான தீர்வு ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்ற நிலையில் யாராவது ஒருவர் இறங்கி வந்து பேசுவதை நிறுத்தி அமைதியாகி 'சமாதான கொடியை வீசிவிட்டால் வாக்கு வாதம் தொடராமல் முற்றுப்பெறும். நேரம் ஆக, ஆக அல்லது கால போக்கில் உண்மை நிலவரம் புரிந்து உணரும் தன்மை வந்து விடும். அதனால் விட்டுக் கொடுப்பவர் கெட்டுப் போவதில்லை என்பதை அறியுங்கள். இது அனுபவம் கற்றுத்தந்த பாடம்.

உங்கள் குடும்பத்தில் அமைதி இருக்கிறதா? பிணக்கு இருக்கிறதா? என்று ஆராயுங்கள். பெரும்பாலானோர் வாழ்க்கையில் பிணக்குத்தான் நிறைய இருக்கிறது. பிணக்கானது சிலர் வாழ்க்கையில் சிறியதாய் இருக்கலாம். வேறு சிலர் வாழ்க்கையில் பெரியதாய் இருக்கலாம். பிணக்கில்லாத வாழ்க்கையை யார் அமைத்து அதன்படி வாழ்கிறாரோ அவர்கள் தான் ஞானி. ஒருவர் பெற்ற ஞானத்தை பரிசோதிக்கும் கருவி ஒன்று இருக்குமானால் அது அவரது குடும்ப அமைதிதான்.

கடலில் மேற்பகுதி இயங்கும் போது அடிப்பகுதி இயங்காமல் இருக்கிறதல்லவா? அது போல ஒரு நாள் சமைக்க முடியாது என்று மனைவி படுத்துவிட்டால், இவன் தானே சமையல் செய்வது என்று சந்தோஷமாக ஆரம்பிப்பான். அதைப் பார்த்து அவளே படுக்கையை விட்டு எழுந்து வந்து சமையல் செய்வதில் சேர்ந்து கொள்வாள். நிம்மதி வந்து விடும். அடம் பிடிக்கின்ற பிள்ளையை அடிக்காமல் அரவணைத்து ஆசை வார்த்தை பேசுங்கள். துரோகம் செய்கின்ற நண்பர்களை உறவுகளை மன்னித்து, விட்டு விலகி செல்லுங்கள். கூலியை குறைத்துக் கொடுக்கும் முதலாளிக்கு 'கடவுள் கூலி கொடுப்பார்' என்று நினைத்து அமைதியடையுங்கள். நோய் வரும் போது பெரியதாக துக்கப்படாமல் 'இது கர்ம வினை' என்று உங்களை நீங்களே ஆறுதல்படுத்திக் கொள்ளுங்கள். கடன் வரும் போது அமைதியாக அதனைச் சமாளியுங்கள்.

சேவை என்று தெரியாமலேயே நாம் அனைவரும் நமது குடும்பத்துக்காக சேவை செய்கிறோம். அது மட்டுமல்ல, நமக்கு சம்பந்தமில்லாத குடும்பத்துக்கும், ஊருக்கும், நாட்டுக்கும், சர்வ தேசத்துக்கும் நம்மால் முடிந்த சேவை செய்ய வேண்டும். நமக்கு எத்தனையோ கஷ்டங்கள், வேலையில் தொந்தரவு, சாப்பாட்டுக்கு கஷ்டம், வீட்டுக் கவலை இப்படி எத்தனையோ இருக்கின்றன. நமக்கிருக்கும் கஷ்டத்தில் சமூக சேவை ஒரு கேடா என்று எண்ணாமல், மற்றவர்களுக்கு சேவை செய்வதாலேயே சொந்தக் கஷ்டத்தை மறைக்க, மறக்க வழி உண்டாகும். அதோடு கூட அயலார் குழந்தைக்குப் பாலூட்டினால் தன் குழந்தை தானே வளரும் என்பதின்படி நமக்கு பரோபகாரத்தின் பலனாய் நிச்சயமாக நம்மை நம் சொந்தக் கஷ்டத்திலிருந்து பகவான் கை தூக்கி விடுவான். ஆனால் லாப நஷ்டக் கணக்கு பார்க்காமல் எந்தவித எதிர்பார்ப்புமில்லாமல் பிறர் கஷ்டத்தை தீர்க்க நம்மாலானதை செய்ய வேண்டும். அதனால் பிறத்தியார் பெறுகிற பலன் ஒரு பக்கம் இருந்தாலும், நமக்கே ஒரு சித்த சுத்தியும், ஆத்ம திருப்தியும், சந்தோஷமும் ஏற்பட்டு அந்த வழியில் மேலும், மேலும் தொடருவோம். மனிதர்களுக்கு மட்டுமின்றி ஆடு, மாடு போன்ற சீவன்களுக்கும் நாம் சேவை செய்ய வேண்டும்.

யாகம், தர்ப்பணம், திவசம் போன்ற செயல்கள் இந்த உலகத்திலிருப்பவர்களுக்கு மட்டுமின்றி, மற்ற உலகத்திலிருப்பவர்களுக்கும் நம் சேவை விஸ்தாரமாகின்றன என்ற மன நிறைவோடு செய்ய வேண்டும். நம்மைப் போல சேவை செய்ய விருப்பம் உள்ளவர்களை சேர்த்துக்கொண்டு ஒரு சங்கமாக இணைந்து சேவை செய்வதும் மனதிற்கு நிறைவைத் தரும். பலர் கூடிச் செய்யும் போது நிறையப் பணி செய்ய முடியும். இத்தகைய சங்கங்கள் கருத்து வேறுபாட்டால் உடையாமல் காக்கப்பட வேண்டும். உபகாரம் செய்பவர்களுக்கு மனதில் ஊக்கமும், எழுச்சியும் அத்தியாவசியம். அத்தோடு மான அவமானத்தை பொருட்படுத்தாத குணம் வேண்டும். நாம் நம்முடைய பொன்னான நேரத்தை வீணாக செலவு செய்யாமல் பிறருக்கு சேவை செய்வதில் செலவிட்டால் மனதிற்கு அமைதியும், நிம்மதியும் கிடைக்க பெறுவோம்.

இல்லற வாழ்க்கையில் நிம்மதியாக வாழ வேண்டும். பண்பான மனைவி கிடைத்தும் அல்லது பண்பான கணவர் கிடைத்தும், தங்களின் கோபத்தால் வாழ்க்கையை வீணாக்கிக் கொள்ளக் கூடாது. தகராறு இல்லாத குடும்பம் இல்லை. வீட்டுக்கு வீடு வாசற்படி. எதையும் அடித்துப் பேசக்கூடாது. நீங்கள் வாங்கி வந்த காய்கறி மகா மட்டம் என்று மனைவி சொன்னால் 'எந்த நாய் சொன்னது' என்று கேட்காமல் 'தப்பாத்தான் வாங்கி வந்து விட்டேன்' சரி இனி மேல் வாங்கும் போது பார்த்து வாங்கி வருகிறேன்; இதை வைத்து சமைத்து விடு என்று தவறை ஒப்புக் கொண்டுவிட்டால் பிரச்சனை அதோடு முடிந்து விடும். அவ்வாறே 'சாப்பாடு மகாமட்டம்' என்று கணவன் சொன்னால், எனக்குத் தெரிந்தது இவ்வளவுதான், வேண்டுமானால் உங்க அம்மா வீட்டில் போய் சாப்பிடுங்க என்று சொல்லாமல் இன்றைக்கு என்னமோ உடம்புக்கு முடியாமல் சரியாக சமையல் அமையவில்லை. நாளைக்கு

நன்றாக செய்கிறேன், இப்போது கொஞ்சம் அட்ஜஸ் பண்ணி சாப்பிடுங்க என்று கணவன் சமாதானம் அடையும் வகையில் பதில் சொல்ல வேண்டும். இப்படி ஒருவருக்கொருவர் புரிந்துக்கொண்டு சமாதான புறாவை பறக்க விட்டால் குடும்பத்தில் அமைதிக்கும், நிம்மதிக்கும் பஞ்சமில்லை.

பண்டிகைக் காலங்கள் அல்லது வீட்டில் ஒரு விசேஷம் என வரும் போது, அது சம்பந்தமாக இருவருக்கிடையே வாக்குவாதம் எழும் நிலையில், ஒருவர் அனுசரித்து இறங்கி போனால் உலகத்தையே தனக்குள் அடக்கிக் கொள்ள முடியும். இரண்டு கைகள் தட்டினால் தான் சத்தம் வரும். நாம் மனது வைத்தால் பிரச்சனை தீர்ந்து அமைதி பெறலாம். 'பெண்டாட்டித் தானே சொல்லிவிட்டுப் போகிறாள் என்று கணவனும், 'கணவன் தானே பேசட்டும்' என்று மனைவியும் விட்டு கொடுத்து இறங்கி போனால் உள்ளம் பதறாது, உடல் வலிக்காது, ஊர்சிரிக்காது, எல்லாம் நல்ல நிகழ்வுகளுக்கும் நீங்களே பொறுப்பு.

நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி
நினைத்தால் எல்லாம் உனக்குள்ளே !

இருளும் ஒளியும் மாறி மாறி வந்து கொண்டே இருப்பது போல கணவன், மனைவிக்குள் சண்டையும், சமாதானமும் வந்து கொண்டேதான் இருக்கும். எனவே நம் வாழ்நாளில் இருளைக் கண்டு மருளுவதும், ஒளியைக் கண்டு களிப்பதும் எதற்காக? இவை இரண்டுமே, அதாவது இன்பமும், துன்பமும் வாழ்க்கை என்ற நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்னும் அழகான உண்மை உணரப்படும்போது, நமக்குள் அமைதியும், நிம்மதியும் ஏற்படுவது சாத்தியமே! நாம் வாழும் காலத்தில் அமைதி வேண்டுமானால் உடல் ஆரோக்கியமும், உள்ளத்தில் மகிழ்ச்சியும் நிறைந்தவாறு வாழவேண்டும்.

நாம் குழந்தைகளையோ அல்லது நம்மை விட வயதில் சிறியவர்களையோ வாழ்த்தும் போது 'நோய் நொடி இல்லாமல் நீண்ட ஆயுளோடு வாழ வேண்டும்' என வாழ்த்துகிறோம். நாம் இறைவனிடம் பிராத்தனை செய்யும் போது இறைவா! எனக்கு நோய் நொடி இல்லாத வாழ்க்கை கொடு. வயதான காலத்தில் என்னை படுக்கையில் போட்டு விடாதே! என்னால் யாருக்கும் எந்த தொந்தரவும் இல்லாமல், மரண வலி தெரியாமல், என்னை உன்னோடு அழைத்துக்கொள் என்று மட்டுமே, வேண்டுதல் வைக்க வேண்டும். அந்த வகையில் நாம் ஆராக்கியமாக உடல் நலத்தோடு வாழ சில வழிமுறைகள்; நம்மிடம் காசு, பணம், சொத்து என்று எல்லாம் இருப்பதை விட, உடல் ஆரோக்கியத்தோடு வாழ்நாள் அமைந்தால் அதைவிட பெரிய சொத்து எதுவுமில்லை. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற பழமொழி உணர்த்தும் உண்மை இதுவே!

நோய் இல்லாமலிருக்க, நாம் அன்றாடம் எடுத்துக்கொள்ளும் சாப்பாட்டில் தினம் ஒரு கீரை சேர்த்துக் கொள்ள வேண்டும்.பகல் மதிய உணவில் மட்டுமேகீரைஉட்கொள்ளவேண்டும்.மழைக்காலத்தில் மதிய உணவில் 'தூதுவளை' ரசம் வைத்து சாப்பிட வேண்டும். ஜலதோஷம் பிடிக்காது. வயிற்றுப் புண் வருவதை தடுக்கும். பொன்னாங்கண்ணிக் கீரை சாப்பிடுவதால் கண் பார்வை கூர்மையாக இருக்கும். சர்க்கரை வியாதிக்கு முருங்கைக் கீரை கண்கண்ட மருந்து. அது பசியையும் தாங்கும், பஞ்சத்தையும் தாங்கும். இந்த மரம் ஏழைக்கு இறைவன் அளித்த வரம். ஒரு நாடோடிப் பாடல்....

மந்தையிலே மாடு மேய்க்கும்
மச்சானுக்கு மத்தியானம்
மொந்தையிலே சோற்றைப் போட்டு
முருங்கைக் கீரையை வதக்கி
கொட்டி வச்சாளே..... என்று ஒரு பாடல் உண்டு.

கருவுற்றப் பெண்கள் பசலைக் கீரையைத் தொடர்ந்து ஆறு மாத காலம் வரை முறையாகச் சாப்பிட்டு வந்தால் பிரசவம் சுலபமாக இருக்கும். ஜெர்மானிய தலைவர் ஹிட்லர் ''சைவ உணவைப் போன்று உடலுக்கு வலிமையும் ஆரோக்கியமும் தரும் சக்தி வேறு எதிலும் இல்லை'' என்று சொல்கிறார். நாம் உண்ணும் உணவில் அதிகம் வெங்காயம் சேர்த்துக்கொள்வதால் இதயத்திற்கு நன்மை உண்டு.

அடுத்து, மனிதன் தூக்கத்தில் அமைதியையும், நிம்மதியும் அடைகிறான்.

தூக்கமும் கண்களை தழுவட்டுமே
அமைதியும் நெஞ்சினில் நிலவட்டுமே....

தூங்குவது போலும் சாக்காடு; தூங்கி
விழிப்பது போலும் பிறப்பு.... என்றார் வள்ளுவர்.

தூக்கத்தில் கிடைக்கும் மயான அமைதி வேறு எதிலும் கிடைப்பதில்லை. நோயாளிகளை பார்த்து டாக்டர் தூக்கம் வருகிறதா? பசி எடுக்கிறதா? என்று தான் கேட்பார். உறக்கம் கெட்டவன் வாழ்க்கை நரகம். வாழ்நாளின் மூன்றில் ஒரு பகுதி தூக்கமாக இருக்க வேண்டுமாம். நடப்பது நடக்கட்டும், நாளை பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்து கண்ணை மூடினால் நிம்மதியான தூக்கம் வரும்.

காலையில் விழிக்கும் பொழுது இரண்டு உள்ளங்கைகளையும் நன்றாகச் சூடேற்றி முகத்தில் தேய்த்து விட்டு, அந்தக் கைகளைப் பாருங்கள். அதுவே ஒரு சூரிய நமஸ்காரம். காலை 4.30 மணி முதல் 6.00 மணி வரை பிரம்ம முகூர்த்தம் என்பர். இந்த நேரத்தில் பல் துலக்கி, முகம் கழுவிய பின், சுவாமி படத்திற்கு விளக்கேற்றி, தோட்டத்தின் கதவை திறந்து மூடிய பின், மண்ணால் ஆன அகல் விளக்கேற்றி தெரு மாடத்தில் வைக்க வேண்டும் சூரிய உதயத்திற்குள் அதாவது 6.00 மணிக்குள் எரியும் விளக்கை வீட்டிற்குள் எடுத்து வந்து குளிர செய்ய வேண்டும்.

''நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி
நினைத்தால் எல்லாம் உனக்குள்ளே!''

– இரா. திலகம், வையூர். 9789412635

மார்கழி மாதத்தில் கோலம் போடுவதால் இவ்வளவு நன்மைகள் உண்டா?!

மார்கழி, மாதம் பிறக்கப் போகிறது. வாசலில் விதவிதமான கோலங்கள் போட்டு, அழகு கூட்டலாமே? மார்கழி மாதத்தில் அதிகாலை வேளையில் கோலம் போடுவதால் பலவிதமான நன்மைகள் உள்ளன. அதைப் பற்றி பார்ப்போம்.

நமது வழிபாடுகள், அனைத்துமே இயற்கையுடன் ஒத்துப்போகும் வகையிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது. மார்கழி மாதத்தை தனுர் மாதம் என்று கூறுவார்கள். இந்த மாதத்தில் சூரியன் குருவின் வீட்டில் (தனுசு) இருப்பார். இதன் காரணமாக சூரியக் கதிர்கள் பரவுவதற்கு முன் ஒரு தனி சக்தி உண்டாகும்.

இதன் காரணமாகவே அதிகாலையில் எழுந்து கோலமிட வேண்டும். அப்போது பெய்யும் பனிப்பொழிவானது நள்ளிரவில் பெய்யும் பனியை விட மென்மையானதாக, தாக்கம் குறைந்ததாக, விஷத்தன்மையற்றதாக இருக்கும்.

சூரியக்கதிர் பரவுவதற்கு முன்னதாக வாசல் தெளித்து கோலமிடும் போது மார்கழி மாத தட்பவெப்ப நிலைக்கு உடல் ஒத்துப்போகும். பெரிய நோய்கள் ஏற்படாமல் தடுத்துக் கொள்ள முடியும். மாறாக பனிப்பொழிவுக்கு பயந்து வீட்டிற்குள்ளேயே முடங்கிக் கிடப்பதால் உடல் நலம் மேம்படாது.

மார்கழிப் பனியில் மண்ணும் குளிரும், தை பனியில் தரையும் குளிரும் என முன்னோர்கள் கூறியுள்ளனர். எனவே, வாசலில் கோலமிட்டு சாணத்தில் பூசணிப்பூவை வைப்பதன் மூலம் பனியால் ஏற்படும் நோய்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும். எனவே, இரவில் கோலமிடுவதைத் தவிர்க்க வேண்டும். அதிகாலையில் ஓசோன் வாயுக்கள் அதிகம் வெளியேறும். அந்த நேரத்தில் கோலமிடுவதால், சுவாசப் பிரச்சனைகள் தீரும். புத்துணர்ச்சியை ஏற்படுத்தும்.

கோலம், வாசலுக்கு மட்டும் அல்ல, நமக்கும், அழகை தருகிறது. எப்படியெனில், விரல்களால், கோல மாவை எடுத்து, வளைத்து வளைத்து போடும் போது, அது, நம் கை விரல்களுக்கு, நல்ல பயிற்சியாக அமைகிறது.

குனிந்து, நிமிர்ந்து கோலம் போடுவதால், உடலுக்கு யோகப் பயிற்சி செய்த பலன் கிடைக்கிறது. தினசரி சூழலால், சஞ்சலமாகும் மனமும் கூட, கோலம் போடும் போது ஒரு முகப்படும். கோலம், நம் கற்பனை திறனையும், நினைவாற்றலையும் வளர்க்கிறது.

அழகாக கோலம் போடுபவரின் கையெழுத்து, பார்க்க தெளிவாக, அழகாக இருக்கும். கோலம், தீய மற்றும் துஷ்ட சக்திகளை, வீட்டிற்குள் வர விடாமல் தடுக்கும். லட்சுமி தேவியை, நம் வீட்டிற்கு வரவழைக்கும், கோலம் போடுவதால், வீடு மங்கலகரமாக காட்சி அளிக்கும். தினமும் கோலம் போடும் போது, வீட்டில் மங்கல நிகழ்ச்சிக்கு குறைவே ஏற்படாது.

தமிழக பெண்களுக்கு கூடுதல் பெருமை சேர்ப்பதில் கோலம் ஒரு பங்கு வகிக்கிறது. பண்டைய காலத்தில் இருந்தே கோலம் போடும் பழக்கம் இருந்துள்ளது. பெண்கள் வாசலில் கோலம் போடுவதை வைத்தே அவர்களின் மனவலிமை, சிக்கல்களை தீர்ப்பதில் வல்லமை, குடும்ப நிர்வாகத்தில் சாமர்த்தியம் போன்றவைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை பெண்கள் வீட்டு வாசலை சுத்தப்படுத்தி தண்ணீர் தெளித்து, கோலங்கள் போடுவர். பண்டிகை நாட்களில் பல மணி நேரம் எடுத்து அழகாக வண்ணக் கோலங்கள் போடுவர். ஆனால் இக்காலத்தில் கோலம் போடுவதை பெண்கள் சிறிது சிறிதாக மறந்து வருகின்றனர். ரெடிமேட் கோலம் அச்சுகளை வாங்கி பண்டிகை காலங்களில் மட்டும் கோலம் போடுகின்றனர். நமது பாரம்பரிய கலையான கோலம் போடும் பழக்கத்தை விடாமல் கடைபிடிக்க வேண்டும்.

பண்டிகைகள், திருமண விழாக்கள், கோயில் திருவிழா போன்ற எந்த ஒரு விசேஷம் என்றாலும் அவற்றில் வாழைமரம், மாவிலை, கோலம் ஆகிய மூன்றும் நிச்சயம் இருக்கும். அதிலும் முக்கியமாக பெண்கள் கோலம் போடும் கலையே தனி.

ஆனால் சென்னை போன்ற பெருநகரங்களில் கோலம் போடுவது என்பதே அரிதாகிவிட்டது. கோலம் போடுவதற்கு என்று ஒரு ஆள்வைத்துக் கொள்கிறார்கள். ஆனால் கோலம் போடுவதால் ஏற்படும் நன்மைகளைப் பற்றிப் பலர் அறிவதில்லை. அறிவு விசாலம், நாகரிக விருத்தி, சோம்பலின்மை, மறதியின்மை, சூட்சமபுத்தி, ஊக்கமுடைமை, மனச்சோர்வின்மை போன்ற மனம் தொடர்பான செயல்பாடுகள் கோலம் போடுவதில் அடங்கியுள்ளன.

கோலத்தில் புள்ளி, கோடு போன்றவை போடும் போது சிறு தவறு ஏற்படும் போது காலினால் அழிக்க கூடாது. கையால் அழிக்க வேண்டும். அதே போல் அமர்ந்தவாறும் கோலம் போடுதல் கூடாது. வேலையாட்களை வைத்தும் கோலம் போடுதல் கூடாது.

சுபகாரியங்களின் போது இரட்டைக்கோடு வருவது போலவும், அசுபகாரியங்களின் போது ஒற்றைக் கோடு வருவது போலவும் போட வேண்டும்.

நவ கிரகங்களுக்கும் தனித்தனி கோலம் உள்ளது. அதனால் தான் நாம் வீட்டில் ஒரே மாதிரியாக கோலம் போடாமல் வெவ்வேறு வடிவில் போட்டுக் கொண்டிருக்கிறோம். கோலத்தைப் பார்த்த உடன் தெய்வங்கள், தேவதைகள் நமது வீட்டின் உள்ளே வருவார்கள். வீட்டில் கோலம் போட்டிருந்தால் ஆன்மாவாக இருக்கும் நம் முன்னோர்கள் வீட்டிற்கு வர முடியாது. நாம் அமாவாசை தினத்தில் முன்னோர்களை வழிபடும் போது அவர்கள் வீட்டில் வர முடியாத வண்ணம் கோலம் தடுக்கும் என்பதால் தான் அமாவாசை தினத்தில் கோலம் போடக்கூடாது என சொல்லியுள்ளனர். இப்படி மற்ற நாட்களில் கோலம் போட்டு தெய்வ சக்திகளை ஈர்ப்பதாலும், அமாவாசை தினத்தில் முன்னோர்களின் ஆசி பெறுவதாலும் சுபிட்சம் ஏற்படும். இதனால் குடும்பத்தில் உள்ள அனைவரும் மிக்க ஆரோக்கியம், செல்வங்களோடு வாழலாம்.

காலையில் எழுந்ததும் சாணியை எடுத்து தண்ணீரில் கரைத்து வீட்டின் முன் சாணம் தெளிப்பதால், நம் விரல்களின் வழியாக பிரபஞ்ச சக்தி கிடைக்கும். தரித்திரம் நீங்கும், கிருமி நாசினியாக இருப்பதால் நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும். சின்னசின்ன பூச்சிகளால் ஏற்படக் கூடிய பிரச்சினைகள், நோய்கள் தீரும். இதனால் மருத்துவ செலவுகள் குறையும். மகாலட்சுமியே வீட்டிற்கு வருவதால் செல்வம் பெருகும் என்பது ஐதீகம்.

அடுக்குமாடி குடியிருப்பில் இருப்பவர்கள் சாணம் தெளித்து கோலம் போட முடியாத சூழலில் இருப்பவர்கள், வீட்டின் முன் இரு தீபங்களையாவது ஏற்றி வைப்பது நல்லது.

கோலமிடுதல் என்பது ஒரு சடங்கு, சம்பிரதாயம் எல்லாம் கிடையாது. நம்ம வீட்டை நல்ல முறையில் அலங்கரித்தல் மற்றும் வரவேற்றல், உபசரிக்கும் குணம், மேலும் மங்கலகரமாக இருக்கிறது என்பதற்காகவும் போடப்படுகிறது. வீட்டில் மங்கலம் எந்நாளும் பொங்க, தினமும் கோலம் இடுங்கள்.

– அர்ச்சனா சுவேதாரண்யம்,
பெசன்ட் நகர்,
சென்னை–90.
செல் : 9943702054

* முக்கிய அறிவிப்பு *

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள், கட்டுரைகள், ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25–ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் அனுப்பும் போது கட்டாயமாக சங்கத்தின் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

- செய்திகள், கட்டுரைகள், கட்டாயமாக 1½ பக்கம் முதல் 2 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்கு மேல் வரும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் கதைகளை குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
- சங்க நிகழ்வுகள், விழாக்கள் பற்றிய செய்திகளை 3 முதல் 4 பாராக்கள் வரை மட்டுமே எழுதி அனுப்பபட வேண்டும். மேலும் செய்திகள் சுருக்கமாகவும், மிகவும் தெளிவாகவும், முக்கிய கருத்துகளை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்களின் கையொப்பத்துடனும் அனுப்பப்பட வேண்டும்.
- E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.
- **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பபட வேண்டும்.**

Online fund Transfer Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

இந்த QR CODE/UPI ஐ SCAN செய்தும் பணம் செலுத்தலாம்

தொகை செலுத்தியபின் Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) **இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு" Whatsapp No. 8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள் update செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

- செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடிதப் போக்குவரத்து இயலாது.

அனைத்து தபால்களையும் **கார்காத்தார் ஒப்புரவு,**
எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை – 600 094.
என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.
– கார்காத்தார் ஒப்புரவு

சங்கப் பலகை

பங்கு பெறுவோர் : ஆண்டாள், மீனா, வசுமதி, கோமதி, சித்ரா, பிரியா, தீபிகா, கௌரி.

இடம் : கோடம்பாக்கம் ஆண்டாள் அக்காவின் இல்லம்.

மாலை 4.30 மணி அளவில் அனைவரும் ஆண்டாளக்காவின் வீட்டில் கூட, அரட்டைக் கச்சேரி களை கட்டுகிறது.

ஆண்டாள் : வாங்க ! வாங்க ! எல்லாரும் நலமாக இருக்கீங்களா ? தண்ணி எடுத்துக்கோங்கப்பா !

கோமதி :நீங்க நல்லா இருக்கீங்களா அக்கா ? 4.30 மணி என்கிறதால traffic jam ல மாட்டாம வர முடியுது. அப்படி இருந்தும் 45 நிமிஷம் ஆயிடுச்சுக்கா !

தீபிகா : ஆமாம்பா ! வர, வர மெட்ரோ work னால traffic நத்தை வேகத்துலே ஊறுது. நம்ம இங்கே இருந்து 6 மணிக்கு முன்னாலே கிளம்பணும், இல்ல 7.30 மணிக்கு மேல கிளம்பணும்.

சித்ரா : சரி ! சரி ! அக்கா மார்கழி மாதப் பண்டிகைகள் பற்றி ஆரம்பிக்கலாமா ?

ஆண்டாள் : மார்கழி மாதம் கடவுளுக்கு மிகவும் பிடித்த மாதமாம். இதை 'தேவர் மாதம்' என்பர். மார்கழி மாதத்தில் சூரிய பகவான் குருபகவானின் வீட்டில் சஞ்சரிப்பார். இது தேவர்கள் கண் விழிக்கும் அதிகாலைப் பொழுது. அதாவது தேவர்களுக்கு பிரம்ம முகூர்த்தம்.

கௌர் : நமக்கு ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒரு நாள்னு கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஆண்டாள் : ரொம்பவும் correct அவர்களின் பிரம்ம முகூர்த்தத்தில் நாம் இறைவழிபாட்டில் ஈடுபட்டு என்ன வேண்டிக் கொண்டாலும், அதை அவர்கள் நமக்கு அருள்வார்கள் என்பது நம்பிக்கை.

சித்ரா : அறிவியல் ரீதியாக ஒசோன் மண்டலம் பூமிக்கு மிக அருகில் வரும் காலம். அதனாலதான் காலையில் எழுந்து பெண்கள் கோலமிட, ஆண்கள் பஜனைக்கு செல்ல வேண்டுமென முன்னோர்கள் கூறியுள்ளதாக எங்கள் பாட்டி சொல்வாங்க !

ஆண்டாள் : ஒவ்வொரு மாசத்துக்கும் ஒரு சிறப்பு உண்டு. இறை சிந்தனைக்கு மிக உயர்வான மாதமாக சொல்லப்படுவது மார்கழி மாதம், அதனால்தான் கிருஷ்ண பரமாத்மா சீதையில் மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன் என கூறியுள்ளார்.

பிரியா : அக்கா, மார்கழி திருவாதிரை பற்றி சொல்லுங்களேன் !

ஆண்டாள் : திருவாதிரை நட்சத்திரம் நடராஜருக்குரியது. இது இந்த வருடம் ஜனவரி 13–ஆம் தேதி, போகிப், பொங்கல் அன்று தான் வருது. மார்கழி மாத பௌர்ணமி தான் ஆரூத்ர தரிசனம் சிதம்பரத்துல அவ்வளவு விசேஷமாக இருக்கும் அன்னைக்கு தேர் திருவிழா காண ஆயிரம் கண்கள் வேணும். லட்சக்கணக்கான பக்தர்கள் கூடி தில்லைக் கூத்தனை வழிபடுவர். இந்த நட்சத்திரத்தில் தான் நடராஜர் அவரது கூத்தினை வியாக்ரபாதருக்கும், பதஞ்சலிக்கும் காட்டியதாக ஐதீகம்.

மீனா : திருவாதிரைக் களியும், ஏழு கறிகாய் கூட்டும் அம்மா பண்ணி, நைவேத்தியம் பண்ணுவாங்க. 'திருவாதிரையும், ஒரு வாய்க் களியும்' என்று பழமொழி இருக்கிறது இல்லையா ?

ஆண்டாள் : ஆமா ஆமா சிவனுக்கு திருவாதிரை எப்படி விசேஷமோ, அது போல பெருமாளுக்கு வைகுண்ட ஏகாதசி ! அன்றைய தினம் முழுதும் விரதமிருந்து, இரவு தூங்காமல் கண் விழித்திருந்து, துவாதசி பௌர்ணை முடித்து தான் சாப்பிட வேண்டும் என்பது நியதி. அன்றைய தினம் பெருமாள் கோவில்களில் சொர்க்க வாசல் திறப்பு மிகவும் விசேஷமாக நடக்கும். இந்த மாசம் அதுவும் ஜனவரி 10–ஆம் தேதி வருகிறது. ஆனால் 2025–ல் இரண்டு வைகுண்ட ஏகாதசி மற்றொன்று டிசம்பர் 31, 2025–ல் வருகிறது.

கோமதி :எனக்கு நல்லா நினைவிருக்கு, வைகுண்ட ஏகாதசி அன்னைக்கு சத்து மாவு பண்ணுவாங்க. சின்னவங்களுக்கு ஒரு அரிசி உப்புமா, மீதி நேரமெல்லாம் பரமபதம், தாயம், பல்லாங்குழி, ஆடுபுலி ஆட்டம்னு விளையாடிக் கொண்டிருப்போம்.

சித்ரா : அன்றைக்கு விடியக்காலையிலேயே பெரியவங்க உட்காந்து காய்கறிகளை அரிந்து, சமையலை முடித்து சந்திரன் வானத்தில இருந்து மறையறதுக்குள்ள அதாவது சூரியோதயத்திற்கு முன்னால் படைத்து, அன்னைக்கு ஒரு நாள் காலையிலேயே சாப்பாடு சாப்பிடுவோம்.

பிரியா : ஆமாம்பா ! நீ சொல்லும் போது எனக்கும் நினைவு வருது. அன்றைக்கு 21 காய்கள் சேர்த்து அவியல் பண்ணுவாங்க. என்ன taste ஆ இருக்கும் !

மீனா : ஆமாம்பா ! துவாதசிக்கு தயிர் போட்ட அவியல்; திருவாதிரை ஏழுகாய், புளி ஊத்தின கூட்டு. அம்மாக்கள் கை பக்குவமே தனிதான் !

ஆண்டாள் : நிறைய பேசிட்டோம். கிருஷ்ணருக்குப் பிடித்தவர்களில் ஏகாதசி விரதம் கடைப்பிடிப்பவர்களும் உள்ளனர்.

சித்ரா : அக்கா! ஒண்ணே ஒண்ணு சொல்லிடறேன். பம்பாயில் ஃபனஸ்வாடி பெருமாள் கோவில் உள்ளது. அங்கு இங்கெல்லாம் இருப்பது போல அவ்வளவு கூட்டம் அப்போதெல்லாம் இருக்காது. ஒரு முறை நான் என் பெற்றோர்களோடு போயிருந்தேன். 2 மணிக்கு கருவறைக்குப் போக பர்மிஷன் வாங்கணும். 2 மணிக்கு ஆரம்பிக்கிற அபிஷேகம் முடிந்து, அலங்காரமும் ஆகி, ஒரு தீபாராதனை; பின் சொர்க்கவாசல் காலை 4.30 அளவில் திறக்கப்பட்டது. இன்னமும் என் நினைவில் பசுமையாக உள்ளது. அதற்கப்புறமெல்லாம் T.V. யில் பார்ப்பதுதான்.

கௌரி : நம்நாட்டில்இரு மாநிலங்களிலும், உலகளவில் அமெரிக்கா மற்றும் இலங்கையிலும் சமீபத்தில் தேர்தல் நடந்து முடிந்துள்ளது. பெரும்பாலான நாடுகளில் ஓட்டு போடும் வயது 18 ஆக உள்ளது. பிரேசில், அர்ஜென்டினா, ஈக்வெடார், கியூபா, ஆஸ்திரியா, மால்டா போன்ற நாடுகளில் குறைந்த பட்ச வயசு 16. வட கொரியா, இந்தோனேஷியா, கீரீஸ் போன்ற நாடுகளில் 17 வயது, தைவான், உக்ரைனில் 20 வயதும், சிங்கப்பூரில் 21 வயதும், ஐக்கிய அரசு எமிரேட்சில் 25 வயதாகவும் உள்ளது என படிச்சேம்பா.

தீபிகா : நான் பாம்புகளைப் பற்றி சொல்றேம்பா! பாம்புகள் பெரும்பாலும் கூட்டமாக வாழாதாம். வட, மத்திய அமெரிக்காவில் வாழும் கார்ட்டர் (Garter) பாம்பு மட்டும் விதி விலக்காம். ஆனால் சமீபத்தில் கிடைத்த தொல்லெச்சம் ஒன்று, கடந்த காலங்களில் சில வகை பாம்புகள் கூடி வாழ்ந்துள்ளன என்பதை உறுதி செய்கிறது. அமெரிக்காவின் வயோமிங் மாகாணத்தில்பல கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டதாக கருதப்படும் அரிய தொல்பொருள் கண்டுபிடிப்பில் நான்கு பாம்புகளின் இறந்த உடல்கள் ஒன்றோடு ஒன்று பிணைந்துள்ளன. இது ஒரு புது வகையான இனத்தைச் சேர்ந்தவைகளாக இருப்பதுடன் உடல்களும் பெரிய அளவில் சேதமடையாமல் இருப்பதும் அறிவியலாளர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தி உள்ளது.

வசுமதி : நான் ரொம்ப நாளா Blue Tooth பற்றி சொல்லணும் நினைச்சிக்கிட்டே இருக்கேன். இன்னைக்கு சொல்லவா ?

கௌரி : சொல்லுங்கப்பா! நாங்களும் தெரிஞ்சுக்கணும்னு ரொம்ப நாளா காத்திருக்கோம்.

வசுமதி : வரலாற்றில் ப்ளூடூத் என்ற பெயரில் ஒரு மன்னர் ஸ்காண்டிநேவியா நாடுகளை ஒன்றிணைத்தார். அது போல இன்று தொடர்பு கருவிகளை இணைப்பதற்கு பயன்படும் தொழில் நுட்பம் ப்ளூடூத் என அந்த மன்னன் பேராலேயே அழைக்கப்படுகிறது.

சித்ரா : அமெரிக்கா முதன் முதலில் கண்டு பிடித்தது 'மொபைல் அனலாக்' முறை. இதுதான் 1 ஜி எனப்படுவது. 'ஜி' என்றால் ஜெனரேஷன்! இன்று 5 ஜி வரை வளர்ந்துள்ளது.

வசுமதி : ப்ளூடூத் என்பது ரேடியோ அலைகளைப் பயன்படுத்தும் தொழில் நுட்பம். இணையம் வழியாக உலகின் எந்த மூலையில் இருந்தாலும், கீ–போர்டு, பிரிண்டர், வாஷிங்மெஷின் போன்றவைகளை ரிமோட் மூலமாக இயக்கலாம்; கட்டுப்படுத்தலாம். இந்த தொழில் நுட்பத்தை முதலில் பயன்படுத்தியது எரிக்சன் என்ற ஐரோப்பிய நிறுவனம். பின் ஐ.பி.எம், இன்டெல் மற்றும் ஐப்பான் தொழில் நுட்ப நிறுவனங்களும் கை கோர்த்தன. எதிர்காலத்தில் கேபிளின்றி எல்லாம் காற்றில் இயங்கும் நிலை ஏற்படும். அதுதான் ப்ளூடூத் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி என கூறப்படுகிறது.

பிரியா : நான் சில கீரைகளைக் குறித்து சொல்கிறேன். பொதுவாக கீரைகள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். இன்னைக்கு ஒரு மூன்று கீரைகள் சொல்றேன். மீதியை அடுத்த மாசங்களில் சொல்றேன்.

மீனா : Correct தாம்பா! முக்கிய கீரைகளைப் பற்றி சொல்லுங்கப்பா! எவ்வளவு சொன்னாலும் குழந்தைகள் கீரைகள் சாப்பிட படுத்துறாங்க!

பிரியா ! முளைக்கீரை மிகவும் ருசியான கீரை. இது இருமலை நீக்கும்; சொறி, சிரங்கு நோய்களை குணமாக்கும். பொதுவாக வைட்டமின் E இருப்பதால் இரத்த விருத்திக்கு உதவும். பொன்னாங்கண்ணி கீரை சருமத்தை பாதுகாக்கும்; மூல நோயைக் கட்டுப்படுத்தும்; மூளைக்கு புத்துணர்ச்சி தரும்; கண் பார்வைக்குச் சிறந்தது. முருங்கைக்கீரை இரும்புச்சத்து நிறைந்தது. உடலுக்கு வலிமை அளிக்கும்; ரத்த சோகையைப் போக்கும்; வயிற்றுப்புண் ஆற்றும்; உடல் சூடு தணிக்கும், வறட்டு இருமல், மார்புச்சளி, மந்தம் போக்கும்.

கோமதி :மருத்துவக் குறிப்பாக, மாதவிடாய் வலி நீக்க எள், பனைவெல்லம், கருஞ்சீரகம் சேர்த்து கஷாயம் வைத்து குடிக்கலாம். கசகசா, வால்மிளகு, வாதுமைப்பருப்பு, கற்கண்டு சம அளவு சேர்த்து இடித்து, தேன், நெய் கலந்து எடுத்துக் கொண்டால்

வலி குறையும் என்றும், 'அஷ்டாங்க ஹிருதயம்' என்ற நூலில், இடுப்பு, சிறுநீர் பை, தொடை போன்ற பகுதிகளின் செயல்பாடு, விந்தணுக்கள், மாதவிடாய், மலம், சிறுநீர் போன்றவை வெளியேறும் செயல்களை அபானவாயு இயக்குகிறது எனவும் கூறப்பட்டுள்ளது.

மீனா : நான், கௌரி இன்னும் சில மகளிர் சேர்ந்து திருக்கழுக்குன்றம் பக்கத்தில் உள்ள சேராங்குளம் என்ற இருளர் வாழும் பகுதிக்குச் சென்று, தீபாவளிக்கு குழந்தைகளுக்கு (31 குழந்தைகள்) உடைகள் கொடுத்து வந்தோம். அந்த மக்கள் வாழும் வாழ்க்கை மனதுக்கு மிக்க வேதனையாக இருந்தது. நாம் நமது எல்லைக்குள்ளேயேஇருந்துவிடுகிறோம். இதுபோன்று வெளியே சென்று பார்த்தால்தான் மக்கள் எவ்வளவு சிரமத்தில் (ஒரு toilet வசதியோ, மற்ற அத்தியாவசிய தேவைகள் கூட இன்றி) வாழ்கின்றார்கள் என்பது தெரியவருதுப்பா! நம்ம எல்லோரும் சேர்ந்து நம்மாலான உதவிகளை கீழ்த்தட்டு மக்களுக்கு செய்யணும்னு ஒரு முடிவு எடுப்போமாப்பா ? என்ன சொல்றீங்க ?

கோமதி :நிச்சயம் செய்யலாம்பா ! நல்ல காரியம் ! நம்மை இந்தளவு நல்லபடியாக வாழ வைக்கும் ஆண்டவனுக்கு first நன்றி கூறுவோம்பா. இன்றைய கோவிலாக நான் சமீபத்தில் சென்று வந்த திருஆப்பாடி பற்றி கூறி இன்று முடிக்கலாம்பா. திருநாவுக்கரசர் பாடிய சோழநாட்டுத் தலம். மண்ணியாற்றின் தென் கரையில் உள்ள இத்தலத்தில் தான் சண்டேசவரர் ஆநிரைகளை மேய்த்தார். அத்தி மர நிழலில் வெண்மலையை சிவலிங்கமாக பிடித்து பூசித்ததாலும், பசுக்களை அங்கு மேய்த்ததாலும், 'ஆப்பாடி' எனப்பட்டது. இத்தலத்து இறைவன் பாலுகந்தீஸ்வரர்; அம்பாள் பிருகன்நாயகி எனும் பெரியநாயகி. இத்தல மூலவரின் அருகிலேயே சண்டேசுவரர் காட்சி தருகிறார். இக்கோவிலில் இரு சண்டேசுவரர்கள் அருள் புரிகின்றனர். முன் மண்டபம் வௌவால் நெற்றி அமைப்புடன் உள்ளது. கருவறை மண்டபத்தின் வலது புறத்தில் பைரவர், சூரியன், சனிபகவான் திருமேனிகளும், தெற்கு நோக்கி அம்பாளும், மகாமண்டபத்தின் வடக்கே நடராஜ சபையில் மிக கம்பீரமான நடராஜரும் காட்சி அளிக்கின்றனர். சரிப்பா முடிச்சுக்கலாம். அடுத்த வாரம் எங்கள் வீட்டில் சந்திப்பு.

ஆண்டாளக்காவின் அருமையான காபி, வடையுடன் தோழிகள் நன்றி கூறி பிரிந்தனர்.

நன்றி ! வணக்கம் !

Prop : G.Natarajan

Barani Studio
Photography | Videography

9600995868 | Chidambaram

We Make Great Memories

WEDDING SHOOT | MATERINITY SHOOT | PRE WED SHOOT
COMMERCIAL SHOOT | LIVE STREAMING | LED DISPLAY WALLS

#100, Everest Complex, S.P. Kovil Street,
Chidambaram - 608 001.

| baranistudioinfo@gmail.com
| Mobile: 9843642544

சுற்றுச் சூழல்.

" நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" நம் நல் வாழ்விற்கு இன்றியமையாதது நிலம், நீர், காற்று என்பனவற்றை உள்ளடக்கிய இயற்கை பரப்பாகும். மனித இனம் குரங்கு இனத்தோடு தொடர்புடையது, உயிர்கள் தோன்றின, யாராலும் படைக்கப்படவில்லை எனும் உயிரியல் கோட்பாட்டினை வகுத்த "சார்லஸ் டார்வின்" பரிணாம வளர்ச்சியின் தந்தை எனப் போற்றப்படுகிறார். இவரின் "இனங்களின் தோற்றம்" எனும் நூல் உலகில் புரட்சியையே ஏற்படுத்தியது. ஆதி மனிதன் காடு, மேடுகளில் வாழ்ந்தான். இயற்கையில் கிடைக்கும்காய்களையும்,பழங்களையும்,விலங்குகளை வேட்டையாடியும் உண்டு வாழ்ந்தான். பின் நாகரிகம் வளர வளர, அறிவியல் கண்டுபிடிப்புகள் வர வர மனிதன் இயற்கையை அழித்து வாழ முற்பட்டான். நம் நாடு சுதந்திரம் அடைந்த காலத்தில் மக்கள் தொகை 30 கோடி."முப்பதுகோடி முகமுடையாள்"என்றான்மகாகவி பாரதி. ஆனால் இன்று மக்கள்தொகை 140 கோடி. இந்த கூடுதல் மக்கள் தொகைக்கான வாழ்விடம், உணவு, வாகனங்கள் போன்ற தேவைகளும் அதிகரித்துள்ளது. மனிதனின் சராசரி வாழ் நாளும் கூடிக் கொண்டே போகிறது, அறிவியல், மருத்துவக் கண்டுபிடிப்புகளால் இன்று 70 ஐ நெருங்கிவிட்டது. ஆனால் மனிதன் ஆரோக்கியமான உடல் நலத்துடன் வாழ்கிறானா என்பது கேள்விக்குறி. இதற்கான அடிப்படைக் காரணம் இயற்கையை அழித்து, சுற்றுச்சூழலைப் பாதுகாக்க தவறியது தான் என்கின்றனர் சமூக ஆர்வலர்கள். சுற்றுச்சூழல் எவ்வாறு மாசடைகிறது. அதைப் பாதுகாக்க நம்மால் எப்படிச் செயல்பட முடியும் என்பது பற்றிச் சிந்தித்துச் செயல்படுவோம்.

நிலம் : மனிதன் வாழ முதல் தேவை இருக்க இடம், அடுத்து உயிர் வாழ உணவு. இரண்டும் நிலத்தின் மூலம் தான் கிடைக்கும். பூமி 30% நிலப்பரப்பாகவும் 70% நீர்ப்பரப்பாகவும் உள்ளது. அதை நம்மால் அதிகரிக்க முடியாது. எதிர்காலத்தில் விகிதாச்சாரம் மாறுபடலாம். மக்கள் தொகைப் பெருக்கத்தால் காடுகள் அழிக்கப்பட்டு, விளை நிலங்கள், நீர் நிலைகள் ஆக்கிரமிக்கப்பட்டு, வீட்டு மனைகளாகவும், தொழிற்சாலைகளாகவும், மாற்றப்பட்டுவிட்டன. இவைகளை நாம் புறந்தள்ள முடியாது. நிலம் மாசுபடுவதற்கு முக்கிய காரணம் நெகிழிப் பொருட்கள் பயன்பாடு. 40 மைக்ரான்களுக்கு மேல் உள்ள நெகிழிப் பொருட்களைப் பயன்படுத்த வேண்டும் என்று அரசு விதிஇருந்தாலும், கறுப்புச் சந்தையில் மறு சுழற்சி செய்ய இயலாத நெகிழிப் பொருட்கள் வந்துகொண்டிருக்கிறது. கடந்த 50 ஆண்டுகளில் கண்ணைக் கவரும் பிளாஸ்டிக் பொருட்களின் ஆதிக்கத்தில் மூழ்கி, நாம் பூமியின் வளத்தையே பாழ்படுத்தி வருகிறோம். தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் இரசாயணக் கழிவுகள், விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் செயற்கை உரங்கள், பூச்சிக் கொல்லிமருந்துகள் ஆகியவற்றால் நிலம் மாசுபடுகிறது. மலடாகிறது. இன்று உலகின் முக்கியமான பிரச்சனை புவி வெப்பமடைதல். பூமி வெப்பமடைகிறது என்று 1980 களிலேயே கண்டு பிடித்தவர் மதுரை வீரபத்ரன் ராமநாதன். கனிம வளங்களை வெட்டி எடுத்தல், சுரங்கச் செயல்பாடுகளால் மண் அரிப்பு, நிலச்சரிவு உண்டாகிறது. பூமியை நாம் எந்த அளவு அழிவுக்கு ஆட்படுத்துகிறோமோ அந்த அளவு அழிவு நமக்கு ஏற்படும். காடுகளில் உள்ள மரங்கள், சூரியனிடமிருந்து பெறும் வெப்பத்தை 20% வளிமண்டலத்திற்கு திருப்பி அனுப்பி பூமி வெப்பமடைவதை பாதுகாக்கிறது. காடுகளால் மலைகளில் மண் அரிப்பு தடுக்கப்படுகிறது. வயநாட்டிலும், வட மாநிலங்களிலும் ஏற்பட்ட நிலச்சரிவுக்கும் மக்கள் தான் காரணம். துணிகள், பிளாஸ்டிக், கண்ணாடி, அட்டை போன்ற பயன்பாடற்ற வீட்டு உபயோகப் பொருட்களை நேரடியாக நிலத்தில் போடுவதால் நிலம் மாசடைகிறது. பகுத்தறியும் மனிதன், மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று பிரித்து அரசு அறிவுறுத்தலின்படி செயல்பட வேண்டும். இன்று நிலம் மாசுபடுவதால் மனிதன் பலவித நோய்களுக்கு ஆளாகிறான். உடல் நலம் பாதிக்கப்படுவதால் மருத்துவ மனைகள், பரிசோதனை மையங்கள் பெருகிவிட்டன. மருத்துவக் கழிவுகளாலும் நிலம் மாசடைகிறது.

நீர் : "நீரின்றி அமையாது உலகு"

பூமி 70% நீரினால் ஆனாலும் பல காரணங்களால் நமக்கு சுத்தமான நீர் கிடைப்பது அரிதாகிவிட்டது. பூமிக்கு அடியில் உள்ள நிலத்தடி நீர் பாறை மற்றும் மண்ணால் பாதுகாக்கப்பட்டுள்ளது. நிலத்தில் கசியும் கழிவு நீர் பூமிக்குள் சென்று நிலத்தடி நீரை மாசுபடுத்துகிறது. பருவநிலை மாற்றத்தால் மேக வெடிப்பு காரணமாக ஒன்றிரண்டு மணிகளில் அதிகமான மழைப் பொழிவு, வெள்ளம், மழைநீர் பூமிக்குள் செல்லாமல் வீணாகக் கடலில் கலக்கிறது. சில நேரங்களில் வெள்ளம் மற்றும் பேரழிவு ஏற்படுகிறது. நீர் வழிப்பாதைகள், ஏரி, குளம், ஆறுகள் போன்றவை முறையாக தூர் வாரப்படாததால் நீரைச் சேமித்து நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்த வாய்ப்பு குறைந்துவிட்டது. விவசாய நிலங்களிலிருந்து மீத்தேன், பெட்ரோல் போன்றவைகள் எடுக்கப்படுவதால் நீர் மாசடைகிறது. விவசாயத்திற்கு இலவச மின்சாரம் தரப்படுவதால் ஆழ்துளைக்கிணறு மூலம் நீர் பாய்ச்சப்படுகிறது. வீட்டிற்கும் அதே முறை பின்பற்றப்படுவதால் நிலத்தடி நீர் மட்டம் குறைகிறது. மக்கள் குடிப்பதற்கு பாட்டில்களிலும், கேன்களிலும் தண்ணீரை வாங்கி பயன்படுத்துகின்றனர். தொழிற்சாலைக் கழிவுகள், வாகன உற்பத்தி, பாதாள சாக்கடைக்கழிவுகள்போன்றவற்றால்நீர்மாசடைகிறது. கார்பன்டை ஆக்ஸைடால் வளிமண்டலத்தில் பழுப்பு மேகம் உண்டாகி, பருவமழை பொய்த்து விடுகிறது. இமய மலையில் பனி உருகுவதற்கும் கடல் மட்டம் உயர்வதற்கும் பழுப்பு மேகம் ஒரு காரணம் எனப்படுகிறது.

காற்று : "அல்லல் அருளாள் வார்க்கில்லை வளிவழங்கு மல்லன் மா ஞாலங்கரி"

அருள் உடையவர்க்கு இந்த உலகில் துன்பம் இல்லை. அதற்கு காற்று உலவும் வளமிக்க இந்த பேருலகே சான்று என்று சொல்கிறார் வள்ளுவர். நாம், உணவு, நீர் இல்லாமல் ஒரு வாரம் வரை உயிர் வாழ்ந்திட முடியும், ஆனால் காற்று இல்லாமல் 5 நிமிடம் கூட உயிர்வாழ இயலாது. உலக மக்கள்தொகையில் 90% க்கும் அதிகமானோர் அசுத்தமான காற்றைச் சுவாசிப்பதாக உலக சுகாதார நிறுவனம் (WHO) தெரிவிக்கிறது. சுத்தமான காற்றே மூளையின் ஆரோக்கியம் நாம் ஒரு நாளைக்கு 22 ஆயிரம் முறை சுவாசிக்கிறோம், 16 ஆயிரம் முறை காற்றை உள்ளிழுத்து வெளிவிடுகிறோம். அந்த காற்றில் 78% நைட்ரஜன்; 21% ஆக்சிஜன்; மீதி 1% பிற வாயுக்கள் உள்ளன. வாகனங்கள் அதிகரிப்பு, தொழிற்சாலைகளின் தொடர் இயக்கம், எரிமலை வெடிப்பு, கதிரியக்கம், கண்ணுக்குப் புலப்படாத பிளாஸ்டிக் துகள்கள் மற்றும் தூசு, காடுகள் அழிப்பு, வளர்ந்து வரும் நாகரிகம் போன்றவற்றால் காற்று மாசடைகிறது. பக்கவாதம், மாரடைப்பு, நுரையீரல் நோய், புற்றுநோய் போன்ற நோய்களுக்கு காற்று மாசே காரணம். பிறந்த குழந்தையின் முதல் 1000 நாட்களில் மூளை 90% வளர்ச்சியடைகிறது. மாசடைந்த காற்றால் குழந்தை மூளையின் வெள்ளைப்படலம் பாதிப்படைகிறது. Body Spray, Car Spray, Room Spray போன்ற வாசனைத் திரவியங்களின் பயன்பாட்டினாலும் காற்று மாசுபடும். காடுகள் தான் நம் நாட்டின் நுரையீரல்கள், விவசாயிகள் அடுத்த விதைப்பு சுழற்சிக்காக பழைய பயிர்களுக்கு தீ வைத்துக் கொளுத்துவது காற்றை மாசுபடுத்துகிறது. காற்று மாசு புவி வெப்பமடைவதற்கும் ஒரு காரணமாகிறது. விவசாய நடவடிக்கைக்கு பயன்படுத்தும் அம்மோனியா, வளி மண்டலத்தின் ஆபத்தான வாயுக்களில் ஒன்று. AQI (Air quality Index) 50 புள்ளிகள் இருந்தால் அந்த நகரில் காற்று மாசு இல்லை எனலாம் ஆனால் நமது நாட்டில் எந்த பெரு நகரத்திலும் இந்த அளவீடு இல்லை. நமது தலைநகர் டெல்லியில் AQI 766 என்ற நிலையில் உள்ளதால்தான் அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

சுற்றுச் சூழலைப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டியவை :

1. வாகனங்களிலிருந்து வரும் புகை மாசுக்கட்டுப்பாட்டு அளவுக்குள் உள்ளதா என 3 மாதத்திற்கு ஒரு முறை பரிசோதிக்க வேண்டும். நாம் பயன்படுத்தும் மின்சாரப் பொருட்கள் குறைந்த மின்சாரத்தில் இயங்குவதாகவும், வாகனங்கள் LPG, CNG, மின்சாரம் போன்றவற்றால் இயக்கப்படுவதாகவும் இருக்க வேண்டும்.

2. வீட்டில் சேரும் குப்பைகளை (பிளாஸ்டிக், நெகிழி) தீயிட்டுக் கொளுத்தக் கூடாது. நெகிழிப் பொருட்கள் பயன்பாட்டை முடிந்த வரை தவிர்க்கவும் அல்லது குறைக்கவும்.

3. வீட்டைச் சுற்றி காற்றைச் சுத்தப்படுத்தும் கற்றாழை, மஞ்சள், மணிபிளான்ட், ஓம வல்லி, புதினா போன்ற சிறிய செடிகளையும், வாய்ப்பிருந்தால் அரசு, வேம்பு, புங்கை போன்ற மரங்களையும் வளர்க்கலாம்.

4. நிலத்தடி நீரைக்குடித்துப் பழகுவோம். தேவையானால் காய்ச்சிக்குடிப்போம். கேன், பாட்டில், தண்ணீர் பயன்பாட்டை தவிர்ப்போம். செயற்கை பழச்சாறுகள், Carbonated drinks, flavoured drinks ஐ தவிர்த்து இளநீர், எலுமிச்சைச்சாறு, நுங்கு, பதநீர் ஆகியவற்றை பருகி ஆரோக்கியம் காப்போம்.

5. குண்டு பல்புகள், டியூப் லைட்டுகளுக்குப் பதிலாக LED பல்புகளைப் பயன்படுத்துவோம். T.V. ஐயும் LED ஆக மாற்றுவோம. A/C ஐப் பயன்படுத்தும் போது Timer ஐப் பயன்படுத்தி மின்சாரத்தைச் சேமிப்போம். மின்சாரத்தை அதிகம் உபயோகிப்போர் Solar Panel மூலம் சூரிய ஒளி மின்சாரத்தைப் பயன்படுத்தலாம்.

6. துணி துவைக்கும் போதும், குளிக்கும் போதும் Tap, Shower மூலம் நேரடியாக நீரைப் பயன்படுத்தாமல் வாளி, பிற பாத்திரங்கள் மூலம் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தலாம். வயல்கள், காய்கறி, பூந்தோட்டங்களுக்கு சிக்கனமாக சொட்டு நீரைப் பயன்படுத்தி நிலத்தடி நீரைக் காப்போம்.

7. இரசாயன உரங்கள் பயன்பாட்டை முடிந்த வரை குறைக்க வேண்டும். வீட்டில் பயன்படுத்தும் காய்கறிக் குப்பைகள் மற்றும் மக்கும் குப்பைகளை வீட்டுத் தோட்டத்திலேயே குழியில் போட்டு மக்க வைத்து இயற்கை உரமாக்கலாம்.

நம் வசதிகளை மட்டுமே கவனத்தில் கொண்டு நாம் செய்து வருகின்ற அக்கறையற்ற, இயற்கைக்கு விரோதமான செயல்களால் பூமியில் நிகழும் அனைத்துப் பேரழிவுகளிலும் முழுவதுமாகப் பாதிக்கப்படுவது நாமும், நமது சந்ததியினரும் தான். அழகிய இயற்கையை, மகிழ்வான வாழ்வைச் சிதைத்து விட்டு பின் யாருக்காக எதற்காக நம் அறிவைச் செலவழிக்க வேண்டும். "முயற்சி என்பது விதை, அதை விதைத்துக் கொண்டேயிரு, முளைத்தால் மரம், இல்லாவிட்டால் மண்ணிற்கு உரம்" என்றார் நமது இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார். இன்று கோடிக்கணக்கான பனை விதைகளை சமூக ஆர்வளர்கள் விதைத்துக் கொண்டிருக்கிறார்கள். "வந்தபின் காப்பது" என்கிற நிலையைக் கைவிட்டு "வருமுன் காப்பது" குறித்து சிந்திப்பது வரவேற்புக்குரியது.

"மறந்து கொண்டே இருப்பது மக்களின் இயல்பு
நினைவு படுத்திக் கொண்டே இருப்பது நமது கடமை"

சுற்றுச் சூழலை காத்து நலமுடன் வாழ்வோம்!

– ப. சுவாமிநாதன், மயிலாடுதுறை.
9360185457

பணம் கடன் கொடுத்த வழக்கு
MONEY SUIT

மேலையூர் ச. அன்பழகன் – 9841373184

நம்முடைய நாட்டில் நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ள சிவில் என்னும் உரிமையியல் வழக்குகளில் குறிப்பிடத்தக்க அளவு வழக்குகள் கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வராததால் போடப்பட்டவை என்றால் அது மிகையாகாது.. நமது சமுதாயத்தில் பலர் குறிப்பாக கிராமப்புறங்களில் இருப்பவர்கள் வட்டிக்கு ஆசைப்பட்டோ அல்லது பக்கத்துத் தோட்டக்காரனுக்குத்தேவைப்படும்போது கடன் கொடுத்தால் அவனால் தீர்க்க முடியாவிட்டால் அவனது தோட்டத்தையும் நாமே வாங்கி விடலாம் என்ற எண்ணத்திலோ பணத்தைக் கடனாகக் கொடுத்து விட்டு அவரால் திருப்பிச் செலுத்த முடியாமல் தோட்டத்தையும் விற்க விரும்பாமல் இருக்கும் போது என்ன செய்வது என்று தெரியாமல் கஷ்டப்படுவார்கள். அப்படிப்பட்ட நிலையில் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

1. கடனாளிக்கு அறிவிப்புக் கடிதம் அனுப்புதல் LETTER

வரவேண்டிய பணத்துக்காக சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்கும் முன்பாக, அந்த கடனாளியின் கவனத்துக்கு அவர் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் தொகை பற்றி நினைவு ஊட்ட வேண்டும். அதற்கு அவருக்கு கடன் கொடுத்தவரே ஒரு கடிதம் எழுத வேண்டும். அக்கடிதத்தில் எப்போது எந்த நிலையில் அவர் கடன் வாங்கினார், கடனாக வாங்கப்பட்ட தொகை எவ்வளவு, அதற்குப் பிரகு அவர் எவ்வளவு திருப்பி செலுத்தினார், தற்போது உள்ள நிலுவை அந்த தொகையை எப்படி எப்போதுக்குள் அவர் திருப்பி செலுத்த வேண்டும் ரொக்கமாக்க் கொடுக்க வேண்டுமா வங்கிக் கணக்கில் செலுத்த வேண்டுமா போன்ற விபரங்களையும் முழு முகவரி மற்றும் தொலை பேசி எண் போன்ற தகவல்களையும் கொடுக்க வேண்டும். அவர் திருப்பி செலுத்த ஓரளவு அவகாசம் கொடுத்து திருப்பி செலுத்த வேண்டிய தேதியை குறிப்பிட வேண்டும். இந்த நிலையில் அவரை ஒரே அடியாக பயப்படுத்தாமல் இப்போதூ அவர் திருப்பி செலுத்தி விட்டால் அவர் பல்வேறு அனாவசிய செலவுகளைத் தவிர்த்து விடலாம் என்பன போன்றவற்றைக் கூறி அவர் திருப்பி செலுத்த ஊக்குவிக்க வேண்டும். அக்கடிதத்தின் நகலை பத்திரமாக வைத்திருக்க வேண்டும்.

2. வழக்கறிஞர் மூலம் கேட்பு அறிவிப்பு அனுப்புதல் DEMAND NOTICE

மேலே சொல்லப்பட்ட கடிதத்துக்குப் பலன் ஏதும் இல்லை என்றால் அதாவது கடனாளி பணம் ஏதும் அனுப்பாமலும் இனி அனுப்புவார் என்பதற்கான அறிகுறி ஏதும் இல்லை என்றால் கடன் கொடுத்தவர் அடுத்த நடவடிக்கைக்குச் செல்ல வேண்டும். அதாவது கடனாளி மேல் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்வது போன்ற சட்ட பூர்வ நடவடிக்கை எடுப்பதற்கு முன்பாக வழக்கறிஞர் மூலமாக கேட்புத் தொகை அறிவிப்பு Demand Notice அனுப்பி வைக்க வேண்டும். இந்த நிலையில் ஓரளவிற்கு பலன் இருக்கக்கூடும் ஒன்று வழக்கு தொடர்ந்து விடுவார்கள் என்ற எண்ணத்தில் கடனாளி பணம் திருப்பி செலுத்தவோ அல்லது அவகாசம் கோருதல் போன்ற பேச்சு வார்த்தைக்கோ வரும் வாய்ப்பு உண்டு

3. வழக்கு தொடர ஆவணங்களை சேகரித்தல்

வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பியும் எதிர் பார்த்த பலன் கிடைக்காவிட்டால் அதாவது கடனாளி நோட்டீஸுக்கு பதில் சொல்லாமல் விட்டாலும் பணம் திருப்பிக் கொடுக்க மறுக்கவும் செய்தால் அடுத்த நடவடிக்கையாக அவர் மீது வழக்கு தொடர வேண்டியதுதான். அதற்கு முன்பாககடன் கொடுத்தவர் கடனாளிக்குப் பணம் கடன் கொடுத்தது சம்பந்தமாக தன் வசம் உள்ள ஆவணங்களை சேகரித்துக் கொள்ளவேண்டும். அவர் எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டு, கடன் கேட்டு அவர் எழுதிய கடிதம் அவருக்கு பணம் அனுப்பியதற்கான ஆதாரம் மணி ஆர்டர் ரசீது அல்லது அவர் பெயருக்கு அனுப்பிய காசோலை அல்லது அவர் கணக்கில் செலுத்திய வங்கிச் செல்லான் போன்ற ஆவணங்களை சேகரித்துக் கொள்ள வேண்டும்.

4. வழக்கு தொடர கால வரையறையும், வழக்கு தொடரும் நீதி மன்றமும்

இந்தியாவில் இத்தகைய பணம் வராத இனங்களில் வழக்கு தொடுக்க, காலவரையறச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள காலக் கெடு 3 ஆண்டுகளாகும். அந்த 3 ஆண்டுக்குள் எந்த வித தொகையும் திருப்பிச் செலுத்தப்படாமல் இருந்து வழக்கும் தொடரப்படாமல் இருந்தால் அந்த கடன் காலாவதி ஆகி விடும். அடுத்து எந்த நீதி மன்றத்தில் வழக்கு தொடர வேண்டும் என்ற நிலை.

காஸ் ஆஃப் ஆக்ஷன் எனப்படும் வழக்கு தொடர்வதற்கான காரியம் எங்கு நடை பெற்றதோ அந்தப் பகுதியை தனது அதிகார எல்லையாக்கொண்ட நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்படவேண்டும்.

நீதி மன்றங்களில் போடப்படும் வழக்குகளின் மதிப்பின் அடைப்படையில் Suit Value கீழ்க்கண்டவாறு வரிசைக் கிரமம் உள்ளது.

உரிமையியல் வழக்குகள் . தமிழ் நாட்டில் சென்னை அல்லாத பிற பகுதிகளில் வழக்கு மதிப்பு ரூ. 5000 வரை – ஸ்மால் காஸ் கோர்ட் சிறிய காரண நீதி மன்றம் மதிப்பு ரூ 1 லட்சம் வரை – மாவட்ட முன்சீஃப் நீதி மன்றம் மதிப்பு ரூ 1 லிருந்து 5 ல்ட்சம் வரை – சப் கோர்ட் மதிப்பு 5 லட்சத்துக்கு மேல் – மாவட்ட நீதி மன்றம் டிஸ்ட் ரிக்ட் கோர்ட்

5. நீதி மன்றத்தில் ஆஜராதல்

வழக்கு தொடர்ந்தவர்கள் விரும்பினால் தங்கள் வழக்கை நடத்துவதற்கு வழக்கறிஞரை ஏற்பாடு செய்யாமல் தாங்களே ஆஜராகி வாதாடலாம். ஆனல் பெரும்பாலும் வழக்கு தொடர் பவர்கள் வழக்கறிஞர் மூலம்வாதாடுவதுதான் வழக்கம்.வழக்கு சம்பந்தப்பட்ட இரண்டு நபர்களில் ஒருவர் ஆஜராகவில்லை என்றால் நீதி மன்றம் / தீர்ப்பாயம் அந்த வழக்கை தள்ளுபடி செய்யவோ வழக்கு தொடர்ந்தவரே ஆஜாராகாவிட்டால் அல்லது வழக்கை இன்னொரு தேதிக்கு ஒத்தி வைக்கவோ ஆணையிடும். வழக்கில் இரண்டு நபர்களில் ஒருவர் ஆஜாராகா விட் டால் இன்னொருவர் ஒரு தலைப்பட்சத் தீர்ப்பாணை Ex-party Decree பெறக் கூடும்.

6. ஆவணங்கள் சமர்ப்பித்தல்

வழக்கு தொடர்ந்தவர் அல்லது அவரது வழக்கறிஞர் கடனாளி தனக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்பதற்கு ஆதாரமாக அவர் எழுதிக் கொடுத்த கடன் பத்திரம் அல்லது அவருக்கும் தனக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் போன்ற ஆவணங்களை நீதி மன்றத்தில் வழக்குக்கு ஆதாரமாக தாக்கல் செய்ய வேண்டும். வழக்கின் இரண்டு தரப்பாரும் அவரவர் தரப்பை நீதி மன்றத்தில் விளக்க நீதி மன்றம் இருவருக் கும் வாய்ப்பு கொடுக்கும்.

7. தீர்ப்பும் மேல் முறையீடும்

இரண்டு தரப்பு வாதங்களையும் கேட்டபிறகு நீதிபதி தீர்ப்பு வழங்குவார்.கடனாளிக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கப்பட்டால் அவர் கடன் தொகையுடன் கடன் கொடுத்தவருக்கு வழக்கிற்கு ஆன செலவையும் சேர்த்து தீர்ப்பு வழங்கிய தேதியிலிருந்து கொடுக்க வேண்டும். கொடுக்கப்படட் தீர்ப்பினால் திருப்தி அடையாத நபர் அந்த தீர்ப்பை எதிர்த்து உயர் நீதி மன்றத்தில் மேல் முறையிடு செய்யலாம்.

8 தீர்ப்பாணையும் நிறை வேற்று மனுவும்

அந்த வழக்கில் மேல் முறையீடு ஏதும் செய்யப்படாவிட்டால் தீர்ப்பு பெற்ற கடன்கொடுத்தவர் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு வழக்கில் தீர்ப்பு என்பது நீதிபதி கூறும் ஜட்ஜ்மெண்ட் ஆகும். அந்த தீர்ப்பில் கூறப்பட்ட தொகையை வசூல் செய்ய கடன் தாரர் தீர்ப்பு பெற்றவர் தீர்ப்பாணை என்னும் டிக்ரியை பெற வேண்டும். பிறகு உரிய காலக்கெடுவிற்குள் அந்த டிக்ரியை நிறைவேற்றி பணத்தை வசூலிக்க நிறை வேற்று மனு என்னும் எக்சிக்யூஷன் பெடிஷன் போட்டு வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்..

இரண்டு வகை வழி முறைகள்

ஒருவர் கொடுத்த பணம் திரும்ப வசூல் ஆகவில்லை என்றால் எடுக்கப்படக்கூடியசட்டபூர்வநடவடிக்கைகள் இரண்டு வகைப்படும். 1. உரிமையியல் முறையில் நிவாரணம் பெறுதல் 2. குற்றவியல் முறையில் அவர் மேல் நடவடிக்கை எடுத்தல்

சுருக்க முறை வழக்கு

சி.பி.சி எனப்படும் உரிமையியல் வழக்கு நடை முறைச்சட்டம் ஆர்டர் 37 ல் வழக்கு தொடர்வதுதான் பொதுவான உரிமையியல் நிவாரணமாகும் . இந்த பிரிவில் கடன் கொடுத்தவர் சுருக்கமான முறை வழக்கு தொடர வழி உள்ளது, இதர சாதாரண வழக்குகளை விட இந்த சுருக்கமான முறை வழக்கினை விரைவாக முடித்து விடும். இந்த முறையில் வழக்கு தொடர்ந்தவுடன் சம்பந்தப்பட்ட நபர்களை வர வழைக்க சம்மன் எனப்படும் நீதி மன்ற ஆணை வெளியிடப்படும். அது கிடைத்த 10 நாட்களுக்குள்பிரதி வாதி நீதி மன்றத்தில் ஆஜாராக வேண்டும், அவ்வாறு ஆஜராகத் தவறினால் வாதி சொல்லும் குற்றச்சாட்டுகள் உண்மையானவைதான் என கருதும் நீதி மன்றம் அதற்கேற்றாற் போல் வாதிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கி விடும். பிரதி வாதிநேரில் ஆஜரானால் வழக்கு சம்பந்தமாக அவர் கொடுக்கும் விளக்கங்கள் நீதி மன்றத்துக்கு திருப்தி அளிக்கக் கூடியதாக் இருந்தால் மட்டுமே நீதி மன்றம் அதனைக் கருத்தில் கொண்டு தீர்ப்பு சொல்லும் . வழக்கில் அபராதம் செலுத்துதல் போன்ற அம்சங்கள் இருந்தால் அந்த நிலையில் பிரதி வாதி செலுத்த வேண்டிய தொகையை சரியாகக்கணக்கிட்டுச் சொல்ல முடியாது. அத்தகைய வழக்குகள் சுருக்க முறை வழக்கில் வராது

2. குற்றவியல் முறையில் நடவடிக்கை எடுத்தல்

கடன் கொடுத்தவருக்கு உள்ள இரண்டாவது வழி கடனைத் திருப்பிச் செலுத்தாத கடனாளி மேல் நம்பிக்கை துரோகம், ஏமாற்றுதல், மோசடி போன்ற

இனங்களில் இந்திய தண்டனைச்சட்டத்தின் கீழ் வழக்கு தொடர்ந்து தண்டித்தல். ஆனால் அத்தகைய கிரிமினல் வழக்குகள் நீண்ட நாட்கள் பிடிக்கும்

நீதி மன்றத்துக்கு வெளியே முடித்துக் கொள்ளுதல்

மிக விரைவாகவும் அதிக செலவில்லாமலும் பணத்தைத் திரும்பப் பெறும் வழிகளில் ஒன்று கடனாளியுடன் சமரசம் பேசியோ ஆர்பிட் ரேட்டர் என்னும் நடுவரிடம் சென்றோ நீதி மன்றத்துக்கு வெளியே வழக்கை முடித்துக் கொள்ளுதல். ஆனால் அதற்கு மறு தரப்பாரும் ஒப்புக் கொள்ள வேண்டும். நடுவரிடம் கொண்டு செல்லப்பட்டால் அவர் இரு தரப்பார் சொல்வதையும் கேட்டபிறகு இருவரையும் கட்டுப்படுத்தும் ஒரு தீர்ப்பைச் சொல்வார். அவ்வாறு அவரால் சொல் லப்படும் தொகையை மேல் முறையீடு செய்யலாம்.

சம்பந்தப்பட்ட சட்டங்கள், டைம்ஸ் ஆஃப் இந்தியா. இந்தியா டைம்ஸ்.காம், லாஃபாம்.இன் போன்ற இணைய தளங்களிலிருந்து தொகுத்து வழங்கியவர் மேலையூர் ச.அன்பழகன், துரைப்பாக்கம், சென்னை 97, போன் 98413 73184

சைக்கிளுக்கு பின்னால் இவ்வளவு விஷயம் இருக்கா.

சைக்கிள் மிதிச்சு சம்பாதித்து தான் என் தகப்பனார் என்னை ஆளாக்கினார். குறிப்பா சொன்னா வாழ்க்கை என்பது சைக்கிள். முன் சக்கரம் புருஷன் பின் சக்கரம் பொண்டாட்டி. பின் சக்கரம் சுத்தினால் தான் முன் சக்கரம் சுத்தும். தாம்பத்ய உறவு என்பது தான் சைக்கிள் செயின். அது தளர்ந்து போச்சுன்னா கழன்று போயிடும். இரண்டு பெடலும் இன்பம் துன்பம் இது மாறி மாறி மேலும் கீழும் வந்து கொண்டே இருக்கும். இரண்டு கைப்பிடி இருக்கே. ஒன்று நேர்மை இன்னொன்று நீதி. பிரேக் என்பதுதான் மனசாட்சி.

அப்பா – பிள்ளை

அப்பா பக்கத்து வீட்டு அங்கிள் உங்கள் பிரண்டு தானே ஆமாம் அவர் அன்றாடம் குடிக்கிறாரே உங்களுக்கு அந்த பழக்கம் இல்லையா, குடிச்சண்டா இப்ப இல்லை அப்ப சிகரெட்டும் இருந்துச்சு இப்போ இல்லை. எதனால் உங்கள் கெட்ட பழக்கத்தை விட்டீங்க. இல்லை அதுதான் வாழ்க்கைன்னு ஒரு காலத்துல வாழ்ந்தேன். அதுக்கு அப்புறம் என்னுடைய வாழ்க்கையில் உங்கள் அம்மாவந்தாள் அப்புறம் பிள்ளைங்க வந்தீங்க இது தான் நிரந்தரமான வாழ்க்கை என நினைச்சேன். சிகரெட் தண்ணி போனா எனக்கு ஒரு நாள் ஏதாவது என் உடம்புக்கு ஆயிடும், என்னையே நம்பியிருக்கும் உங்களுக்கு ஏதாவது ஆயிடும். உங்களை ஏமாற்றுன மாதிரி இருக்கும். அப்பா அம்மா இல்லாத வாழ்க்கை நான் பட்ட 'கஷ்டத்தை நீங்கள் படக் கூடாதுனு நினைச்சேன். எங்களுக்கா தான் எல்லா பழக்கத்தையும் விட்டீங்கே. அப்ப இந்தாங்க ஹெல்மெட் போடுங்கோ சாரிடா. அய்யயோ போலீஸ் இருப்பாங்கன்னு ஹெல்மெட் போடாதீங்கோ பெண்டாட்டி பிள்ளை நமக்காக காத்து இருப்பாங்க, ஹெல்மெட் போடுங்கோ.

குடும்ப உறவு

3.ஒரு கோடி கார்ல போனாலும் 3 லட்ச கார்ல போனாலும் போற ரோடு ஒண்ணுதான் ஒரே தூரம் தான். 5 Star ஹோட்டல்ல சாப்பிட்டாலும் சாலையோர கடையில சாப்பிட்டாலும் பசி அடங்கத்தான் செய்யும் வயிறு நிரம்பத் தான் செய்யும். நாம வசிக்கிற வீடு 300 சதுர அடினு இருந்தாலும் 3000 அடியில் இருந்தாலும் தனிமைஎன்பதுஒரேமாதிரிதான்இருக்கும்.அதிகசதுர அடி தனிமையை போக்காது. 10 ஆயிரம் இருபதாயிரம் கொடுத்து Dress போட்டாலும் 100, 200 Dress போட்டாலும்மானம்மறையதான்செய்யும்,விமானத்துல எக்கனாமிக் கிளாஸ்ல போனாலும் பிஸினஸ் கிளாஸ்ல போனாலும் விமானம் கீழ இறங்கும் போது எல்லாரும் ஒண்ணு போல இறங்குவாங்க; இதில் இருந்து என்ன தெரியுது? உண்மையான சந்தோஷம் பணத்துல்ல இல்லை; பணத்தால் கிடைக்கும் ஆடம்பரத்திலையும் இல்ல. அப்புறம் எதுல தாங்க சந்தோஷம் இருக்குங்க நிறைய நண்பர்களை வச்சுங்கோ, அவர்களோட போன் செய்து பேசுங்கோ, உறவுகளோட அதிக நேரம் செலவழிங்கோ, பொண்டாட்டி கணவன் பிள்ளைங்கள் என, அக்கா, தங்கை என அவர்கள் குடும்பத்தோட உறவாடுங்க, மகிழுங்க, அவங்க பேசுறதை காது கொடுத்து கேளுங்கோ, வாய் விட்டு சிரிங்க. அதனால உங்கள் பிள்ளைங்கள பணக்காரர் ஆவதற்காக படிக்க வைக்காதீங்க, உறவுகளோட முக்கியத்துவத்தை புரிய வையுங்கோ, அப்பதான் அவங்க வளர்ந்த பிறகு பொருட்களோட விலை இல்லை மதிப்பையும் தெரிந்து கொள்வாங்க சொந்தங்களின் மதிப்பையும் தெரிஞ்சுப்பாங்க.

– ராமசெல்வம், விசலூர்.

9940255240

ஆன்மீக பயணத்தில் ஓர் அனுபவம்.

ஆன்மீக பயணமாக நாங்கள் 30 பேர் கொண்ட ஒரு குழுவாக கடந்த செப்டம்பர் மாதம் ஒன்றாம் தேதி சிதம்பரத்திலிருந்து உத்ரகாண்ட் மாநிலத்தில் உள்ள ஆதிகைலாஷ் மற்றும் ஓம்பர்வத் தரிசிக்க புறப்பட்டோம். பயணத்திட்டம் செப்டம்பர் 1 முதல் 13 வரை. அனைவரும் சிதம்பரத்திலிருந்து சென்னை வரை ரயிலிலும் பிறகு சென்னையிலிருந்து டெல்லி வரை விமானத்திலும் சென்றோம். டெல்லியில் ஒரு நாள் தங்கி முக்கியமான இடங்களைப் பார்த்துவிட்டு பிறகு காத்கோடம் என்ற இடத்திற்கு புறப்பட்டோம். உத்தரகாண்டிலுள்ள காத்கோடத்திலிருந்து சுமார் 180 கி.மீ. தொலைவில் உள்ள பித்தோகார்க் என்ற இடத்திற்கு இரவு வந்தடைந்தோம். அங்கு அனைவரும் ஹோட்டல் அறையில் தங்கினோம். மறுநாள் காலை 9 மணிக்கு மீண்டும் பயணத்தை தொடர்ந்தோம். வழியில் தார்கோட் என்ற இடத்தில் அமைந்துள்ள நீம் கரோலி பாபா கோவிலுக்குச் சென்று வழிபட்டோம். அங்கு மகான் பாபாவின் திருவுருவச் சிலையை வணங்கினோம். அனுமன், சீதாதேவி, ராமபிரான் சன்னதிகளுக்கும் சென்று வணங்கினோம். பிறகு மறுபடியும் பயணம் தொடர்ந்தது. சிறிது தூரத்தில் கோரக்கல் என்ற இடத்தில் உள்ள கோலுதேவ்தா என்ற மணி கோவிலுக்குச் சென்றோம். அந்த கோவில் முழுவதும் மணிகளால் நிரம்பி வழிந்தது. வழி நெடுகிலும் கொத்து கொத்தாக சிறியதாகவும் பெரியதாகவும் மணிகள் கட்டப்பட்டிருந்தன. ஆயிரக்கணக்கான மணிகள் தொங்கின. உள்ளே கருவறையில் நியாயாக்கார தேவன் குதிரை மேல் அமர்ந்து அற்புதமாக அருள்பாலிக்கிறார். அவரை வணங்கிவிட்டு புறப்பட்டோம். அடுத்து இரண்டு மணி நேர பயணத்திற்கு பிறகு ஜாகேஷ்வர் என்ற சிவன் கோவிலை அடைந்தோம். ஜாகேஷ்வர் என்ற பள்ளத்தாக்கில் அமைந்துள்ள இக்கோவிலில் சிவன், விஷ்ணு, சூரியன், குபேரன், எமன், சண்டி, விநாயகர், சக்தி என அனைத்து தெய்வங்களும் அருள் பாலிக்கின்றனர். இங்கு குட்டி குட்டியாக நிறைய கோவில்களும் அதன் உள்ளே சிறு சிறு சிவலிங்கம் மற்றும் நந்தி காணப்படுகிறது. காண்பதற்கு மிகவும் வியப்பாக இருக்கிறது. அனைவரும் நன்கு தரிசனம் செய்து விட்டு புறப்பட்டோம்.

அடுத்து சுமார் 3000 அடி உயரத்தில் உள்ள தார்ச்சுலா என்ற இடத்தை அடைந்து அங்கு ஹோட்டல் ஆதிகைலாஷ்ல் தங்கினோம். அங்கு மாஜிஸ்ட்ரேட் அலுவலகத்தில் அனுமதி பெற்ற பிறகே ஆதிகைலாஷ் மலை ஏற முடியும். நாங்கள் அனுமதிக்காக காத்திருந்தோம். மழை பெய்து கொண்டிருந்ததால் மூன்று நாட்களுக்குப் பிறகுதான் அனுமதி கிடைத்தது. மகிழ்ச்சியுடன் புறப்பட்டோம். முதலில் 18000 அடி உயரத்தில் உள்ள ஓம் பர்வதம் சென்றடைந்தோம். மிகவும் குளிர். ஆக்ஸிஜன் வேறு குறைவு. அனைவரும் சற்று சிரமப்பட்டோம். இருந்தாலும் அனைவரும் உற்சாகத்துடன் மேலே ஏறினோம். அங்கிருந்து ஓம் பர்வதம் ஓம் என்ற சமஸ்கிருத எழுத்து வடிவில் காட்சியளித்தது. மனதார கண்டு வணங்கி அங்குள்ள சிவலிங்கத்திற்கு நாங்கள் கொண்டு சென்ற வில்வம், விபூதி முதலியவற்றை கொண்டு பூஜை செய்து வணங்கினோம்.

பிறகு மலையிலிருந்து இறங்கி மறுபடியும் புறப்பட்டோம். அடுத்து ஒரு மணி நேர பயணத்திற்கு பிறகு ஆதிகைலாஷ் அடைந்தோம். இங்கே குளிர் மிகவும் அதிகமாக இருந்தது. (இன்னும் 2000 அடி உயரம்) பின் 2 கி.மீ. குதிரையில் அமர்ந்து மலைமேல் ஏறினோம். முதலில் பார்வதி சரோவர் அடைந்தோம். அங்கு ஒரு தேவிகோவிலும் வெளியில் மிகப்பெரிய நந்தியும் காணப்பட்டது. வணங்கி வழிபட்டோம் அங்குள்ள சரோவரில் புனிதநீர் எடுத்துக்கொண்டோம். பிறகு அதற்கு மேல் உள்ள கௌரி குண்ட் மற்றும் ஆதிகைலாயத்தை கண்டு வழிபட்டு வணங்கினோம். இதற்கு முன் வழியில், காலாபாணி என்ற இடத்தில் உள்ள அழகிய காளிகோவிலுக்குச் சென்று வழிபட்டோம். ஒரு புறம் அழகிய காளி நதியும் மறுபுறம் கோவிலும் சிறிய பாலமும் அழகாக காணப்பட்டது. அதன் பிறகு ஒரு வழியாக ஆதிகைலாஷ் ஓம் பர்வதம் தரிசனம் முடிந்து மகிழ்ச்சியுடன் மலையைவிட்டு கீழே இறங்கத் தொடங்கினோம். கீழே வரும் போதுதான் எங்களுக்கு பிரச்சனை தொடங்கியது. ஏறக்குறைய முக்கால்வாசி தூரம் வந்துவிட்டோம். அப்போது வழியில் ஒரு நிலச்சரிவு ஏற்பட்டது. அதனால் மேலே செல்ல முடியாமல் 40 கி.மீ. தொலைவில் உள்ள நாராயண் ஆஸ்ரமத்தை அடைந்து அங்கு தங்கினோம். இது 9000 அடி உயரத்தில் அமைந்துள்ளது. மிகப்பெரிய பரப்பளவை கொண்டது. மிக மிக அழகாகவும் அமைதியாகவும் அமைந்துள்ளது. இயற்கை எழில் சூழ்ந்த இடம். சுற்றிலும் பூந்தோட்டம், காய்கறி தோட்டம், உயர உயரமான மரங்கள் ஆஸ்ரமத்தை சுற்றி அமைந்துள்ளது. ஆன்மீக அதிர்வலைகள் நிரம்பிய இந்த ஆஸ்ரமம் மனதுக்கு மிகவும் மகிழ்ச்சியை அளிக்கிறது. நாங்கள் தங்குவதற்கு நல்ல இடமாக இருந்தது. அனைவருக்கும் கட்டில், மெத்தை, கம்பளி குளிருக்கு ஏற்ற போர்வை என்று அனைத்தும் அளித்தனர். மூன்று வேளையும் சூடான உணவு காலை மாலை சூடான தேனீர் அன்புடனும் இன்முகத்துடனும்

வழங்கினார்கள். அது ஒரு சொர்க்க பூமியாகவே இருந்தது.

அந்த சிவபெருமானின் அருளால் இப்படி ஒரு அற்புதமான இடம் கிடைத்தது. மூன்று நாட்கள் தங்கினோம். ஆஸ்ரமத்தின் நடுவில் நாராயணன் கோவில் அங்கு காலை, மாலை பூஜை, பஜனை, ஆரத்தி நடைபெற்றது. நாங்கள் அனைவரும் அதில் கலந்து கொண்டோம். மறுநாள் நிலைமை சரியாகிவிட்டதால் நாங்கள் அங்கிருந்து புறப்பட்டோம். கீழே இறங்கி வரும்போது அதே இடத்தில் மிகப்பெரிய நிலச்சரிவு விடாமல் சரிந்து கொண்டே இருந்தது. எல்லோரும் கலங்கி விட்டோம். சரி செய்ய 10 நாட்கள் ஆகும் என்றார்கள். எங்களுக்கு தொலைதொடர்பு, இணையதள தொடர்பு எதுவும் கிடைக்கவில்லை. அனைவரின் தொலைபேசியும் வேலை செய்யவில்லை. BSNL மட்டும் வேலை செய்தது. ஒருவர் இருவர் மட்டுமே வைத்திருந்தனர். இதனால் உறவினர்களுடன் எங்களால் தொடர்பு கொள்ள முடியவில்லை. பிறகு எங்கள் அமைப்பாளர் மற்றும் ஒரு சிலர் அரசாங்க உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தமிழ்நாடு அரசு உத்தரகாண்ட் அரசு மத்திய அரசின் இராணுவம் ஆகியோர் உதவியுடன் ஹெலிகாப்டர் மூலம் மீட்கப்பட்டு வந்து சேர்ந்தோம். அதற்குள் தமிழ்நாட்டு ஊடகங்களில் இந்த செய்தி எங்கள் புகைப்படத்துடன் வெளியாகியதால் எங்கள் உறவினர்கள் அனைவரும் அஞ்சி நடுங்கிவிட்டனர். அந்த சிவபெருமான் கைலாசநாதர் எங்களை பத்திரமாக மீட்டுவிட்டார். இறைவனுக்கு கோடான கோடி நன்றி. மீட்க உதவி புரிந்த அனைவருக்கும் அரசுக்கும் நன்றி.

சிவாய நம.

– திருமதி. வாசுகி முருகன்,
சீர்காழி.

கண்ணுக்கினிய பொக்கிஷம் ஸ்ரீ சொக்கநாதர்

ஆசை அறாய்.. பாசம் விடாய்..
ஆன சிவபூசை பண்ணாய்.. நேசமுடன்..
ஐந்தெழுத்தை.. நீ நினையாய்.. சீ.. சீ..
சினமே தவிராய்.. திருமுறைகள் ஓதாய்..
மனமே... உனக்கென்னவாய்...

இப்பாடலை இயற்றி அதன்படி வாழ்வும் வழி வழியாக சமய சைவத்தை வளர்த்திடவும் வித்திட்ட தென்பாண்டி நாட்டில் கார்குல மரபில் 16–ஆம் நூற்றாண்டில் அவதரித்தவர். சிவ பூசை செய்வதற்கு மிகுமை கொண்டு இறைவன் அருளால் பொற்றாமரைத் தடாகத்தில் மலர் மழை பெய்திட ஸ்ரீ சொக்கநாதர் பெருமான் பெற்றதும் அன்று முதல்

ஸ்ரீ சொக்கநாதர் பூசை வழிபாடு வழி வழியாக இன்று வரை செய்து வருவது வியக்கப்படுகிறது. மேற்படி பாடல்படியும், திருமுறை படியும் வாழ்ந்து சைவ நெறியுடன் வழிகாட்டிய வித்தகர். ஆசைஅறாய் சன்யாசியாகவும், பாசம் விடாய், துறவிகளாகவும் சொக்கநாதா நமசிவாய என்று நித்தம், நித்தம் நினைப்பவர்களாக ஆதினங்களும், மடாதிபதிகளும் சிவபூசை பண்ணாய்... சிவபூசை வழிபாடு.

பல விதி முறைகளும் இருப்பதை அறிந்து வழிபாடு செய்வது சால சிறந்தது. இல்ல குருபூசை வழிபாடு இல்ல குருவின் நட்சத்திர நன்னாளில் சிவபூசையும், மகேஸ்வர பூசையும் செய்வது.

(1) சாங்கம் : அபிஷேகம் பாத்யம், ஆசனம். வஸ்திரம் ஆபரணம் சந்தனம், சாத்துதல், பூசை வழிபாடு முறை.

(2) உபாங்கம் : கற்பூர தீபம், தூபம், குடை சாமரம் சிரட்டல், திருமுறை வழிபாடு, மற்றும் ஓதல் என பூசை வழிபாடு முறை.

(3) பிரத்யங்கம் : நைவேத்தியம், அதன் பின் சுக்கு கலந்த தண்ணீரை வழிபாடு செய்து கற்பூரம் காட்டல் என பூசை முறை.

நாம் பூசை செய்வதற்கு சமயம், விசேடம், நிருவாணம், அபிஷேகம் என நால்வகை தீட்சை பெற்று முடித்து சைவ அனுட்டானத்தோடு வாழ்பவரிடம் சிவ தீட்சை பெறுதல் வேண்டும். மறைமுக தீட்சை பெற்றவரே சிவ பூசை செய்திட தகுதி பெற்றவர் என்று பல சான்றோர்களின் கருத்தும், பதிவும் செய்து இருக்கிறார்கள்.

உன்னதமான மனதோடு, வயதுக்கேற்ப செயல்பாடுடன் செயல்படுவது சால சிறந்தது. ஸ்ரீ குருஞான சம்பந்தரால் ஸ்ரீ சொக்கநாதர் வழிபாடு முறையினை 26 ஆதீனங்கள் செய்து வந்ததை தொடர்ந்து தருமை ஆதினம் 27–வது குருமகா சன்னிதானம், கண்ணுக்கினிய பொக்கிஷமான ஸ்ரீ சொக்கநாதர் வழிபாடு செய்யும் போது தருமை ஆதீன மடத்திற்கு சென்று வழிபடுங்கள். நம்மை அறியாமல் வரும் சொல் சொக்க நாதா....

– வேளா. சோமசுவாமிநாதன்,
ஆச்சாள்புரம். 9751730940

வாழ்த்துகிறோம்

சீர்காழி தாலுக்கா, தில்லைவிடங்கன் திரு. சரவணன் அவர்கள் மகன் செல்வன் திரு. S. ஷர்மித் XI Std, மயிலாடுதுறை தாலுக்கா அளவில் நடைபெற்ற Under 17 சதுரங்க போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார். அவரை சீர்காழி சங்கத்தின் சார்பாக வாழ்த்துகிறோம்

வள்ளுவர் வகுத்த வழி மாணவர்க்கு

தொடர்ச்சி...

1) அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய
வல்லார் நட்பு ஆய்ந்து கொளல். (குறள் : 795)

உலக நடைமுறையை அறிந்திருக்கும் பெரியோர்கள் உள்ளனர். இவர் தீச்செயல் புரிவோரைக் கண்டித்து, வருந்தும்படி புத்தி சொல்வார். அத்தகைய பெரியோர்களிடம் சிநேகம் வைத்துக்கொள்.

2) எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (குறள் : 355)

பல பொருட்கள் பலவிதமாக தோற்றமளிக்கலாம். தோற்றத்தை மட்டும் பார்த்து மயங்கி விடாதே! அந்தப் பொருளின் உண்மையான இயல்பு எது என்று அறிய வேண்டியது அவசியமாகும்.

3) எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (குறள் : 423)

யார், யார் எப்பொருள் பற்றிக் கூறினாலும் அவற்றைக் கேட்டபடியே ஏற்காதே! கூறிய கருத்தில் பொதிந்துள்ள உட்கருத்தைக் கண்டு கொள்ளலே அறிவு ஆகும்.

4) சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு. (குறள் : 422)

மனதைக் கட்டுப்படுத்துதல் கடினம். இது நன்மை, தீமை பயக்கும் வழிகளில் அலையும் தன்மையது. தீயவழியில் செல்லாமல் மனதை அடக்கி நன்மை பயக்கும் வழியில் மனதைச் செலுத்து.

5) எண்பொருள் வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு. (குறள் : 424)

பிறரிடம் பேசும் போது எளிமையாகப் பேசு; கேட்போர் உள்ளத்தில் பதியுமாறு பேசு. ஆனால் பிறரிடம் கேட்கும் போது நுட்பமாக கேட்டு, ஆராய்ந்து அறிந்து கொள்.

6) எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு. (குறள் : 426)

உலகமாந்தர் எவ்வழியில் செல்கின்றனர் என அறிந்து கொள் அவ்வழியிலேயே நீயும் சென்று அறிவாளியாகுக.

7) அஃகி அகன்ற அறிவெண்ணாம் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின். (குறள் : 175)

பிறர் பொருளைக் கவர நினையாதே! அதற்காக பிறர் வெறுக்கும் செயல்களைச் செய்யாதே! பிறர் பொருளைக் கவர நினைத்தால் பெற்ற அறிவினால் பலனில்லை.

8) அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல். (குறள் : 203)

பிறர் உன்னை தீய செயல்களால் வருத்தலாம். அதற்காக நீயும் அவ்வாறு கொடிய செயல்களைச் செய்யாதே! உன்னை அறிவாளிகளில் அறிவாளி என கருதுவர்.

9) அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தம்நோய்போல் போற்றாக் கடை. (குறள் : 315)

உயிர்கள் கஷ்டப்படுவதைக் காணும் போது தனக்கு அக்கஷ்டம் வந்து விட்டதாக கருது. இயன்ற அளவு பிறர் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய முயற்சி. அதுவே நீ பெற்ற அறிவின் பயன்.

10) வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு. (குறள் : 844)

அனைத்தும் அறிந்த அறிவாளி என அகமகிழாதே; செருக்கடையாதே! அது அறிவல்ல; அற்பமான புத்தி என்று கருதுவார்கள்.

11) செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின். (குறள் : 123)

அறிய வேண்டியவற்றை அறிந்து கொள்! அதனை நல்ல வழியில் அறிந்து கொள். அதற்கேற்ப அடக்கமாய் நடந்து கொள். அறிவுடைய பெரியோர் இதை விரைவில் அறிவர். அதனால் மேன்மை அடைவாய்.

12) ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல். (குறள் : 834)

பல நூல்களைக் கற்றவர், அவற்றின் கருத்தை நன்கு அறிந்தவர், பலருக்கு விளங்கவும் சொல்லுவார். ஆனால் தான் கூறியபடி நடக்க மாட்டார். இவரை பேதை மனிதரென அறிந்து கொள்.

13) அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர். (குறள் : 997)

அரத்தைப் போல கூரிய அறிவு ஒருவருக்கு இருக்கலாம். ஆனால் மனிதனுக்கு இருக்க வேண்டிய பண்பில்லாதவன் என்று தெரிந்தால் அவன் மரத்திற்குச் சமமானவன்.

14) உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். (குறள் : 140)

உலக மக்கள் மேற்கொள்ளும் வாழ்க்கையை ஒத்து உன் வாழ்க்கையை நடத்து. அதற்கு தவறினால் படித்திருந்தும் அறிவில்லாதவன் என உலகம் பழி கூறும்.

15) அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில். (குறள் : 428)

அஞ்சத் தக்கவையைக் கண்டு அஞ்சு; அது அறிவுடையோர் பண்பாடு. அஞ்சத் தக்கதைக்

கண்டு அஞ்சாமல் நடந்தால் அறிவில்லாதவன் எனக் கருதப்படுவாய்.

16) அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண். (குறள் : 983)

பெருமிதத்துடன் வாழ வேண்டும். அது சான்றாண்மை ஆகும். இதற்கு அன்பு, பழி, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், மெய் பேசுதல் என்ற ஐந்தும் தூண்களாய் விளங்கும்.

17) ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். (குறள் : 69)

மகனைப் பெற்றவுடன் தாய் மகிழ்ச்சி அடைவாள். மகனை நல்ல குணமுடையவன்; அறிவாளி என மற்றவர்கள் கூறக் கேட்டால், அவள் பேரின்பம் அடைவாள். அந்த மகிழ்ச்சியை மகன் தாய்க்குத் தர வேண்டும்.

18) மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனும் சொல். (குறள் : 70)

இந்த சிறந்த மகனைப் பெற இவன் தந்தை என்ன தவம் செய்திருப்பானோ என்று அறிஞர்கள் கூறும்படி நடந்து கொள். அதுதான் உன் தந்தைக்கு நீ செய்யும் நன்றிக் கடன்.

19) அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. (குறள் : 36)

தருமம் செய்! பிறகு செய்யலாம் என்று காலம் கடத்தாதே! வாலிப வயதிலேயே தருமம் செய் ! வயது தளர்ந்து உடலழியும் போது அழியாமல் அத்தருமம் துணையாக வரும்.

20) கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். (குறள் : 2)

அறிவு வடிவானவன் ஆண்டவன். அவனை வணங்கு. அவனை வணங்காமல் நீ கற்றதன் பயனை அடையப் போவதில்லை.

பழைய ஓலைச் சுவடி ஒன்று கிடைக்கப் பெற்று அதில் இருந்து தொகுத்து அளித்தவர்.

– திருமதி. வனஜா இளங்கோவன்.

புதுயுகம் படைப்போம் !

குயிலோசையில் விடிந்த விடியல்களெங்கே ?
குழலோசையில் மலர்ந்த புவனமுமெங்கே ?
உறவுகள் பூத்த நிலம் தானெங்கே ?
உயிரெனப் போற்றிய பண்புகள் எங்கே ?

ஈரம் காய்ந்த நதிகளைக் கண்டோம்!
இலைகள் உதிர்ந்த மரங்களைக் கண்டோம்!
வசந்தம் மறந்து வாடிக் கிடப்பதேன் ?
வலிகள் சுமந்து வண்ணமிழந்ததேன் ?

தேனுண்ட வண்டுகளின் ரீங்காரம் எங்கே ?
தெய்வராகம் இசைக்கும் கோயில் மணி எங்கே ?
வண்ணத்துப் பூச்சிகளின் ஊர்வலங்கள் எங்கே!
வாழ்ந்த சுவடுகளின் வசீகரந் தானெங்கே!

குஞ்சுகளின்றி கூடுகள் தவிப்பதோ ?
கூடாரமெல்லாம் அடையாளம் இழப்பதோ ?
குறையொடு மனிதம் நிதம் நிதம் வீழ்வதோ ?
குலத்தொடு பெருமையும் கரைந்து போவதோ ?

செல்வம் சேர்க்கப் பறந்தது போதும்!
செறிந்த வாழ்வினை தொலைத்தது போதும்!
பிறந்த பூமியைத் திரும்பிப் பாருங்கள்!
பெற்றவர் கண்களில் நிறைந்து வாழுங்கள்!

உறவுகள் மறந்து ஓடுவதா வாழ்க்கை ?
உரிமைகள் துறந்து ஒடுங்கவா சுதந்திரம் ?
கனவுகள் மெய்ப்பட 'பாரதி' துடித்தானே!
கவின்மிகு அழகாய் கவிதைகள் யாத்தானே!

நீயும் நானும் இணைந்தே நடப்போம்!
நிலைதனை மாற்ற கரங்களை இணைப்போம்!
பாரதித் தமிழால் புதுயுகம் படைப்போம்!
பாரதத் தாயின் சுடர்முகம் மீட்போம்!

– மெய்யாத்தூர் சொ. வேல் முருகன்.
9578286891

பாராட்டுகிறோம்

மயிலாடுதுறை ஆசிரியர் திரு. இரா. செல்வகுமார் அவர்தம் தமிழ்ப்பணியைப் பாராட்டி தருமபுர ஆதினம் 27வது குருமகா சந்நிதானம் அவர்தம் திருகரங்களால் **தருமபுர ஆதீனப் புலவர்** எனும் விருதும், **தங்கப் பதக்கமும்** வழங்கியருளினார்.

பாராட்டுகிறோம்

SRM பல்கலைகழகத்தில் BE Mechatronics இறுதி ஆண்டு படித்துவரும் வி.கிருஷ்ணன் (வினோத் – ரம்தா குடந்தை கல்லூரி பேராசிரியர் (ஓய்வு) அவர்களின் புதல்வரும், இராஜசேகரன் – பானு அ.வ.அ. கல்லூரி பேராசிரியர் (ஓய்வு) மற்றும் திரு. இராமலிங்கம் – புனிதா அவர்களின் பெயரனும் ஆவார்) தலைமையிலான "ஆட்டோ கிரீட் ரேசிங்" குழு, கோயம்புத்தூரில் நடைபெற்ற TNKC (தமிழ்நாடு கார்ட்டிங் சாம்பியன்சிப்) போட்டியில் EV எனப்படும் மின்சார பந்தைய வாகனத் தயாரிப்பு பிரிவில் " முதலிடம்" பெற்றனர். மேலும் அகில இந்திய அளவில் நடைபெற்ற FKDC (பார்முலா கார்ட் வடிவமைப்பு போட்டி) எட்டாவது நிகழ்வில், சிறந்த EV வடிவமைப்பிற்கான " முதலிடம்" மற்றும் "National India Rank 3rd " in EV யும் வென்றுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

CHENNAI KARKATHAR ASSOCIATION

Choolaimedu, Chennai - 600 094.

LADIES HOSTEL

- A/c. & Non A/c. Single Cot, Big Size Room
- Free Wi-Fi
- Free Washing Machine
- Free Aquaguard Water
- Two Wheeler Parking available
- Camera Facilities Available Inside & outside Area
- Security Persons available
- Three Times food, Breakfast, Lunch & Dinner
- Milk available Morning only
- 24 Hours warden available
- Catering Available
- Food Timings : Morning 7.30 a.m. to 9.30 a.m.
  Lunch : 12.00 p.m. to 2.30 p.m.
  Dinner : 7.30 p.m. to 9.00 p.m.

No. 64, Sowrashtra Nagar 10th Street,
Choolaimedu, Chennai - 600 094.
Cell : 94454 82798, 99943 26976
E-mail : kaveri9941@gmail.com

மணமகள் தேவை

பெயர் செல்வன் R. சதீஷ்
படிப்பு Dip. (ECE)
வேலை G.K. Power Private Limited Expertise
பிறந்த தேதி 19.10.1993
உயரம் 5' - 3"
நட்சத்திரம் கேட்டை
கோத்திரம் மாயலுடையான்
பூர்வீகம் கோடாலிகருப்பூர்
தகப்பனார் த. ராமநாதன்
தாயார் ரா. செல்வி
முகவரி வெள்ளாழத் தெரு,
கோடாலிகருப்பூர் (PO),
உடையார் பாளையம் (Tk.),
அரியலூர் (Dt),
Cell : 85081 90450
விருப்பம் நல்ல குடும்பபாங்கான பெண்.

பெயர் செல்வன் D. கவின் குமார்
படிப்பு B.E. (EIE)
வேலை KPR Group Company, Coimbatore
Rs. 5 Lakhs / PA
பிறந்த தேதி 21.01.1992
உயரம் 5' - 8"
நட்சத்திரம் ஆயில்யம்
கோத்திரம் பாண்டுதுரிய
பூர்வீகம் அறச்சலூர்
தகப்பனார் T.K. தனசேகரன்
தாயார் B. திருமேனிக்கரசி
முகவரி 272/B1, 9th பரதன் தெரு,
அசோக் நகர்,
ஜேஸஸ் பள்ளி அருகில்,
புதூர் அஞ்சல்,
ஈரோடு – 638 002.
Cell : 97512 74949, 98651 17979

பெயர் செல்வன் M. விஷ்ணுராம்
படிப்பு B.Tech (IT)
வேலை Consultant, Infosys, Chennai,
Rs. 15 Lakhs/PA
பிறந்த தேதி 24.03.1997
உயரம் 168 cm
நட்சத்திரம் அஸ்தம்
கோத்திரம் விளந்துட
பூர்வீகம் இலையூர்
தகப்பனார் ஜெ. முரளீதரன், B.Sc.,
Supdt. (Rtd.) TNCSC,
தாயார் M. ராதா,
அரசலங்குடி (மயிலாடுதுறை)
முகவரி 5/10, சிவன் கோவில் தெரு,
அகரஓகை, குடவாசல் (Tk),
திருவாரூர் (Dt) - 612 601.
Cell : 78711 38272, 94866 14771
விருப்பம் IT- யில் பணிபுரியும் 2000–ம் அதற்கு பிறகு பிறந்த வரன்.

பெயர் செல்வன் E. பாலாஜி
படிப்பு B.E (EEE)
வேலை Trishta Global Test Enginner
Rs. 6 Lakhs / PA
பிறந்த தேதி 10.05.1999
உயரம் 178cm
நட்சத்திரம் பூரட்டாதி
கோத்திரம் காளிங்கராய
பூர்வீகம் தேரிழந்தூர்
தகப்பனார் R. இளங்கோவன், D.M.E.,
தாயார் E. கமலி
முகவரி 2/31,பெருமாள் கோவில் வடக்கு வீதி,
தேரிழந்தூர், குத்தாலம் (Tk),
மயிலாடுதுறை – 609 808.
Cell : 98943 96765, 89039 76765
விருப்பம் சமபடிப்பு வேலையில் உள்ள வரன்

மணமகன் தேவை

பெயர்	செல்வி R. சுமிதா
படிப்பு	M.Sc., Software Engineering
பிறந்த தேதி	29.07.1991
உயரம்	164 cm
நட்சத்திரம்	சதயம்
கோத்திரம்	அலமலுட
பூர்வீகம்	திருவாலங்காடு, மயிலாடுதுறை
தகப்பனார்	R. ராமச்சந்திரன்
தாயார்	R. தேன்மொழி (இல்லத்தரசி) (பெருந்தோட்டம்)
முகவரி	30/14, இரண்டாவது தளம், தீன் பிளாசா, ஸ்டேட் பேங்க் ரோடு, மயிலாடுதுறை – 609 001. Cell : 73394 67537
குறிப்பு	விவாகரத்து பெற்றவர்

பெயர்	செல்வி வெ. ஜெயஸ்ரீ
படிப்பு	M.Sc. (Agri)
வேலை	ICAR (Coimbatore)
பிறந்த தேதி	22.10.2000
உயரம்	156 cm
நட்சத்திரம்	மகம்
கோத்திரம்	வாணதிரிய
பூர்வீகம்	இளையபெருமாள்நல்லூர்
தகப்பனார்	தி. வெங்கடேசன் Manager-TDCC Bank Ltd.
தாயார்	வெ. அகிலா (மணல்மேடு)
முகவரி	43/42, சன்னதி தெரு, ஜெயங்கொண்டம் – 621 802. அரியலூர் மாவட்டம் Cell : 96553 50935 / 75022 66554
விருப்பம்	படித்த பணியில் உள்ள வரன்

பெயர்	செல்வி A. Jayavarshika
படிப்பு	MCA
வேலை	Production Support Engineer (Qad) - IT Company
பிறந்த தேதி	21.02.1999
உயரம்	5' - 3"
நட்சத்திரம்	பரணி
கோத்திரம்	பேருட
பூர்வீகம்	ஹரிஹரன்கூடல்
தகப்பனார்	D. அண்ணாதுரை
தாயார்	R. அமுதா
முகவரி	1/196, பிருந்தாவன் தெரு, சீனிவாசபுரம், மயிலாடுதுறை – 609 001. Cell : 88258 11931 / 88383 37420

பெயர்	செல்வி கே.வி. சினேகா
படிப்பு	B.Tech - IBT
வேலை	இந்திய குடிமைப்பணி தேர்வுக்கு பயின்று வருகிறார்
பிறந்த தேதி	27.11.1999
உயரம்	156cm
நட்சத்திரம்	புனர்பூசம் 4ம் பாதம்
கோத்திரம்	காரலுட
பூர்வீகம்	ஓமாம்புலியூர், காட்டுமன்னார்கோவில்
தகப்பனார்	ந. குமார் வட்டார கல்வி அலுவலர், குமராட்சி
தாயார்	மா. விஜயலெட்சுமி, M.A., (இல்லத்தரசி)
முகவரி	15,முத்தமிழ் வீதி, பெரியார் நகர், காட்டுமன்னார் கோவில் Cell : 97876 47217, 99659 33322
விருப்பம்	சென்னை / பெங்களூர் பணியில் உள்ள வரன்.

Turns 1st

பிறந்த நாள் விழா

சிதம்பரம் கனகசபை நகர், Dr. S.B. பட்டாபிராமன், திருமதி. P. நீலா அவர்களின் ஆருயிர் பெயரன் மற்றும் சாய்பாலா பட்டாபிராமன், M. Tech, Technical Lead - TCS Bengaluru அவர்களின் அருந்தவப் புதல்வன்

மாயோன் முருகனின்

முதலாவது பிறந்த நாள் சிதம்பரம் ஹோட்டல் அக்ஷயாவில், நவம்பர் 1, 2024 அன்று உறவினர்கள், நண்பர்கள் புடைசூழ இனிதே நடப்பெற்றது.

மாயோன் முருகனின் பிறந்தநாள் விழாவிற்கு வருகை தந்து வாழ்த்திய அன்புள்ளம் கொண்ட உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் அன்பு கலந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

R. அரவிந்தன், B.E.
(USA)

சனா அரவிந்தன்
(USA)

சாய்லெக்ஷ்மி பட்டாபிராமன், B.E.,
(USA)

ஷேஷா அரவிந்தன்
(USA)

மணமகள் தேவை

பெயர் **செல்வன் G. சித்தார்த் (எ) பரத்**
படிப்பு B.Tech (Chemical), M.S. (Chemical) USA
வேலை Senior Consultant, Brevitas Consulting
Toronto, Canada
பிறந்த தேதி 12.6.1992
உயரம் 6' Feet
நட்சத்திரம் விசாகம்
கோத்திரம் அரங்குட
பூர்வீகம் ஆக்கூர் (மயிலாடுதுறை)
தகப்பனார் **J. கோபாலகிருஷ்ணன்** (லேட்)
தாயார் **G. தீபா** கார்குடி (கும்பகோணம்)
முகவரி 7, பாலமுருகன் தெரு,
Flat No. 4, வேலாயுதம் அபார்ட்மெண்ட்,
வியாசர்பாடி, சென்னை – 600 039.
Cell : 98402 74544, 98844 97111
E-mail: parkaveeg@gmail.com
விருப்பம் சமபடிப்பு மற்றும் பணிபுரியும் வரன் / பணிக்கு செல்ல விருப்பமுள்ள வரன்.

பெயர் **செல்வன் S. கௌசிக்**
படிப்பு B.E (Civil) MBA
வேலை Senior Project Engineer,
DOHA - Qatar
நட்சத்திரம் அவிட்டம்
கோத்திரம் நன்னுட
பூர்வீகம் மழவராயநல்லூர் – சிதம்பரம்
தகப்பனார் **V. சங்கர்,** தலைமை மருந்தாளுநர்
தாயார் **S. வித்யா** (பாலாகுடி) இல்லத்தரசி
முகவரி 53, தேவதாஸ் நகர்,
விபீஷ்ணபுரம்,
சிதம்பரம் – 608 001.
Cell : 94862 23517, 70100 41488
விருப்பம் சமபடிப்புடன், வெளிநாட்டில் பணிபுரிய விருப்பம் உள்ள வரன்.



மணமகன் / மணமகள் தேவை

பெயர் செல்வி S. முத்து மாரீஸ்வரி

படிப்பு M.Com (Computer Application)

வேலை Muthoot Fincorp.

1.2 Lakhs / Pa

பிறந்த தேதி 05.08.1994

நட்சத்திரம் புனர்பூசம் 1ம் பாதம்

கோத்திரம் அருளுடைய

தகப்பனார் P. சடேஸ்வரன் SG.SR.TM., SETC Retd.

அரசு விரைவு போக்குவரத்து கழகம்

தாயார் K. முத்து வைரம்

முகவரி "ஆலயம்",

120, T.P.K மெயின் ரோடு,

பைக்கரா, மதுரை – 625 004.

Cell : 98421 92417, 99521 24923

பெயர் செல்வன் S. சரவணன்

படிப்பு B.E.,

வேலை Self Employed

Vetri Studio, Photo, Videographer

Rs. 6 Lakhs/PA

பிறந்த தேதி 29.12.1986

உயரம் 5' - 8"

நட்சத்திரம் பூசம்

கோத்திரம் மாலுடயான்

பூர்வீகம் இளையபெருமாள் நல்லூர்

தாயார் S. Jayalakshmi

முகவரி 26-D, Mela Vellalar Street,

Jayankondam - 621 802.

Cell : (W) 88707 08547, 95668 86668

பெயர் செல்வன் கா. வருண் நேரு

படிப்பு B.Tech (IT)

வேலை Specialist - Software Engineering

L T I Mindtree, Chennai

Rs. 12 Lakhs / PA

பிறந்த தேதி 22.11.1986

உயரம் 166 cm

நட்சத்திரம் பூசம்

கோத்திரம் எரவுட

பூர்வீகம் இறையூர் (பெண்ணாடம்)

தகப்பனார் மு. கார்த்திகேயன்

தாயார் கா. தனலட்சுமி

(செந்துறை)

முகவரி 174/2, கொத்தட்டை ரோடு,

இறையூர் – 606 111.

கடலூர் மாவட்டம்

Cell : 98844 91678

E-mail : dhanamkarthi76@gmail.com

சிங்கப்பூர் கார்காத்தார் சங்கம் தீபாவளி ஒன்று கூடல் 2024.

சிங்கப்பூர் கார்காத்தார் சங்கம் தீபாவளி ஒன்று கூடல் 2024.

தீபாவளியைமுன்னிட்டுசிங்கப்பூர்கார்காத்தார் சங்கம் ஏற்பாடு செய்த ஒன்று கூடல் நிகழ்ச்சி, சனிக்கிழமை (02–11–2024), புக்கிட் பாத்தோக் Civil Service Club வளாகத்தில் இடம் பெற்றது.

ஏற்பாட்டுக் குழுவினரின் அருமையான திட்டமிடலால் சிறியவர், பெரியவர் என இரு தரப்பினரும் மகிழும் வண்ணம் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அழகிய அறை அலங்காரம், பாரம்பரிய முறையிலான வரவேற்பு, சுவையான விருந்து, குடும்பத்தினர்க்கான அன்பளிப்புப் பைகள் போன்ற அம்சங்களோடு உருட்டுப் பந்து விளையாட்டு, இசைக்கேற்ற வேடிக்கை நடன அசைவு நிகழ்ச்சி, வெளிப்புறத்தில் மத்தாப்பு கொளுத்தல் எனக் கண்ணையும் கருத்தையும் கவர்ந்த நிகழ்ச்சிகள் அனைவருக்கும் மனநிறைவைத் தந்தன.

ஒன்று கூடினோம், உற்சாகமாகப் பொழுதைக் கழித்தோம், பின்னர் பிரிந்து சென்றோம் என்று மட்டுமல்லாமல் இதைப் பயனுள்ள முறையிலும் கொண்டு செல்ல சங்கத்தின் மூத்த உறுப்பினர்கள் வழிகாட்டினர்..

நிபுணத்துவ ஆலோசனை தேவைப்படும் உறுப்பினர்களைத் துறை சார்ந்தோருடன் இணைக்க ஏதுவாகச் சங்க உறுப்பினர்களின் முழுவிவரங்கள் அடங்கிய தரவுத்தளம் உருவாக்குதல், உடல்நலம் சார்ந்த கூடுதல் நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்தல், சிங்கப்பூரில் முத்திரை பதிக்கும் வண்ணம் கூட்டு வணிக முயற்சிகளை மேற்கொள்ளுதல் போன்ற பரிந்துரைகள் முன்மொழியப்பட்டன.

அடுத்த தலைமுறைக்கு நம் கலாசாரத்தைக் கொண்டு சேர்ப்பதில் சங்கம் எப்போதும் கவனம் செலுத்தி வருகிறது. அந்த அடிப்படையில் இந்நிகழ்ச்சியில் இளையர்களிடம் கருத்து கேட்கப்பட்டதில், இளையர் அணி உருவாக்கவும் பெரியோருடன் இணைந்து நடவடிக்கைகளில் பங்கேற்கவும் தயாராக இருப்பதைப் பிள்ளைகள் உறுதிப்படுத்தினர். அடிக்கடி ஒன்று கூடவும் அனைவரும் பயன்பெறவும் வந்திருந்தோர் இணக்கம் தெரிவித்தனர்.

தகவல் – சிங்கப்பூர் கார்காத்தார் சங்கம்

தமிழக கார்குல மகளிர் சேவை அணி

கார்குல மகளிர்கள் இணைந்து கார்குல மகளிர் சேவை அணி என்ற ஒன்றை துவங்கியுள்ளோம். இதன் மூலம் சமூகத்திற்கு நம்மால் ஆன சிற்சில உதவிகளை செய்யலாம் என எண்ணியுள்ளோம். முதல் கட்டமாக வேப்பேரி அருகில் உள்ள அரசு ஆதரவற்றோர் மகளிர் இல்லத்துக்கு சென்று 25 புடவைகள் வழங்கினோம். இரண்டாவதாக எங்களது ஆன்மீகப் பயணம் தொடங்கியது. மீஞ்சூர் அருகில் உள்ள தேவதான பெருமாள் கோயிலுக்கும் மற்றும் வைகுண்ட ராஜ பெருமாள் கோயிலுக்கும் எருமைவெட்டி பாளையம் என்ற ஊரில் உள்ள வர முக்தீஸ்வரர் கோயில் மற்றும் திருப்பாலைவனத்தில் இருக்கும் திருப்பாலீஸ்வரர் கோயிலுக்கும் சென்று இந்த கோயில்களுக்கு அபிஷேகப்பொருட்கள்மற்றும்விளக்கேற்றஎண்ணெய் வாங்கித் தந்தோம். திருப்பாலீசுவரர் கோவிலுக்கு 9 கிளை தீபாராதனை தட்டு உபயம் அளித்தோம்.

மூன்றாவதாக காஞ்சிபுரம் அருகில் உள்ள மாற்றுத்திறனாளி பெண்ணிற்கு மளிகை சாமான்கள் வாங்க மூவாயிரம் ரூபாய் தந்தோம். நான்காவதாக நமது இளையபெருமாள் நல்லூர் ஊரில் உள்ள கார்குல மகளிர்க்காக இரண்டு தையல் மிஷின்கள் வாங்கித் தந்தோம். இதன் மூலம் அக்கிராமத்தில் உள்ள மகளிர் தையல் பயிற்சி பெற உதவினோம்.

ஐந்தாவதாக கோமல் என்ற ஊரில் உள்ள நடுநிலைப்பள்ளி மாணவர்களுக்கு ஆங்கில கல்வியில் மேம்பட 64 தமிழ் ஆங்கில அகராதி அளித்தோம். அத்துடன் அந்தப் புத்தகத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதையும் கற்றுத் தந்தோம். ஆறாவதாக சத்தியமங்கலம் அருகில் உள்ள தாளவாடி மலை கிராம மக்களுக்கு ஸ்ட்ரெட்சர் வாங்கித் தந்தோம். இதன் மூலம் அம்மக்கள் மலையில் இருந்து கீழே நோயாளிகளை அழைத்துக் கொண்டு வருவதற்கு உதவினோம்.

ஏழாவதாக ஆன்மீக சுற்றுப்பயணம் திருமழிசையில் உள்ள மூன்று பெருமாள் கோயிகளுக்கும் கோயம்பேடு குறுங்காலீஸ்வரர் கோயிலுக்கும் மற்றும் பஞ்சேஷ்டி யில் உள்ள சிவன் கோயிலுக்கும் சென்று கோயில்களுக்கு தீப எண்ணெய் வாங்கித் தந்தோம். பஞ்சேஷ்டியில் உள்ள சிவன் கோயிலில் சரவிளக்கு 5 சரங்கள் கொண்ட சரவிளக்கு வாங்கி தந்தோம். எட்டாவதாக திருக்கழுக்குன்றம் கிராமத்தில்உள்ளவசதிகுறைவான 31 குழந்தைகளுக்கு தீபாவளிக்கு உடைகள் வாங்கித் தந்தோம். இந்தப் பணிகள் கார்குல மகளிர் சேவை அணியில் உள்ள நம் மகளிர் சொந்தங்கள் இணைந்து ஊர் கூடி தேர் இழுப்பது போல் உதவி வருகிறோம்.

- R. கலையரசி, தமிழக கார்குல மகளிர் சேவை அணி.

குரோம்பேட்டை கார்காத்தார் சங்கம்

17 வது ஆண்டு

மங்கல சந்திப்பு

நாள் : 29-12-2024

இடம் : செல்வம் மஹால் குரோம்பேட்டை

வரன் பதிவை

+91 94888 18162

என்ற whatsapp

எண்ணில் செய்து

கொள்ளலாம்

பதிவு செய்ய கடைசி நாள் :10-12-2024

இங்கே கொடுக்கப்பட்டுள்ள QR Code ஐ Scan செய்யவும் அல்லது வணக்கம் என மேலே குறிப்பிட்டுள்ள எண்ணிற்கு whatsapp அனுப்பவும்

திரையில் உள்ள வழிமுறைகளைப் பின்பற்றவும்

கவனமாக பூர்த்தி செய்து ரூ 600 பதிவு கட்டணமாக செலுத்தி பதிவு எண்ணை பெறவும்.

- செயலாளர்

மணமகன் / மணமகள் தேவை

முக்கிய குறிப்பு : எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 1/12 செல்வி **மு. வித்யா** ரோகிணி குழுமுட பூர்வீகம் : ந.பூலாமேடு, சிதம்பரம் விருப்பம் : நல்ல பண்புள்ள, படித்த வேலையில் உள்ள வரன்	05.06.97 155 cm	B.Sc., B.Ed., (Mathematics) .		திரு. முத்துநாராயணன், 11/8, செல்வவிநாயகர் கோவில் தெரு, புது பெருங்களத்தூர், சென்னை – 600 063. Cell : **99652 54653, 98427 60526, 95009 09820**
B 2/12 செல்வி **S. விஷ்ணுபிரியா** ரோகிணி காங்கவராயர் பூர்வீகம் : மலைக்குடிபட்டி, புதுக்கோட்டை மாவட்டம். விருப்பம் : நல்ல பணியில் உள்ள வரன்	23.08.2000	B.E (CSC)	IT - Pobo Technologies, Trichy Rs. 3.6 Lakhs/PA	திரு. S. சண்முகவேலாயுதம், IOB Opp. மலைக்குடிபட்டி, இலுப்பூர் தாலுகா, புதுக்கோட்டை (DT) – **622 102.** Cell : **90807 62237**
B 3/12 செல்வி **கீ. வைஷ்ணவி** ரேவதி தீவித்திரிய பூர்வீகம் : ஷேஷமூலை விருப்பம் : பணியில் உள்ள வரன்.	14.05.96 145 cm	MCA (Engineering)	Preparing for Govt. Exams	திரு. கு. கிருஷ்ணமூர்த்தி, சீர்காழி Cell : **94898 57190, 88254 26403**
B 4/12 செல்வி **R. பானுபிரியா** கேட்டை – 3ம் பாதம் எரவுட பூர்வீகம் : பெண்ணாடம் (முல்லையூர்) விருப்பம் : சமபணியில் உள்ள பொருத்தமான வரன்	21.11.98 165 cm	B.E. (ECE)	Sr. Software Engineer, Fresh Works Chennai	திரு. T. Ramesh, D.No. 11, SNR Flats, Viswanathapuram Main Road, Kodambakkam, Chennai - 600 024. Cell : **90801 87596, 94445 56972**
B 5/12 செல்வி **S. பிரியதர்சினி** உத்திரம் குளத்துட பூர்வீகம் : மயிலாடுதுறை விருப்பம் : படித்து நல்ல பணியில் உள்ள வரன். குறிப்பு : செவ்வாய் தோஷம் உள்ள வரன்.	03.09.97 165 cm	B.E., (ECE)	தமிழ்நாடு கிராம வங்கி Rs. 5.2 Lakhs/PA	திரு. T. செல்வராஜ், கதவு எண். **118/3,** குரு நகர், வெள்ளாலகரம், S.S. நல்லூர் P.O. மயிலாடுதுறை Tk., – **609 118.** Cell : **75982 91085**
B 6/12 செல்வி **G. Manisha** Makam Kuzhavuda பூர்வீகம் : K.Adur	09.01.96 158 cm	M.S. (Urban Design)	Development Officer New Castle, Sydney, Australia 110K/Australian Dollar /PM	திரு. Giridharan, No. 7, Second Street, Nandanam Extn., Chennai - 600 035. Cell : 94456 29326
B 7/12 செல்வி **G. மகாலட்சுமி** மகம் கனகராய பூர்வீகம் : சிதம்பரம் விருப்பம் : நல்ல பணியில் உள்ள வரன்.	15.11.95 165 cm	B.E. (EEE)	Software Company	திரு. R. ஞானசம்மந்தம், No. 2, மின் நகர் மெயின் ரோடு, இராமகிருஷ்ணா பள்ளி அருகில், சிதம்பரம் Cell: **99769 97310, 88258 54226 90954 68213** (W)

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 8/12 செல்வி **V. Deepthi** Vishakam 1st Patham Munathariya பூர்வீகம் : Ukkarai, Thiruppanandal விருப்பம் : Good Behaviour, Well educated and in good job.	24.03.2000 158 cm	B.E (Printing Technology)	Senior Member Technical staff HCL Tech Ltd., Sholinganallur Rs. 6 Lakhs/PA	திரு. G. Venkatesan 161 A/3, 8th West Street, Co-operative Nagar, Senthangudi, Mayiladuthurai. Cell : 94861 69536, 04364 - 251299 E-mail : venkatbsnlmyd@gmail.com
B 9/12 செல்வி **S.U. Chitradevi (a) Sankari** Poorattathi Vangaarudaiya பூர்வீகம் : Vilampatti, Thiruparankundram விருப்பம் : B.E. or Master's Degree Software Engineer or Equal Profession, Chennai / Madurai / Dindigul	11.5.99 5' - 3"	B.E (ECE)	Software Engineer (NIQ Pvt. Ltd.,) Chennai Rs. 40,000/PM	திரு. S. Sivasubramanian 11-1-22D/4, 11th Ward, New Street, Nilakottai, Dindigul - 624 208. Cell : 94880 59018, 63816 51557
B 10/12 செல்வி **G. Keerthika** Karthigai Kozhundhida பூர்வீகம் : Melaperumpallam	19.02.2002 154 cm	B.Com., M.Com (CS)	Lab Assistant in Sri KGS Arts and Science College, Sivaikundam	திரு. A. Gunasekar, 16, Annai Nagar, Dhanalakshmi Nagar Extn., Reddipalayam Road, Thanjavur - 613 009. Cell : 75984 21372 / 73975 67303
B 11/12 செல்வி **M. தனலட்சுமி** உத்திரம் 4ஆம் பாதம் பழுவுட பூர்வீகம் : பெண்ணாடம் விருப்பம் : சமபடிப்பு	07.05.98 154 cm	B.Tech (CS)	Software Professional EPSILON Bangalore Rs. 10 Lakhs/PA	திரு. K. மணிகண்டன், G1, Ashok Manor, Ruby Builders, 5/2, Kalamegam Street, East Tambaram, Chennai - 600 059. Cell : **94447 11045, 99416 20355**
B 12/12 செல்வி **மு. திவ்யபிரியா** கேட்டை – 2ம் பாதம் வஞ்சனமுட பூர்வீகம் : செந்துறை (அரியலூர் மாவட்டம்) விருப்பம் : டிகிரி முடித்த நல்ல பணியில் உள்ள வரன்.	02.06.96 161 cm	B.A. (English) DPPE		திரு. ச. முருகேசன் பிள்ளை, **1/53**, நடுத் தெரு, வஞ்சினபுரம் (PO), செந்துறை (Tk), அரியலூர் மாவட்டம் – **621 714.** Cell : 96263 97559 / 85319 86109
B 13/12 செல்வி **லக்ஷ்மிபிரியா R.** பரணி ஆதங்குட பூர்வீகம் : ஒரத்தூர் (நாகப்பட்டிணம்)	**18.6.2001** 159 cm	D. Pharm		திரு. கா. ரமேஷ்குமார், **84**, அபிராமபுரம், M.C. ரோடு, தஞ்சாவூர் Cell : **87783 68039 / 74489 68039**
B 14/12 செல்வி **கா. லெட்சுமிபிரியா** மகம் சாத்துக்குட பூர்வீகம் : மணல்மேடு, இராதாநல்லூர் விருப்பம் : சமபடிப்பு நல்ல பணியில் உள்ள வரன்.	**21.03.97** 163 cm	B.Tech (Civil)	Software Engineer Chennai	திரு. க. கார்த்திகேயன், 7/295C, முருகையா நகர், புளியம்பேட்டை, அம்மாசத்திரம் (PO), திருவிடைமருதூர் (Tk), கும்பகோணம் – **612 103.** Cell : **94866 48536** (W), **79043 80537**
B 15/12 செல்வி **கவுஸல்யா சங்கரநாராயணன்** மிருகசீரிடம் 4ம் பாதம் வஞ்சிரமுட பூர்வீகம் : சிதம்பரம் விருப்பம் : அமெரிக்காவில் வேலை செய்யும் H1B யுடன் (or) Ph.D., படிக்கும் வரன்	**30.04.98**	அமெரிக்காவில் M.S.	தற்போது Ph.D. மூன்றாம் ஆண்டு	திரு. R. சங்கரநாராயணன், D4202, Mandarina Apt., 7, Lock Street, Kotturpuram, Chennai - 600 085. Cell : **94451 46979** +**968 – 95827225** (Whatsapp)
B 16/12 செல்வி **சு. கிருபாவதி** ரோகிணி காருடை பூர்வீகம் : விளாங்குறிச்சி	**10.07.99** 157 cm	M.Com.,	Private Concern	திரு. V.S. சுந்தரமூர்த்தி, 9, கலைஞர் நகர், அறிவொளி நகர், கோவைபுதூர், கோயம்புத்தூர் – **641 042.** Cell : **98434 86361, 95433 48875**

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 1/12 செல்வன் **R. ராம்குமார்** பரணி விளந்துட பூர்வீகம் : கள்ளிக்காடு, தாழஞ்சேரி வட்டம்	21.10.94	B.E. (Computer Science)	Prop. Winmac Solutions Rs. 6,00,000/PA	திரு. V. ராதாகிருஷ்ணன், 9, அருண் நகர் முதல் குறுக்குத் தெரு, திருஇந்தளூர், மயிலாடுதுறை – 609 001. Cell : 99763 57572
G 2/12 செல்வன் **த. குருபிரசாத்** கேட்டை ஆலத்துட பூர்வீகம் : வள்ளுவக்குடி – சீர்காழி	26.05.94 175 cm	B.E. (E&I)	System Test Engineer Trane Technologies, Bengaluru	திரு. த. தண்டாமரைக்கண்ணன், "பசு இல்லம்" 45, பிடாரி தெற்கு வீதி, சீர்காழி – 609 110. நாகப்பட்டினம் மாவட்டம். Cell : 94437 05069
G 3/12 செல்வன் **பா. தினேஷ் ராஜ்** அஸ்வினி வில்வராய பூர்வீகம் : கருவாழக்கரை விருப்பம் : பணிபுரியும் பெண்ணாக இருந்தால் சிறந்தது (கட்டாயமில்லை)	02.05.92 176 cm	B.E. (Mechanical)	Maintenance Engineer, Arni Engineering Technology (P) Ltd., Chennai Rs. 4.30 Lakhs/PA	திரு. கோ. பாஸ்கரன், 1/64, தெற்கு வெள்ளாழத்தெரு, கருவாழக்கரை (PO), தரங்கம்பாடி தாலுக்கா, மயிலாடுதுறை மாவட்டம். Cell : 944370 3677, 63692 69113
G 4/12 செல்வன் **R. Karthikeyan** Karthigai Kothanuda பூர்வீகம் : Mullaiyur	28.08.94 5' - 10"	B.Tech., (Computer Science)	Zoho Corporation Chennai Rs. 24 Lakhs/PA	திரு. T. Ramalingam, 1/183, Perumal Koil Street, Mullaiyur, Sendurai Tk., Ariyalur Dt., Cell : 99655 57000
G 5/12 செல்வன் **S. Amuthan** Moolam First Padham Nedu Valuda பூர்வீகம் : Okkakudi, Thiruvaiyaru	14.05.98 181 cm	DME., B.A., M.A.,	Safety Technician Southern Railway Chennai Division	திரு. S. Bothini, No. 47-A, Fifth Street, Yasodha Nagar, Kilkattalai, Chennai - 600 117. Cell : 73059 22781
G 6/12 செல்வன் **M. சரவணன்** திருவாதிரை வங்காரமுட பூர்வீகம் : வானமாதேவி–காட்டுமன்னார்குடி விருப்பம் : படித்த குடும்ப பாங்கான பெண்.	08.07.94 170 cm	B.E. (ECE)	Cognizant Technologies Solutions, Senior Process Executive Rs. 5 Lakhs / PA	திரு. B. முத்துக்குமரன், வெள்ளாழத் தெரு, வானமாதேவி & PO, காட்டுமன்னார்கோவில் Tk.–608 701. Cell : 91768 40787, 91764 65658
G 7/12 செல்வன் **மோ. சாமிநாதன்** அவிட்டம் 2ம் பாதம் சோமங்கலுட பூர்வீகம் : சோழமாதேவி	09.06.93 173 cm	B.E. (Civil)	Own Construction Rs. 6 Lakhs/PA	திரு. C. வெங்டாஜலபதி, 183/2, வெள்ளாழத் தெரு, அம்பிகாபுரம், சோழமாதேவி (PO), உடையார்பாளையம் (Tk) அரியலூர் (Dt.) – 612 902. Cell : 90032 79822, 85248 37347, 99657 50981
G 8/12 செல்வன் **B. கார்த்திகேயன்** அவிட்டம் (1ம் பாதம்) விளந்துட பூர்வீகம் : சித்தர்காடு விருப்பம் : சமபடிப்பு	15.12.96 5' - 8"	B.E. (Mechanical Engineering)	Indium Software (India) Pvt. Ltd., Rs. 8 Lakhs/PA	திரு. T. பாலு, 197, ராஜம்மாள் நகர், (சம்பந்தர் குளம்), சித்தர்காடு, மயிலாடுதுறை – 609 003. Cell : 63824 96149 96262 08993 (W)

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 9/12 செல்வன் **சா. அசுமதி** கேட்டை குளத்துட தில்லைவிடங்கன் (சீர்காழி)	03.11.97 157 cm	B.E., (Computer Science)	System Administrator Kyndryi, IBM, Chennai Rs. 50,000/PM	திரு. S. சாமிநாதன், 5/500, Treasury Colony, Nandhavanapatti, Dindigul - 624 001. Cell : **94434 22469, 92451 70111, 90439 86890**
G 10/12 செல்வ **R. ராகுல்** ரேவதி – 02 சாத்தனுட பூர்வீகம் : பெருஞ்சேரி (மயிலாடுதுறை) விருப்பம் : படித்த பணியில் உள்ள வரன்	15.8.95 5' - 7"	B.E. (EEE).,	Software Professional (Azentio, Chennai) Rs. 5.40Lakhs/PA	திரு. V. ராஜீ 388C/2, செட்டித் தெரு, சேந்தங்குடி, மயிலாடுதுறை – **609 001.** Cell : **97865 93037, 88255 02182**
G 11/12 செல்வன் **நந்தகுமார் அரசு** அனுஷம் சேக்கிழார் பூர்வீகம் : ஈரோடு விருப்பம் : நல்ல பணியில் உள்ள பொருத்தமான வரன்	06.10.97 5' - 8"	MBA (HRM) B.Sc. (CS)	வீடியோ எடிட்டர் ரேவா டிஜிட்டல் சொலுசன் சென்னை	திரு. கு. விஸ்வநாதன், **78/2,** பெருமாள் காடு, டீசல் செட் அருகில், சென்னிமலை ரோடு, ஈரோடு – **638 009.** Cell : **97512 70594**
G 12/12 செல்வன் **S.R. பாலாஜி** ரோகிணி முதனுட பூர்வீகம் : கோட்டவம் –காட்டுமன்னார்குடி விருப்பம் : சமபடிப்பு	30.1.96 180 cm	B.Tech., MBA	IT Company, Admaxim-India (P) Ltd., Software Engineer (Java Developer) Rs. 50,000/PM	திரு. S. ராமதாஸ், **17,** காமராஜ் வீதி, தாகூர் நகர், இலாசுப்பேட்டை, பாண்டிச்சேரி – **605 008.** Cell : **94425 80571, 86108 73478**
G 13/12 செல்வன்**ச. வெற்றிவேல்** மூலம் வேளா பூர்வீகம் : சத்தியவாடி	12.4.93 5' - 8"	10th Std.	ஜெயின் ஜூவல்லரி விருத்தாசலம்	திரு. கோ. சண்முகம், அஞ்சலக தெரு, சத்தியவாடி, விருத்தாசலம் Tk, கடலூர் மாவட்டம் – **606 110.** Cell : **88705 67983, 82203 63369**
G 14/12 செல்வன் **R.விக்னேஷ்** மகம் விளந்துட பூர்வீகம் : இருக்கை–நாகப்பட்டினம்	09.5.95 175 cm	DME., (B.Tech)	IT Comany நிரந்தர பணி Allison Transmission Oragadam Rs. 4.40 Lakhs/PA	திரு. S. ராஜசேகர், 5/79, கனி தொழி தெரு, விக்னராஜபுரம், வேங்கைவாசல், சென்னை – **600 073.** Cell : **87667 27182, 96265 44459**
G 15/12 செல்வன் **R. Vijayaprakash** அவிட்டம் மழுவதரிய	11.01.97 5' - 7"	B.E. Civil and Structural	Prestige Group of Construction Company, K2K Infrastructure Pvt. Ltd., Bengaluru Rs. 30,000PM	திரு. S. Rajendran No. 29, Nethaji Street, Chidambaram - 608 001. Cell : **82485 74115, 98651 25385**
G 16/12 செல்வன் **S.செங்குட்டுவன்** அஸ்வினி விக்கிரமங்கலம் பூர்வீகம் : பொன்னமுடையார்	19.8.92 175 cm	B.E. (Mechanical Eng.)	Mechanical Engineer, Singapore	திரு. சா. சுப்ரமணியன் போஸ்ட் ஆபீஸ் தெரு, விக்கிரமங்கலம், அரியலூர் மாவட்டம் – **621 701.** Cell : **86757 63850, 73389 34255**

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 17/12 செல்வன் **ந. பார்த்திபன்** உத்திரம் காங்கேய பூர்வீகம் : பிள்ளைப்பாளையம்	**13.09.96** 176 cm	M.Tech	Ford Global Tech Business Centre Sholinganallur, Chennai	திரு. S. Natarajan, 7/1, Parvathi Ammal Nagar, Kannangudi Road, Chidambaram - 608 001. Cell : **63793 39989**
G 18/12 செல்வ **S. ரவீன்குமார்** சதயம் 1ம் பாதம் கனகராய பூர்வீகம் : திருநெல்வேலி விருப்பம் : பணிபுரியும், பணிபுரிய விருப்பமுள்ள வரன்.	**21.11.93** 175 cm	M.Tech..	Senior Engineer, VLSI Multicoreware Inc. Under inc Rs. 22 Lakhs/PA	திரு. A. சங்கர் 28 & 29, VGN Highness, Vikramaditya Street, Iyyappanthangal, Chennai - 600 056. Cell : **78459 14635, 86670 33721, 94447 48490** E-mail : spvrk1956@gmail.com
G 19/12 செல்வன் **K. மணிவேல்** கேட்டை முதனுட பூர்வீகம் : மதுராந்தகநல்லூர் (சிதம்பரம்) விருப்பம் : படித்த பணியில் உள்ள வரன்/ பணிக்கு செல்ல விருப்பமுள்ள வரன்	**15.02.93** 6' - 0"	B.E., (EEE),	Jr. Asst. Commercial Tax Rs 36,000/PM	திரு. T. கேசவன், 5/234-2, நியூ அம்பேத்கர் நகர், ஜாகீர்ரெட்டிப்பட்டி, சேலம் – **636 302.** Cell : **94422 59692**

மார்கழி பூவும் வீதி வலமும்.

தமிழ் மாதங்களின் மார்கழி மாதத்தை சிலர் தவிர்த்து வருவதும், மார்கழி மாதத்தை வழிபாடு செய்ய உகந்த மாதம் என்றும் போற்றக்கூடிய மாதமே மார்கழி. ஏராளமான பொக்கிஷமான பண்பாடு நெறி முறையில் வழிபாடு செய்தால் நம் உடல்நிலை ஆரோக்கியமாகவும், வாழ்வதற்கே சிறப்புக்குரிய மாதம் இறைவன் வழி வகுத்த மாதமே மார்கழி. இவ் மாதத்தில் மிக சிறப்பு பெண்கள் விரும்பும் மார்கழி பனியில் கோலமிடுதலே.

மார்கழிமாதங்களில்இல்லத்தை அழகுபடுத்தும் இல்லற பெண்களின் கனவுகள் நினைவாகும் மாதமே மார்கழி, மலர் வனத்தில் மலர் எடுத்து அதனை தொடுத்து இறைவனுக்கு அணிவித்து ஓவின தாரகை ஒளி; ஒளி உதயத்து ஒருப்படுகின்றது என திருப்பள்ளி எழுச்சி பாடலைப் பாடி மகிழ்ந்து இறைவனை உணரலாம். திருப்பாவை கூட்டத்தோடு ஆலய வீதி வலம் போற்றி என் வாழ் முதல் ஆகிய பொருளே என்று பாடி ...

ஆலயம் சென்று வழிபடும் போது தனுர் மாத வீதி வலம் இன்பத்தை மகிழ்கின்ற தருணம் கோழிகளும் சிலம்ப சிலம்ப. அது ஒரு அழகும். இல்ல வாயில் மார்கழி பாவைகளை பாடி வரவேற்கும் பெண்களும் கலந்து கொண்டு ஆலயம் இறைவன் வழிபாட்டில் நிறைவில் சோதி திறம் பாடி சூழ் கொன்றைத்தார், பாடிய நம் மனம் சிந்தனையும், உடலும் சீர்நிலை பெறுவது நன்றாக உணரலாம். மார்கழி மாத நன்னாளில் ஆலய வலமும் வீதி வலமும் வந்தால் சிறப்பான வாழ்வு தரும் மாதமே மார்கழி, இல்லத்தில் கோலமிட்ட இடத்தில் செம்பருத்தி பூக்கள், மலர்ந்த பரங்கி பூக்கள் வைத்தால் வாழ்ந்த முன்னோர்களின் நல் அருளும் கிடைக்கும் என்பது சான்று.

மார்கழி மாதத்தில் ஸ்ரீலெட்சுமி அம்பாள் வருவதாக ஐதீகம் ஆலயம் சென்று ஸ்ரீ சிவபெருமானையும் ஸ்ரீவிஷ்ணுப் பெருமானையும் தரிசனம் செய்து திருவெம்பாவை பாடல், திருப்பாவை பாடி ஸ்ரீ லெட்சுமி, அம்பாள் வீடு தேடி வந்து அருளை வழங்குவார் என்று சான்றோர் கருத்து.

மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளில் வரவேற்போம்; மார்கழி பூவின் வாசத்தோடும், வீதிவலத்தோடும் ஸ்ரீ லட்சுமி அம்பாளை வரவேற்போம்.

- S.R. குமாரி சுவாமிநாதன்,
ஆச்சாள்புரம்.
9751730940

பரவசமூட்டும் பெருமாள் தரிசனம்

சீர்காழிக்கு அருகே உள்ள திருநாங்கூர் திவ்யதலம், காஞ்சிபுரத்தைப் போலவே அதிக எண்ணிக்கையில் (11) திவ்யதேசங்களைக் கொண்டது. திருநாங்கூரில் ஆறும் அதைச் சுற்றி 4 கிலோ மீட்டர் சுற்றளவில் ஐந்து திவ்யதேசப் பெருமாள் எழுந்தருளியிருக்கிறார்கள். வருடா வருடம் தைமாத அமாவாசைக்கு மறுநாள் இந்த பெருமாள்கள் யாவும் தத்தம் கருட வாகனங்களில் திருமணிமாடக்கோயில் என்ற திவ்யதேசத்தில் எழுந்தருள்வதால் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் 11 பெருமாள்களின் தரிசனம் கிடைக்கும். இதற்கு புராணக்கதை உண்டு.

பரமேஸ்வரரின் மாமனார் தட்சன் தன் மருமகனை அவமதிக்க வேண்டி ஒரு யாகம் நடத்தினான். அனைத்து தேவர்களையும், கடவுளர்களையும் அழைத்தவன் பரமேஸ்வரனை அழைக்கவில்லை. தன் மகளை கயிலைநாதன் மணந்ததால், தான் அவரை விட உயர்ந்தவன் என்ற மமதையில் இருந்தான். விவரம் கேள்விப்பட்ட மகேஸ்வரன், அம்பிகை இருவரும் மிகுந்த கோபம் கொண்டனர். அம்பிகை நியாயம் கேட்க போவதாக கூறியதும் அங்கு போனால் நியாயம் கிடைக்காமல் அவமானப்பட நேரிடும் என இறைவன் எச்சரித்தார். ஆனால் மகேஸ்வரி பொறுமையில்லாமல் யாகத்திற்கு சென்று அவமானப்பட்டு யாகத்தீயில் வீழ்ந்தாள். இதைக் கேள்விபட்ட ஈசன் ருத்ர தாண்டவம் ஆடினார். பூலோகம் தேவயோகம் யாவும் நடுங்கியது. திருநாங்கூரில் ஆடிய ஆட்டத்தில் அவரது சடாமுடியிலிருந்து ருத்ரன் தோன்றினார். இவ்வாறு 11 ருத்ரன் தோன்றி ஈசனுடன் சேர்ந்து கோரத்தாண்டவம் ஆடினர். தேவர்கள் யாவும் திருமாலைத் துதிக்கவே திருமால் தோன்றி ஈசனின் கோபத்தையும், திருமால் 11 பெருமாளாகத் தோன்றி 11 ருத்ரர்களின் கோபத்தையும் அடக்கி சாந்தமூர்த்தி ஆக்கினார். 11 பெருமாள் இங்கே திருநாங்கூரைச் சுற்றி 11 கோவில்களில் எழுந்தருளுமாறு ஈசன் வேண்டினார். இதுவே நாங்கூர் திவ்யதேசங்கள் ஆகியது.

1) திருமணிமாடக்கோயில் – நாராயணப் பெருமாள் – பத்ரி நாத் தலத்தில் உறையும் நாராயணனே.

2) திருவைகுந்த விண்ணகரம் – வைகுந்த நாதன் – பரமபதத்தில் அருள்புரியும் நாதனே.

3) திருஅரிமேய விண்ணகர குடமாடும் கூத்தர் – கோவர்த்தனகிரிதாரி கிருஷ்ணனே.

4) திருசெம்பொன்செய் கோயில் அழகிய மணவாளன் – உறையூரில் கோயில் கொண்டுள்ள அழகிய மணவாளன்.

5) திருத்தெற்றியம்பலம் பள்ளிக்கொண்ட பெருமாள் – ஸ்ரீ ரங்கத்து அரங்கனே.

6) திருமணிக்கூடம் வரதராஜப் பெருமாள் – காஞ்சிபுரத்து வரதனே.

7) திருக்காவளம்பாடி ராஜகோபாலன் – துவாரகை கிருஷ்ணனே.

8) திருபார்த்தன் பள்ளி தாமரையாள் கேள்வன் – குருஷேத்திரம் மற்றும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதியே.

9) திருவண்புருஷோத்தமன் – அயோத்தி ராமனே.

10) திருத்தேவனார் தொகை தெய்வநாயகன் – திருவிடந்தை பெருமாளே.

11) திருவெள்ளக்குளம் அண்ணன் பெருமாள் – திருமலை ஸ்ரீநிவாசனே.

வடநாட்டுப் பெருமாளை தரிசிக்க முடியாதவர்கள் வைகுண்ட ஏகாதசியில் ஒட்டு மொத்தமாக 11 பெருமாள்களையும் தரிசித்து பயன் அடையலாம்.

பெருமாள்களை மங்களா சாசனம் செய்த திருமங்கை ஆழ்வார் விக்ரகமாகவும் அரூபமாகவும் காட்சியளிக்கிறார். கருட சேவைக்கு திருமணி மாடக் கோயிலைச் சுற்றியுள்ள வயல்களில் நெற்பயிர்கள் சலசலக்குமாம். அதுவே திருமங்கை ஆழ்வார் வருகிறார் என்பதன் அறிகுறி. அவ்வாறு சத்தம் கேட்கும் வயல்களில் விளைச்சல் அமோகமாக இருக்குமாம்.

இறைவன் சடாமுடியில் இருந்து விழுந்த 11 ருத்ரன்களும் 11 சிவன் கோயில்களாக திருநாங்கூரில் ஐந்தும் அதை சுற்றியும் மற்ற கோயில்களாகவும் அமைந்துள்ளன. சிவன் ராத்திரியில் 11 சிவனையும் தரிசிப்பது பலன் தரும்.

ஏகாதசியில் பெருமாளையும், சிவன் ராத்திரியில் சிவபெருமானையும் நானும் எனது தங்கை அமெரிக்க வாழ் பாரதி அவரது கணவர் இளங்கோவனும் தரிசித்து வந்தோம். (சென்ற வருடம்)

யாவரும் தரிசித்து பயன் பெற வேண்டும்.

– தாரிணி தியாகராஜன்,
மயிலாடுதுறை.

திருவிளையாடற் புராணம்

56, இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்.

– 'சிவகாமியின் செல்வன்'

டாக்டர் தி. பாலசுப்பிரமணியன்.

குலேச பாண்டியன் குணம் :

சண்பகமாறன் சிவபதம் அடைந்த பின்னர் அவனது வழிவந்த பதினைந்தாவது பாண்டியன் குலேசபாண்டியனாவான். அரசருள் சிறந்த இவன் இலக்கண இலக்கியங்களில் வரம்பு கண்டவன். எத்தகைய பெருநூலையும் இனிதே அறிந்தவன். அதனால் முத்தமிழ்ப் புலவர் இருக்கும் சங்கப்பலகை அம் மன்னனுக்கு ஏற இடங்கொடுத்தது. அதனாலோ என்னவோ கல்விச் செருக்கு அவனிடம் குடி கொண்டது. செருக்குவரின் பொறாமை உடன் வந்து விடும். ஆக குலேச பாண்டியன் குணம் திரிந்தது.

இடைக்காடனை அவமதித்த குலேசன் :

கலைகள் முற்றுணர்ந்த கபிலனிடத்தில் பேரன்பு கொண்ட நண்பன் இடைக்காடன். இவன் ஒரு பெரும்புலவன். இவன் ஊர் மதுரைக்குக் கிழக்கேயுள்ள இடைக்காட்டூர் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவ்வூரையேப் பெயராகக் கொண்ட இடைக்காடன் ஒரு தமிழ்ப் பிரபந்தம் பாடிச் சென்று அரசனைக் காண்போம்' என்றெண்ணி, தான் இயற்றிய நூலுடன் பாண்டியனிடம் சென்றான். வந்த நோக்கத்தைக் கூறினான். தான் இயற்றிய உரையமைந்த பனுவலை வாசித்தான். அப்பொழுது சொற்சுவை பொருட்சுவை இரண்டையும் பாகுபடுத்தி நுகரவல்ல குலேச பாண்டியன் பொறாமையால் கல்லாகச் சமைந்தான். தலையை அசைக்கவில்லை. அகமகிழ்ச்சியை முகத்தில் காட்டவில்லை. ஏதும் உரைக்கவில்லை. மொத்தத்தில் நல்ல பனுவலைச் சுவைக்க மறுத்தான். பொறாமை மட்டும் கண்களில் காட்சியளித்தது. கற்றோரால் பெரிதும் விரும்பப்படும் நல்ல புலவனான இடைக்காடன் துணுக்குற்றான். மானம் அவனை உந்தித்தள்ள வெளியேறினான். நேரே திருக்கோயிலைச் சென்றடைந்தான்.

இறைவனிடம் முறையிட்ட இடைக்காடன் :

இடைக்காடன் இறைவன் திருமுன் விழுந்து வணங்கினான். எழுந்தான். திருவாலவாயுடைய நாயகனே! தமிழறியும் பெருமானே ! உன்னை அடைந்தோர்க்கு அருளும் தயாநிதியே ! கல்வியில் சிறந்த பாண்டியனிடம் பா ஒன்று இயற்றிப் படிக்கச் சென்றேன். சொற்சுவை பொருட் சுவை மிக்க அதனைப்பாடி விளக்கினேன். அவன் சிறிதும் தலை அசைக்காமல் அவமதித்தான். பாடும் பாவலனுக்கு ஒரு பயனும் வழங்கா அஃறிணைப் பொருள் போல் உணர்வற்று அசைவற்று இருந்தான். அவன் அடியேனாகிய என்னை இகழவில்லை;இல்லை. தமிழை இகழ்ந்தான். சொல்லின் வடிவமாகிய உமையவளையும் அச்சொல்லின் பொருளான உம்மையுமே இகழ்ந்தான். அதனால் எனக்கு வந்த குறையாது ? என்று கூறிவிட்டு தாளாத சினத்துடன் வடதிசை நோக்கிச் சென்றான்.

சிவன் இடைக்காடன் பின் போதல் :

இடைக்காடன் கூறிய சொற்கள் கூர்வேல் படையென பெருமானின் திருச்செவிகளில் தைத்தன. இடைக்காடனுக்கும் அவனது நண்பன் கபிலனுக்கும் மனமகிழ்ச்சி உண்டாக்கும் பொருட்டு ஞானமயமாகிய தமது இலிங்க வடிவத்தை மறைத்து உமையவளோடு எழுந்தார் பெருமான். தமது திருக்கோயிலுக்கு நேர் வடக்கே வைகை ஆற்றின் தென் பக்கத்தே ஒரு திருக்கோயிலை ஆக்கிக்கொண்டு அதன்கண் இனிதே எழுந்தருளினார். அங்கேயே தங்கியருளினார். சங்கப் புலவர்களும் ஒருசேர எழுந்து சிவபெருமான் சென்ற வழியே சென்று அங்கு தங்கினர்.

அடியார்கள் மன்னரிடம் சென்று மதுரை மாநகர் பொலிவிழந்ததைக் கூறல் :

அடுத்த நாளின் வைகறைப் பொழுதில் இறைவனைச் சேவிக்கச் சென்ற அடியார்கள் சிவலிங்கத்தைக் காணாமல் திடுக்கிட்டனர். இஃது என்ன அதிசயமோ என்று ஐயுற்று வருந்தினர். மன்னனிடம் முறையிடச் சென்றனர். வழியில் மதுரையைப் பார்த்தனர். உயிர்க்காதலனைப் பிரிந்த காதலி போலவும், இலக்குமியைநீத்த தாமரை போலவும் மதுரை பொலிவிழந்து போனதைக் கண்டனர். நேரே மன்னனைச் சந்தித்தனர். "மன்னா ! ஒன்றைச் சொல்ல அஞ்சுகிறோம். திருப்பள்ளி எழுச்சியிலே சோமசுந்தரரைத் தரிசிக்கச் சென்றோம். ஆனால் அங்கு சிவலிங்கத் திருமேனியைக் காணவில்லை. அதனால் மதுரை மாநகர் முழுதும் பொலிவிழந்து போயிற்று" என்றனர்.

தொடரும்...

வருந்துகிறோம்.

சீர்காழி தாலுக்கா, திருவள்ளுவர் நகர், திரு. P.S. வேலாயுதம் பிள்ளை (தலைமை ஆசிரியர் ஓய்வு, முன்னாள் பொருளாளர் மற்றும் செயலாளர்) அவர்கள் 1–11–24 காலை இயற்கை எய்தினார்கள் என்பதையும்,

சீர்காழி தாலுக்கா, திருப்புங்கூர் திரு. இரமேஷ்குமார் அவர்களின் தகப்பனார் திரு. C. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் 4–11–24 அன்று இரவு இயற்கை எய்தினார்கள் என்பதையும்,

சீர்காழி தாலுக்கா, கன்னியா குடி தெய்வதிரு. N. வள்ளல்நாதன் பிள்ளை அவர்கள் மனைவி திருமதி. தங்கபாப்பு ஆச்சி அவர்கள் 21–11–24 இயற்கை எய்தினார்கள் என்பதையும் சீர்காழி சங்கம் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறது.



சிறுவர் பகுதி

தயாரிப்பு **தஞ்சை தியாகு**
அலைபேசி: 94437 00375
Email: thiagu1943@gmail.com

இந்த உலகமே உன்னைத் திரும்ப பார்க்கவேண்டுமென்றால், நீ யாரையும் திரும்பிப் பார்க்காதே

நாம் இந்தியரென பெருமை கொள்வோம்!

உலகிலேயே முதன் முதலில் மருத்துவசிகிச்சை என்ற அறிவியல் தோன்றியது இந்தியாவில்தான். உலகின் முதல் மருத்துவ நூல் எழுதப்பட்டதும் இந்தியாவில்தான். அது வெறுமனே சிகிச்சை முறைகளை மட்டும் சொல்லவில்லை.மனித உடலின் உட்பாகங்களை அலசி ஆராய்ந்தது. கருவில் குழந்தை எப்படி வளர்கிறது என்பதைத் துல்லியமாக கணித்துச்சொன்னது.

அறுவை சிகிச்சை செய்வது எப்படி என்று சொன்னது 1769 முதல் 1799 வரையிலான அந்த முப்பதாண்டுகளில் ஹைதர் அலியும் அவரது மகன் திப்பு சுல்தானும் பிரிட்டிஷ் படைகளோடு மோதிய தீவிர போரின் போதுதான் பிரிட்டிஷ்காரர்கள் இரண்டு பாடங்களைக் கற்றனர்.

1. ராக்கெட் தொழில் நுட்பம்: திப்பு சுல்தானின் படை,லோக்கல் விஞ்ஞானிகள் தயார் செய்த ராக்கெட்டுகளை ஏவிவிட,அவர்கள் மிரண்டு ஓடினார்கள்.அந்த ராக்கெட்டுகளை லண்டனுக்கு எடுத்துப்போய் அவர்கள் தொடர்ந்து செய்த ஆராய்ச்சி ஐரோப்பிய நாடுகள் முழுமைக்கும் பரவி ராக்கெட் மற்றும் ஏவுகணை தொழில் நுட்பம் பரவ வழிவகுத்தது.எத்தனையோ நாடுகள் இதனால் வல்லரசாக உருவெடுத்தாலும் ,இதை முதலில் உலகுக்குக் கொடுத்தது இந்தியாதான்!

2. பிளாஸ்டிக் சர்ஜரி: அழகியல் அறுவை சிகிச்சை என்று இப்போது உலகம் முழுவதும் பிரபலமாகி,மைக்கேல் ஜாக்சனில் ஆரம்பித்து ஸ்ரீதேவி வரை பலர் தங்களை அழகாக்கி கொள்ளச் செய்து கொள்ளும் இந்த சிகிச்சை முறையின் பூர்வீகம் இந்தியாதான்.

நாட்டு வைத்தியர் ஒருவர், நெற்றியிலிருந்து தோலை அறுத்தெடுத்து மூக்கில் ஒட்டவைத்து இப்படிச் செய்தார்!. பானை செய்வதை முழு நேரத் தொழிலாகக்கொண்ட ஒரு மராத்தியக் குயவர் ராணுவ மருத்துவ மனயில் இரண்டு பிரிட்டிஷ் டாக்டர்கள்முன்னிலையில் காவாஸாஜிக்கும் மற்ற நான்கு பேருக்கும் புதிய மூக்கைப்பொருத்தும் ஆப்பரேஷனைச் செய்தார் அந்த வைத்தியர்! இத்தகைய அறுவை சிகிச்சை முறையை பற்றி மூன்றாயிரத்து ஐந்நூறு வருடப் பாரம்பரியம் மிக்க ஒரு மருத்துவ முறை இருந்துவந்துள்ளது தெரியவருகிறது.

உலகில் முதன் முதலாக நதிக்கரையில் குடியமர்ந்து ,

விவசாயத்தைக் கற்றுக்கொண்டு, நாகரிக சமுதாய வாழ்க்கையை தொடங்கி வைத்தது இந்தியர்கள்தான்.பருத்தி ஆடைகளை நெய்து முதலில் அணியத் தொடங்கியதும் இந்தியர்தான். ஆயுர்வேத முறைப்படியான அறுவை சிகிச்சைக்குத் தந்தையாகக் கருதப்படுபவர் சுஸ்ருதர். காசி எனப்படும் வாரணாசியில் இரண்டாயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்குமுன்னர் சுஸ்ருதர் வாழ்ந்ததாகக் கருதப்படுகிறது. பிளாஸ்டிக் சர்ஜரியின் பிதாமகர் என்று இப்போது உலகம் முழுக்கக் கொண்டாடப்படும் சுஸ்ருதர், சிறந்த அறுவை சிகிச்சை நிபுணரும்கூட! இவரது சுஸ்ருத சம்ஹிதை எனும் நூலில் கண்புரை நோய் எனப்படும் காட்டராக்ட் ஆப்ரேஷன், மூட்டு மாற்று ஆப்ரேஷன், பிளந்த உதடுகளை சரிசெய்யும் ஆப்ரேஷன், சிசேரியன் ஆப்ரேஷன் ஆகியன பற்றியும் வியக்கத்தக்க செய்திகளை அறியமுடிகிறது.

குறள் 127: யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல் இழுக்குப்பட்டு .

ஒருவர் எவற்றை அடக்காவிட்டாலும் நாக்கு ஒன்றையாவது தீய சொற்களைப் பயிலாமல் அடக்கியாள வேண்டும். அங்ஙனம் அடக்கியாளா விட்டால் பேசும்போது சொற் குற்றத்திற்கு ஆளாகிப் பெரிதும் துன்பப் படுவர்.

விடுகதைகள்.

1.பாயில் படுக்காமல் நோயில்லாமல் இளைக்கிறது.இது என்ன ?
2.இரவும் பகலும் ஓய்வு இல்லை.அவன்படுத்தால் எழுப்ப ஆளில்லை.அவன் யார் ?
3.வாலில் ஊசியுடன் திரியும் வம்பு டாக்டர்..அவர்யார் ?
4.சிறகில்லாத பறவை ஊரெல்லாம் சுற்றும்.அது என்ன ?
5.ஓடையில் ஓடாத நீர்,ஒருவரும் குடிக்காத நீர் ?என்ன நீர் ?
6.ஓட்டை வாய் உள்ளவனுக்கு விழுந்த பல் முளைக்கவே இல்லை.இது என்ன ?
7.ஓட்டம் நின்றால் ஆட்டம் போச்சு.இது என்ன ?
8.குழந்தைக்கு எந்தக் கை பலமான கை ?
9.ஊரைச் சுமந்தபடி உயரத்தில் பறப்பான்.அவன் யார் ?
10.கடித்தால் துவர்ப்பு ,தண்ணீர்குடித்தால் இனிப்பு.இது என்ன ?
11.தலைக்குக் கவசம். உயிருக்குப் பாதுகாப்பு.அது என்ன ?
12.ஓசையிடுவான்,உணவு சமைப்பான்.அவன் யார் ?
13.பள்ளம் பார்த்தால் பாய்ந்து செல்வான்.அவன் யார் ?
14.சடக்கென்று வருவான்,சத்தமிட்டுப் போவான்.அவன் யார் ?

புனைப்பெயர்கள்

1.சிவப்பு நகரம்	ஜெய்ப்பூர்
2.இந்தியாவின் நுழைவுவாயில்	மும்பை
3.கோவில் நகரம்	மதுரை
4.பொற்கோவில் நகரம்	அமிர்தசரஸ்
5.அரபிக்கடலின் அரசி	கொச்சி
6.இந்தியாவின் ஹாலிவுட்	மும்பை
7.அரண்மனை நகரம்	கொல்கத்தா
8.இந்தியாவின் வெனிஸ்	ஆலப்புழை
9.தென்னிந்தியாவின் மான்செஸ்டர்	கோவை
10.தமிழகத்தின் நெற்களஞ்சியம்	தஞ்சை

சேகரியுங்கள் :

குற்றங்கள்மூலம் நியாயங்களைச் சேகரியுங்கள்.
தவறுகளின் மூலம் அனுபவத்தைச் சேகரியுங்கள்.
கர்மத்தின் மூலம் ஞானத்தை சேகரியுங்கள்.
நண்பர்களின்மூலம் புத்தியைச்சேகரியுங்கள்.

சுமை தாங்கி

சிறுமியாய் நானிருந்தபோது	தோளில் தம்பியின் சுமை
மனைவியாய் நானிருந்தபோது	மனத்தினுள்ளே மணவாளனின் சுமை
தாய்மையில் நானிருந்தபோது	வயிற்றில் கருவின் சுமை
தாயாக நானிருந்தபோது	கையில் சேயின் சுமை
பாட்டியாய் நானிருந்தபோது	மடியில் பேரனின் சுமை
முதுமையில் நானிருந்தபோது	சுமந்தவர்களுக்கெல்லாம் சுமையாய் நானிருக்கின்றேனாம் ?

ஒன்றுமுதல் பத்துவரை எண்களில் பெயர்கள்கொண்ட ஊர்கள்.

ஒண்ணுபுரம், இரண்டாம் கட்டளை, மூன்றடைப்பு,நாலு வேதபதி, அஞ்சு கிராமம் ஆறுபாதி, ஆறுகாட்டுத்துறை, ஏழுகிணறு, எட்டுகுடி, ஒன்பத்துவேலி, கோவில் பத்து.

உங்களுக்குத்தெரியுமா ?

1. காந்திஜீ தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது, அவரை ஆங்கிலேயர்கள் ஒரு ரயிலில் இருந்து பிடித்துத் தள்ளிவிட்டனர்.அந்த ரயில் இன்னமும் அங்கு ஓடிக்கொண்டிருக்கிறது. நெல்சன் மண்டேலாதான் இந்த ரயிலுக்கு மகாத்மா காந்தி எக்ஸ்பிரஸ் என்று பெயரிட்டார்.
2. எகிப்தியர்கள் பழங்காலத்தில் பேப்பரஸ் என்ற தாவரத்தின் மூலம் காகிதங்களை தயாரித்தனர். இதன்காரணமாகவே பேப்பர் என்ற சொல் உருவானது.
3. உலகிலேயே மிகப்பெரிய நூலகம் மாஸ்கோவில் உள்ள லெனின் நூலகம். 2 கோடி நூல்கள் உள்ளன.
4. சயன்ஸ் என்பது லத்தீன் மொழிச்சொல் இதற்கு எனக்குத்தெரியும் என்பது பொருள்.
5. செயற்கை வெப்பத்தினால் பனி மலைகள் உருகத்தொடங்குவதைத் தடுக்காவிட்டால் 2025 ம் ஆண்டு, 300 கோடி மக்களுக்கு உலகில் தண்ணீர்கிடைக்காமல் போய்விடும்.

ஆசிரியர்

கரும்பலகையில் 1000 என்று எழுதிவிட்டு , தன் வகுப்பறையில் தொடர்ந்து இடையூறு ஏற்படுத்திக் கொண்டிருந்த ஒரு மாணவனைப்பார்த்து அவனது கணித ஆசிரியர் ...இது எவ்வளவு ... என்று கேட்டார்.நம்பிக்கையுடன் இருந்தாலும், கேள்வியின் எளிமை கண்டு சற்று அவமானமாக உணர்ந்து, ...ஓராயிரம்...என்று பதிலளித்தான். இப்போது ஆசிரியர் கூடுதலாக ஒரு பூஜ்ஜியத்தை அந்த எண்ணின் வலப்பக்கம் 10000 என எழுதிவிட்டு அது எவ்வளவு என்று அவனிடம் மீண்டும் கேட்டார்.பத்தாயிரம் என்று உடனடியாகப் பதில் வந்தது. இப்போது இன்னொரு பூஜ்ஜியத்தை அந்த எண்ணின் இடப்பக்கம் 010000 என்று எழுதிவிட்டு ,அது எவ்வளவு என்று கேட்டார்.அதே பத்தாயிரம் என்று அவன் பதில் கூறினான். ஆசிரியர் அவனைப்பார்த்து கண்சிமிட்டிப் புன்னகை பூத்தவாறே ,ஒரு முக்கியத்துவமற்ற எண் ஒரு முக்கியம் வாய்ந்த எண்ணைப்பின் தொடர்ந்து செல்லும்போது அதன் மதிப்பு கூடுகிறது. அதே எண் அந்த முக்கியத்துவம் வாய்ந்த எண்ணிற்கு முன்னால் செல்ல முயற்சிக்கும்போது அதற்கு மதிப்பேதும் இல்லை.

அது போன்றதுதான் ஆசிரியருக்கும் ,மாணவருக்கும் இடையே உள்ள உறவும்.ஒரு மாணவன் தன் ஆசிரியரைப் பின் தொடர்ந்து சென்றால் அவனது மதிப்பு கூடுகிறது.

நல்லவை பத்து

1. தினமும் ஒருமணி நேரமாவது டி.வி. செல்போனை அணைத்து விட்டு குடும்பத்துடன் நேரத்தைச் செலவிடுங்கள். உறவுகள் வலுப்பட இது உதவும்.
2. தினமும் காலையில் பத்து நிமிடமாவது மொட்டை மாடியிலோ,வீட்டுத் தோட்டத்திலோ உலாவுங்கள். இயற்கை யோடு கலப்பது டென்ஷனைக் குறைக்கும்.காலை வெளிச்சம் உடலுக்கும் நல்லது.
3. தினமும் ஒருவரையாவது பாராட்டுங்கள். மற்றவர்களை நாம் பாராட்டினால் தான் நம்மையும் மற்றவர்கள் பாராட்டுவார்கள்.
4. நண்பர்களை மாதம் ஒருமுறையாவது சந்தியுங்கள்.உங்கள் இளமைக்காலத்தை அது ஞாபகமூட்டும்.
5. முடிந்தவரை வீட்டுக்கு அருகில் உள்ள மார்க்கெட் , கோயில் மற்றும் பிற இடங்களுக்கு நடந்து செல்லுங்கள். இது உங்கள் பர்ஸ்க்கும் உடலுக்கும் நல்லது.
6. நீங்கள் எத்தனை மணிக்கு எழவேண்டுமோ அதற்கு 10நிமிடம் முன்னதாக அலாரத்தை செட்செய்யுங்கள். அந்த பத்து நிமிடத்தில் ஆழ்ந்து மூச்சுவிட்டு ரிலாக்ஸ் செய்துகொள்ளுங்கள்.
7. சாப்பாட்டுக்கு முன் சிறிது பழங்களைச் சாப்பிடுங்கள். இது உங்கள் பசியைக் குறைத்து நீங்கள் அதிக கலோரிகள் சாப்பிடுவதைத் தவிர்க்கும்.
8. கோபம் வரும்போது மூச்சை நன்றாக ஆழ்ந்து இழுத்து விடுங்கள். கோபம் பறந்து மனம் சாந்தமாகும்.
9. எல்லோரிடனும் நட்பாக இருங்கள்.ஒருவர்மீது கோபப்படுவதால் எதுவும் நடந்துவிடாது.
10. வாரத்துக்கு ஒரு முறையாவது நல்ல இசையை கேளுங்கள். நல்லபுத்தகங்களைப் படியுங்கள். மனதுக்கு இதமாய் இருங்கள்.

1. ஆணுக்குப்பிரசவம்

என்ன வாசகர்களே! ஆண் எவ்வாறு பிரசவிக்கமுடியும் என்கிறீர்களா ?

குழப்பம் வேண்டாம் .ஆம் 1.620 செ.மீ அளவே உடைய கடல் குதிரை என்றழைக்கப்படும் ஹிப்போகாம்பஸ் மீன் 1 முதல் 5 ஆண்டுகள் வாழ்கின்றது.இம் மீனினத்தில் பெண் முட்டை இடுவதோடு சரி. இம் முட்டைகளை ஆண் மீன்கள் வாங்கி தனது வயிற்றுக்கு முன்புறம் அமைந்த அடைகாப்புப்பையில் வைத்து கவனமாக அடைகாக்கின்றன. முட்டையினின்று வெளிவரும் குஞ்சுகள் வளர்ந்து அடைகாப்புப்பையை கிழித்துக்கொண்டு வெளிவருகின்றன. இதனால் ஆணுக்கு பிறசவ வேதனை ஏற்படத்தான் செய்கிறது.தொடர்ந்து குஞ்சுகள் வளரும் வரை பிற எதிரிகளிடமிருந்து பாதுகாக்கும் பொறுப்பினையும் ஆண் மீன் ஏற்றுக்கொள்கிறது. சின்னாத்தஸ் எனும் குழாய் மீனினத்திலும் இவ்வாறே ஆண்கள் பிரசவிக்கின்றன என்றால் நம்பு கிறீர்களா ?

பெற்றோரிடம் சிறிய கோரிக்கை!

பெற்றோரிடம் சிறிய கோரிக்கையை வைக்கின்றேன். உங்கள் குழந்தைகள் இயல்பாகப் படிப்பதற்கு வாய்ப்பை உருவாக்கித் தாருங்கள்.எக்காரணத்தைக் கொண்டும் குழந்தைகளை மற்றவர் களுடன் ஒப்பிட்டு குழந்தையை பதற்றமடையச் செய்யாதீர்கள். பதற்ற மடையும் குழந்தை நடுக்கத்திலும் பதற்றத்தினாலும் பாடத்தை நினைவில் வைத்துக்கொள்ள இயலாது படிக்கும் எண்ணம் தடை பட்டு விடுகிறது.அவர்களை இளைப்பாறச்செய்யுங்கள். அவர்களின் அச்சத்தை நீங்கள்தான் போக்கவேண்டும்.உங்களின் அச்சத்தை அவர்கள் மீது திணிக்காதீர்கள்.உங்கள் குழந்தைகள் உங்களைவிட திறமையானவர்கள் என்பதை முதலில் உணருங்கள்.ஒருவேளை உங்கள் குழந்தை உங்களை வேறு குழந்தையின் பெற்றோர்களோடு ஒப்பிட்டால் அதை உங்களால் ஏற்றுக்கொள்ளமுடிகிறதா ? என்பதை மட்டும் சிந்தித்துப் பாருங்கள்.வாழ்க்கை என்பது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமாக வேறு படுகிறது. உங்கள் குழந்தையின் ஆர்வத்தை, ஆற்றல் திசையை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

இரண்டாவதாக நான்வைக்கும் கோரிக்கை,தயவுசெய்து உங்கள் குழந்தைகளின் இறந்த காலத்தை மறந்துவிடுங்கள்.அதனை நினைவு படுத்துவதால் எந்தப் பயனும் விளையப் போவதில்லை.நேற்று அவன் படிக்காமல் இருந்திருக்கலாம்.அதனால் நீ படித்து என்ன கிழிக்கப் போகிறாய் என்று பேசவேண்டியதில்லை.

நேற்று அவன் கணக்கில் கவனம் செலுத்தாமல் இருந்திருந்தால்,உனக்கு கணக்கே வராது என்று சொல்ல வேண்டியதில்லை.பூகோளத்தில் பற்று இல்லாமல் இருந்தால் ,அதற்காக நீ பூகோளத்தில் மக்கு என்று பேசவேண்டியதில்லை.

இன்றிலிருந்து ஒரு புதிய மனிதனாய் அவன் புறப்படமுடியும்வாசிக்கின்ற புத்தகங்களை எல்லாம் நேசிக்கமுடியும்.ஓர் ஓவியன் ஓவியத்தைத்தீட்டுவதுபோல அவன்கல்வியை கிரகித்துக் கொள்ளமுடியும்.அது சாத்தியம்தான்.

அவனை உற்சாகப்படுத்துங்கள்.அவனுக்கு நம்பிக்கைத்தாருங்கள்.நம்பிக்கை தரமுடியாதவர்கள் தயவுசெய்து அவர்களைத்தாழ்வு மனப்பான்மைக்குத் தள்ளாதீர்கள். அவர்கள் படிப்பதற்கு உதவியாக இருங்கள்.அவர்கள் படிக்கின்றபோது நீங்கள் அமைதியாக இருந்து படிப்பதற்கு உதவியாக இருங்கள். படிக்கின்ற சூழ்நிலையை உருவாக்கித் தாருங்கள். அவன் படித்து முடித்து ,சற்று மனதை இலகுவாக்கிக் கொள்ள தொலைக்காட்சியின் முன்பு அமர்ந்தால் ,அல்லது வேறொரு புத்தகத்தை வாசித்தால் ,அந்த நேரத்தில் அவர்களைப் படிக்கச் சொல்லி கட்டாயப் படுத்தாதீர்கள்.கல்வி என்பது நாம் திணிக்கத் திணிக்கத் திசை மாறிப் போவது.வற்புறுத்த வற்புறுத்த வழி நழுவிச் செல்வது.அதனை இயல்பாக்க நம் குழந்தைகளை ஊக்கப் படுத்தவேண்டும்.

ஒவ்வொரு குழந்தையிடமும் இருக்கின்ற அற்புத ஆற்றலை வெளிக்கொண்டு வருவதற்கு நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதுதான் முக்கியம்.அதைச் செய்வதற்கான சாத்தியக் கூறுகளை உருவாக்கி அக்குழந்தைகளுக்கு நாம் உதவவேண்டும்.அதன் மூலம் அக் குழந்தைக்கே ஒரு பொறுப்புணர்வு உருவாக வேண்டும்.

...நீ நல்ல மதிப்பெண் வாங்க வேண்டும். அதுதான் என்விருப்பம்.உன்மேல் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது...என்று சொன்னால் அந்தக்குழந்தைக்கே பொறுப்புணர்வு வந்துவிடும்.அது படிக்கின்றபோது மிகுந்த கவனத்துடன் ஆழ்ந்து வாசிக்கும்.ஒவ்வொரு வரியும் அதன் மனதில் உடன் பதிந்துவிடும்.புரிந்து படிக்கும்.வெற்றிக்கனிகள் அதன் மடியில் வந்து விழும்.

சிறந்த ஆசிரியர்கள் யார்?

நடந்ததைச் சொல்பவர் சரித்திர ஆசிரியர். நடக்கப்போவதைச்சொல்பவர் பத்திரிக்கை ஆசிரியர்.
நடக்கப்போவதை கணிப்பவர் ஜோதிடர். நடக்கக் கூடியதை ஆராய்பவர் விஞ்ஞானி.
நடக்கச் சாத்தியமற்றதை நடத்தி முடிப்பதாகக் காதில் பூச்சுற்றுபவர் அரசியல் தலைவர்.

விடுகதை விடைகள்.

1.காலண்டர் 2.கடிகாரம் 3.தேள் 4.பட்டம் 5.இளநீர் 6. சீப்பு 7.இதயம் 8.அழுகை
9.விமானம் 10.நெல்லி 11.ஹெல்மெட் 12.குக்கர் 13.நீர் 14.மின்னல்

சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் சுமார் 150 க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் தங்களது சிறப்பான செயல்பாடுகளை சங்க செய்திகளாக அனுப்பி வருவதை வெளியிட்டு வருகிறோம். அதற்கு உதவும் வகையில், சங்கச் செய்திகளை அனுப்புபவர்கள் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் சுருக்கமாக மூன்று பாராக்களுக்கு மிகாமல் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். அதிகமான பாராக்களுடன் வரும் செய்திகள், சுருக்கி கொடுக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நங்கநல்லூர் :

சங்கத்தின் மாதாந்திர கூட்டம் சங்க கட்டட வளாகத்தில் 17–11–2024 அன்று மலர்ச்சி இறைவணக்கப் பாடல் தொடர்ந்து தலைவரது வரவேற்புடன் துவங்கியது.

இரங்கல் நிகழ்வாக சங்க ஆலோசகர் திரு. V. சண்முகசுந்தரம் அவர்களது சகோதரர் திரு. V. சம்பந்தம், அசோக்நகர் (E.B. ஒய்வு) நங்கநல்லூர் திரு. S. கோவிந்தராஜன் பிள்ளை அவர்களது துணைவியார் திருமதி. இராஜேஸ்வரி அம்மாள், மாநில சங்க கூட்டமைப்பின் சென்னை மண்டல செயலாளர் திரு. சிதம்பரம் பிள்ளை அவர்களது மறைவுக்கும், நங்க நல்லூர் – லட்சுமி நகர் பகுதியில் வசிக்கும் திரு. R. சேகர் அவர்களது அன்பு மகள் திருமதி. பிரியாவின் அகால மரணத்துக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. மேலும் சங்க இணைச்செயலாளர் திரு. V. கண்ணன், சங்க உறுப்பினர் திரு. V. பாபு ஆகியோரது தந்தையார் திரு. K. வெங்கடேசன் பிள்ளை – வயது 92 (பூர்வீகம் கீழ்நத்தம் சிதம்பரம்) சென்னையில் 20–11–2024 அன்று இயற்கை எய்தியதை ஒட்டி சங்க நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மகளிரணியினர் நேரில் சென்று மலர் அஞ்சலி செலுத்தி இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

சங்க செயலாளரால் சென்ற மாதத்திய கூட்ட அறிக்கையும் தொடர்ந்து சங்கத்தின் பிற நிகழ்வுகளும் விவரிக்கப்பட்டது. பொருளாளர் திரு. V. செல்வக்குமார் அவர்கள் சமர்ப்பித்த வரவு – செலவு – கையிருப்பு விவரத்தினை குழு ஏற்றுக்கொண்டது.

திரு. S. செல்வகுமார் நிறுவனர் (ம) தலைவர், ஆனந்தம் இளைஞர் நல அமைப்பு அவர்களது தன்னலமற்ற சமுதாய சேவையினை பாராட்டுகின்ற வகையில் சென்னை – கிண்டி ரோட்டரி சங்கம் "Paropagari Award" வழங்கியதற்கும், நம் இன தொழிலதிபர் திரு. A. சண்முகவேலாயுதம் பிள்ளை அவர்களது IPL நிறுவனத்தின் 50 ஆண்டு கால வளர்ச்சிக்கும் பாராட்டும் வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது.

5–1–2025 அன்று சென்னை மூவரசன்பேட்டையில், வியாபாரிகள் சங்க திருமண மண்டபத்தில் நடைபெற இருக்கின்ற சங்கத்தின் 37–வது ஆண்டு விழாவினை சீரும் சிறப்புமாக கொண்டாடுவதற்கு அனைத்து வகையிலும் மிகுந்த ஒத்துழைப்பினை செயற்குழுவிடம் கோரப்பட்டது.

செயற்குழு உறுப்பினர் திரு. A. வைத்தியநாதன் நன்றி நவில கூட்டம் இனிது நிறைவடைந்தது.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு திருமதி. R. கலையரசி மற்றும் திருமதி. D. வனஜா இணைந்து மதிய உணவு வழங்கியது சிறப்பு. நன்றி. வாழ்க வளமுடன்!

– க. சரவணன், தலைவர்.

அண்ணாநகர் :

அண்ணாநகர் மேற்கு வி.என்.எஸ் மகாலில் 10–11–2024 அன்று, திரு. பாலகுமார் அவர்களின் பேரன் பிறந்தநாள் விழாவோடு சங்கத்தின் கூட்டமும் உறவினர்கள் புடைசூழ நடைபெற்றது. திரு. எஸ். பாலகுமார் – மணிமேகலை, திரு. பி. முத்துகுமார், வனிதா ஆகியோரது பேரனும், விக்னேஷ் – மதுமிதா மகனுமான செல்வன் நிலன் முதல் பிறந்த நாளுக்கு வாழ்த்து சொல்லப்பட்டது. இந்த கூட்டத்திற்கு இராதா இன்ஜினியரிங் சேர்மன் திரு. வெங்கடேசன் பிள்ளை, D. செந்தில்குமார், M.D., திரு. முருகானந்தம், திரு. பத்மநாபன் ஆகியோர் வந்திருந்தது சிறப்பாக இருந்தது.ஆண்டு விழாவின் ஆண்டு மலர், சுவர்கடிகாரம் அடங்கிய அன்பளிப்பு பையை கார்குல

வள்ளல் திரு. வெங்கடேசன் பிள்ளை அவர்களுக்கு திரு. எஸ். பாலகுமார் அவர்களும், தலைவர் ஜெ. கோபாலகிருஷ்ணன் அவர்களும் வழங்கி கௌரவித்தார்கள். மதிய சிறப்பு உணவுடன் கூட்டம் நிறைவு பெற்றது. நன்றி!

– என். ஆனந்தகணபதி,
செயலாளர்.
9094682811

பெருங்களத்தூர் :

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 24–11–2024 அன்று சிவாலி ஹாலில் துணைத்தலைவர் திரு. S. சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. துணைத்தலைவர் அனைவரையும் வரவேற்று, விளையாட்டுப் போட்டிகள் பொதுக்குழு கூட்டம் மற்றும் ஆறாவது ஆண்டு விழா ஆகியவற்றை சிறப்பாக நடத்தித்தர செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்கிட கேட்டுக் கொண்டார்கள்.

2025–ஆம் ஆண்டிற்கான சங்கத்தின் மாதாந்திர காலண்டர்,25–12–2024–ல்நடைபெறவுள்ள விளையாட்டு மற்றும் இதர போட்டிகளுக்கான சுற்றறிக்கை 04–01–2025 அன்று நடைபெறவுள்ள பொதுக்குழு கூட்ட அறிவிப்பு மற்றும் ஆறாவது ஆண்டு விழாவிற்கான அழைப்பிதழ் அனைத்து உறுப்பினர்களுக்கும் செயற்குழு உறுப்பினர்கள் மூலமாக டிசம்பர் முதல்வாரம் முதல் நேரடியாக வழங்கவும் சந்தா நன்கொடைகளை பெறவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

2025–ஆம் ஆண்டிற்கான மாதாந்திர காலண்டரில் விளம்பரம் கொடுத்து உதவிய சிவாலி ஹால், அதியா இன்டிரீயர்ஸ், மாஸ் கம்பியூட்டர்ஸ், பிராபிட் கேவிஷன் மற்றும் கணேஷ் எண்டர்பிரைசஸ் உரிமையாளர்களுக்கு சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது. 2025–ம் ஆண்டு காலண்டரை மிகவும் நேர்த்தியான முறையில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே அச்சடித்து வழங்கிய திரு. A. முனியப்பன் அவர்களுக்கு (மேனாள் துணைத்தலைவர், தமிழ்நாடு மாநில கார்காத்த சங்க கூட்டமைப்பு) (கோதா விலாஸ் ஆப்செட்) சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

நமதுசங்கஉறுப்பினர்திரு.S.சங்கரநாராயணன் (கொழையூர்) அவர்களின் மாமியார் திருமதி. தங்கம் அம்மையார் (நெல்லை) அவர்களின் மறைவிற்கு சங்கத்தின் சார்பாக துணைத்தலைவர் திரு. S. சீனிவாசன், செயலாளர் திரு. G. இராஜகோபாலன் ஆகியோர் இன்று 24–11–2024 நேரில் சென்று அஞ்சலி செலுத்தி வந்தார்கள் என்பதை பதிவு செய்வதுடன் அம்மையாரின் மறைவிற்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திரு. V. பாலசுப்ரமணியன் இணைச்செயலாளர் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– கோ. இராஜகோபாலன்,
செயலாளர்.

சீர்காழி :

செயற்குழு கூட்டம் 9–11–24 அன்று சங்க கட்டிடத்தில் முன்னாள் தலைவர் திரு. S. முருகன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

1. சங்க உறுப்பினர், மற்றும் அவர்களது உறவினர்களின் மறைவுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

2.2025–ம் ஆண்டிற்கான நாட்காட்டி உறுப்பினர்கள் அனைவருக்கும் டிசம்பர் 30–ம் தேதிக்குள் கொடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

3.2025–ம் ஆண்டின் பொங்கல் பண்டிகையை சங்க கட்டிடத்தில் மகளிர் அணி கொண்டாடுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

பொருளாளர் திரு. ரவிச்சந்திரன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

மயிலாடுதுறை :

செயற்குழு கூட்டம் 03–11–2024 அன்று சங்கத் தலைவர் திரு. R. முருகானந்தம் அவர்கள் தலைமையில் மகளிரணியின் இறைவணக்கத்துடன் இனிதே ஆரம்பமானது. செயலர் அறிக்கையை திரு. A. ராசேந்திரன் வாசிக்க பொருளாளர் திரு. R. சந்திரசேகரன் வரவு – செலவு அறிக்கை வாசித்து அதற்கு ஒப்புதல் பெறப்பட்டது.

இன்றைய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :

புதிய பொறுப்பாளர்களை தேர்ந்தெடுப்பதற்காக தேர்தல் ஆணையராக சீனிவாசபுரம் திரு. P. சுவாமிநாதன், இணை ஆணையராக திருவள்ளுவர் நகர் திரு. R. ஆனந்தன் அவர்களையும் நியமிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

தேர்தல் அட்டவணை : வேட்பு மனுத்தாக்கல் செய்யும் நாள். 15–11–2024 முதல் 21–11–2024

நேரம் : மாலை 4 மணி – 6 மணி வரை இடம் : நகர சங்கம் மயிலாடுதுறை.

வேட்பு மனு பரிசீலனை : 22–11–2024 வேட்பு மனு திரும்ப பெறுதல் : 23–11–2024 தேர்தல் நாள் : 24–11–2024

மாலை 4.00 Pm to 6.00 Pm புதிய பொறுப்பாளர்கள் பதவி ஏற்பு 8–12–2024. சங்க நிகழ்வுகளின் நிறை, குறைகளை மாதந்தோறும் நடைபெறும் செயற்குழு கூட்டத்தில் மட்டுமே விவாதிக்க வேண்டும் என்றும் பொது வெளியில் விவாதிக்க வேண்டாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

சங்க பொறுப்பாளர்களை தேர்ந்தெடுக்கும் பொழுது பின்பற்றுகின்ற நடைமுறையில் திருத்தம் செய்து சங்க துணை விதி எண் 10–ன் படி பொறுப்பாளர்களை தேர்ந்தெடுப்பது என தீர்மானிக்கப்பட்டது.

இணைச்செயலர் திரு. S. ஞானசேகரன் நன்றியுரை அடுத்து இரங்கல் தீர்மானத்துடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- R. முருகானந்தம்,
தலைவர் (பொ).

செம்பொன்னார் கோவில் :

சங்க கூட்டம் 06–11–24 அன்று சங்கத்தின் செயலாளர் திரு. ச. நெடுஞ்செழியன் இல்லத்தில் நடைபெற்றது. சங்க தலைவர் வர முடியாத சூழ்நிலையால் மு. மண்டல செயலாளர் திரு. கோ. வடிவேலு பிள்ளை அவர்கள் தலைமையில் இறைவணக்கம் சங்க மூத்த உறுப்பினர் திரு. S. பாஸ்கரன் பிள்ளை பாடிடவும் வரவேற்புரை சங்க செயலாளர் திரு. ச. நெடுஞ்செழியன் பிள்ளை ஆற்றிடவும், சென்ற மாத கூட்டறிக்கையை திரு. கோ. வடிவேலு பிள்ளை வாசிக்கவும், சென்ற மாத வரவு – செலவு அறிக்கையை சங்க பொருளாளர் திரு. M.C. செல்வராஜ் பிள்ளை வாசிக்கவும் கூட்டம் அதனை ஏற்றது. கூட்ட தலைவர் திரு. கோ. வடிவேலு பிள்ளை அவர்கள் உரையில் சங்க மாதாந்திர கூட்டம் எப்போதும் போல் இனிவரும் காலங்களில் 2025 ஜனவரி முதல் சங்க உறுப்பினர்கள் ஒவ்வொருவர் இல்லங்களிலும் நடத்துவதற்கு முன் கூட்டியே அவர்களாக முன் வந்து சங்க பொறுப்பாளர்களிடம் கூறி முடிவு செய்ய வேண்டும் என்று கூறினார்கள். சங்க பொருளாளர் திரு. M.C. செல்வராஜ் பிள்ளை அவர்கள் உரையில் தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்புடன் செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் 28–9–2024 அன்று அரியலூரில் நடைபெற்ற பொதுக்குழுவின் நிகழ்வுகளை தெளிவாக வரப்பெற்ற அறிக்கையை வாசித்தார்கள். மேலும் சங்க செயலாளர் எதிர் வரும் 2025–ஆம் ஆண்டிற்கு காலண்டர் அச்சடித்தல் பற்றி கூறி கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது. மேலும் மு. மாநில துணைத்தலைவர் திரு. கணபதி நடனம் பிள்ளை அவர்கள் உரையில் சங்கம் வளர்ச்சி குறித்தும் கூட்டத்திற்கு அவசியம் உறுப்பினர்கள், இளைஞர்கள், மகளிரணி சகோதரிகள் கலந்து கொள்ள வேண்டும் என்றும் சங்க கூட்டம் மாதந்தோறும் உறுப்பினர்கள் இல்லத்தில் நடத்துவதற்கு முன் கூட்டியே முன் வர வேண்டும் என்றும் கூறினார்கள். சங்க செலவில் பிஸ்கட், டீ வழங்கப்பட்டது. சங்க உறுப்பினர் திரு. ச. வரதராஜன் பிள்ளை நன்றி கூறிட கூட்டம் இரவு 9.00 மணியளவில் நிறைவு பெற்றது.

S. நெடுஞ்செழியன், செயலாளர்,

பரசலூர் :

03–11–2024 அன்று சங்க கூட்டம் பரசலூர் சித்தி விநாயகர் தெரு, V. கண்ணன் ராஜேஸ்வரி இல்லத்தில் மு. ராஜேஸ்வரி இறைவணக்கம் பாட V. கண்ணன் வரவேற்புரை நிகழ்த்த தலைவர் க. காவிந்தராஜன் பிள்ளை தலைமையில் கூட்டம் துவங்கியது.

செயலர் வீ. கண்ணன் பிள்ளை சென்ற மாத அறிக்கையையும், தலைவர் க. கோவிந்தராஜன் பிள்ளை மு.அ. நிதிய அறிக்கையையும் வாசிக்க நிதி சம்மந்தமான பதிவேடுகள் அனைத்தும் உறுப்பினர்களின் பார்வைக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. பரசலூர் சங்கத்தின் சார்பில் உலகெங்கும் வாழும் கார்குல சொந்தங்களுக்கு புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்கள், தெரிவிக்கப்பட்டது. பரசலூர் கார்காத்தார் குடும்பங்களுக்கு மாதாந்திர காலண்டர் கொடுப்பது என முடிவெடுக்கப்பட்டது. 14–1–2025 செவ்வாய்கிழமை கிருஷ்ண பக்ஷம், பிரதமை திதி, பூச நட்சத்திரம், மேஷ லக்னம் கூடிய தினம் 12–40 (பகல்) மணிக்கு மேல் தை முதல் தேதி மகர ராசியில் பிரவேசிக்கிறார். பொங்கல் வைக்க நல்ல நேரம் காலை 12.00 மணி முதல் 1.00 மணி வரை உத்திராயண புண்ணிய காலம் (நவீன 108 நெம்பர் திருக்கோயில் அனுஷ்டான வாக்ய பஞ்சாங்கம்படி). கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு இனிப்பு, காரம், காப்பி வழங்கப்பட்டது.

சிறப்பு குலுக்கலுக்கான பரிசு V. சிவக்குமார், கோ. பானுமதிக்கும் முறையே கண்ணன், ராஜேஸ்வரி பரிசு பொருளை வழங்கினார்கள்.

கூட்டம் நடத்திய இல்லத்தாருக்கு சங்கத்தின் சார்பில் சால்வை அணிவிக்கப்பட்டது.

திரு. A. ஜெயக்குமார் பிள்ளை நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

– வீ. கண்ணன், செயலர்.

98949 60438

மணிக்கிராமம் :

சங்கத்தின் மாதாந்திர கூட்டம் 13–11–24 அன்று சங்கத்தின் பொருளாளர் திரு. S. பரமநாதன் இல்லத்தில் சங்க தலைவர் திரு. G. அன்பழகன் அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது. முன்னாள் சங்க தலைவர் திரு. M. சிங்காரவேலன் சிவபுராணம் வாசிக்கவும் செயலர் திரு, T, கபிலன் சென்ற மாத அறிக்கை வாசிக்கவும், பொருளர் திரு. S. பரமநாதன் வரவு – செலவு கணக்குகளை படிக்கவும் சங்கம் அதை அப்படியே ஏற்றுக்கொண்டது.

சங்கத்தின் வளர்ச்சி பற்றியும் புதிய உறுப்பினர்கள் அனைவரையும் கூட்டத்திற்கு அழைத்து வர முயற்சி எடுக்க வேண்டும் எனவும் ஆண்டு சந்தாவை உயர்த்தி வசூல் செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். 2025–ம் ஆண்டுக்கு காலண்டர் அச்சு அடிக்க உறுப்பினர்களிடம் கருத்து கேட்கப்பட்டது. பொருளாளர் எல்லா உறுப்பினர்களுக்கும் இனிப்பு, காரம், காபி வழங்கினார்கள். அவர்களுக்கு சங்கம் சார்பாக நன்றி கூறப்பட்டது. இறுதியாக திரு. K. முரளிதரன் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

– கோ. அன்பழகன்,
தலைவர்.

மேலப்பெரும்பள்ளம்

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம், தலைச்சங்காடு சங்க மாதாந்திர கூட்டம் 5.11.24 அன்று தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் இனிதே துவங்கியது. சங்க உறுப்பினர்களை தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் வரவேற்று பேசினார்.

பின்பு 25.11.24 அன்று கார்த்திகை சோமவார அபிஷேகம் பற்றி ஆலோசித்து முடிவு செய்யப்பட்டது. சங்க முடிவின்படி மேலப்பெரும்பள்ளம் ஸ்ரீ வடுவகிர்கண்ணி சமேத திருவலம்புரநாதர் சாமிக்கு 25.11.24 அன்று காத்திகை சோமவார அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக செய்யப்பட்டது.

திருவாளர்கள் S. குமரேசன், B. கண்ணன், R. ராஜசேகர் மற்றும் திருமதி செந்தில் குமாரி பாஸ்கரன் ஆகியோர் தனிப்பட்ட முறையில் அன்னதானம் செய்து சிறப்பித்தது குறிப்பிடதக்கது.

B. இலட்சுமணன், தலைவர்

94437 83743

80 இராதா நல்லூர் :

சங்க கூட்டம் 17–11–2024 அன்று சங்க தலைவர் அவர்கள் இல்லத்தில் தலைவர் T. முத்துக்குமரசாமி அவர்கள் தலைமையில் சங்க செயற்குழு உறுப்பினர் Er. S. சண்முகம் அவர்கள் வரவேற்க கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (1) இம் மாத பிறந்த நாள் மற்றும் திருமண நாள் கண்ட உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. (2) CREW TRUST மூலம் 2024 – 25 ஆண்டிற்கான கல்வி உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்பங்களை முறையாக நிறைவு செய்து தலைவரிடம் விரைவில் கொடுக்குமாறு பெற்றோர்களுக்கு வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது. (3) ஒப்புரவு சந்தாதாரர்களாக இல்லாத குடும்பங்கள் சந்தாதாரர்களாக சேர கேட்டுக்கொள்ளப்பட்டது. (4) இளைஞர் அணி Er. A. இரத்தினவேல் சுப்ரமணியன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

– தி. முத்துக்குமரசாமி,
தலைவர்.

பூம்புகார் - மேலையூர் :

சங்ககூட்டம் 03–11–2024 அன்று செயலருடைய இல்லத்தில் நடைபெற்றது.

டிசம்பர் 29–ம் தேதி ஞாயிறு அன்று நடக்கவிருக்கும் ஆண்டு விழா சம்பந்தமாக ஆலோசனை பெறப்பட்டது. கார்காத்தார் ஒப்புரவிற்கு சந்தா சேகரிக்கப்பட்டது.

உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கிய திரு. S. சுந்தர் அவர்களுக்கு சங்கம் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது. மேலையூர் முருகன் நகரில் வசித்த சங்கத்தின் மூத்த உறுப்பினர் திரு. S. பாலகிருஷ்ணன் பிள்ளை இறைவனடி சேர்ந்தமைக்கு உறுப்பினர்கள் மவுன அஞ்சலி செலுத்தினர்.

இறுதியில் பொருளரின் நன்றியுரைக்குப்பின் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

- R. வெங்கடேசன், பொருளர்.

8886467000

திருவாரூர் :

சங்க கூட்டம் 17–11–24 ஞாயிறு அன்று மாலை 4.00 மணிக்கு திருவாரூர் தெற்கு வீதி தருமையாதீன ராஜாங்க கட்டளை அரங்கில் நடைபெற்றது. திரு. கண்ணபிரான் பிள்ளை, துணைத் தலைவர் தலைமை ஏற்றும், திரு. முத்துக்குமாரசாமி பிள்ளை முன்னின்றும் நடத்தி வைத்தார்கள். கடவுள் வணக்கமாக திருமுறை அனைவராலும் பாடப்பட்டது. தலைவர் உரையில் திரு. கண்ணபிரான் அவர்கள் திருவாரூர் சங்க சென்ற மாத கூட்ட அறிக்கை வாசித்தார்கள். அத்துடன் அடுத்த கூட்டத்தில் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொள்ள கேட்டுக் கொண்டார்கள். திரு. பாலசுப்ரமணியன் இணைசெயலாளர் உரையில் சங்க வளர்ச்சி மற்றும் நடப்பு போன்றவற்றை கூறினார்கள். கலந்து கொண்ட அனைவருக்கும் சங்கம் சார்பில் தேநீர் சிற்றுண்டி வழங்கப்பட்டது. கடைசியாக செயலாளர் சோமசுந்தரம் அவர்கள் ஆன்மீக உரையாக சுந்தரர் வரலாறு என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்கள். திருவாரூர் ரவி அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே முடிவுற்றது.

– அ. சோமசுந்தரம்.

கும்பகோணம் :

சங்க கூட்டம் மற்றும் பொங்கல் விழா ஆலோசனைக் கூட்டம் தாராசுரம், எலுமிச்சங்கா பாளையம் S. குணசீலன் அவர்கள் இல்லத்தில் 10.11.2024 அன்று தலைவர் T.M. வைத்தியநாதன் தலைமையில் M. சந்திரமோகன் துணைத்தலைவர் முன்னிலையில் நடைபெற்றது.

இறைவணக்கம் R. ஆனந்தன் அவர்கள் வழங்க கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் S. குணசீலன் வரவேற்புரை ஆற்ற S. விஜயகுமார் செயலாளர் அறிக்கை A.S. பழனி பொருளாளர் அறிக்கை, M. சாமிநாதன், புரவலர் அறிக்கை, S. குணசீலன் பசிப்போர் புசிக்க அறிக்கை வாசிக்க அனைவராலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

29–10–2024 அன்று முதியோர் இல்லத்தில் தீபாவளி முன்னிட்டு புத்தாடை மற்றும் காலை உணவும் திரளாக கலந்து கொண்ட உறுப்பினர்களால் வழங்கப்பட்டது.

6–4–2025 அன்று மங்கல சந்திப்பு நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

மங்கல சந்திப்பு தொடர்புக்கு

MRK. பாண்டியன் – 9442013459

S. விஜயகுமார் – 9443984770

A.S. பழனி 8870342493

கூட்ட முடிவில் T.S. சூரியநாராயணன் துணை செயலாளர் அவர்கள் நன்றி கூற மாதாந்திர கூட்டம் இனிதே நிறைவுற்றது.

- S. விஜயக்குமார்,
செயலாளர்.

மதுரை :

10–11–2024 அன்று நவம்பர் மாத செயற்குழு கூட்டம் நடைபெற்றது. சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் K. ராஜேந்திரன் அவர்கள் கடவுள் வாழ்த்து பாடினார். முனைவர் K. சிவசுப்ரமணியன், தலைவர் செயலாளர் பா. ரவிச்சந்திரன், பொருளாளர் S. முருகன் அவர்கள் தலைமையில் நடந்தது சங்கத்தின் மதிப்புறு ஆலோசகர் இரா. கணேசன் மாநி.ல துணைத்தலைவர் S. உமையொருபாகம் மற்றும் துணை செயலாளர்கள் S. சுந்தரராஜன், N. இராமலிங்கம், C. கார்த்திகேயன் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் T. ராதாகிருஷ்ணன், R. பசுங்கிளி மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அரியலூரில் நடந்த (28–9–24) பொது குழு தீர்மானங்கள் தலைவர் வாசிக்க முழு சம்மதத்துடன் ஏற்றுகொள்ளப்பட்டது.

செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் கூடி நமது மதுரை மாவட்ட சங்கத்திற்கு ஒரு அறக்கட்டளை உருவாக்க வேண்டும் என்று கோரப்பட்டது. மூத்த உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் அதற்காக ஒரு குழு உருவாக்க வேண்டும் என கூறினார்கள். அதன் அடிப்படையில் திரு. முருகன் அவர்கள் தலைமையில் உறுப்பினர்களாக திரு. உமையொருபாகம் திரு. சொக்கலிங்கம், திரு. இராமலிங்கம் அவர்களுடன் உருவாக்கப்பட்டு அவர்கள் அறக்கட்டளையின் பெயர் மற்ற செயல் திட்டங்கள் வகுத்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டு சங்கத்தின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் பின் மூத்த உறுப்பினர் திரு. இரா. கணேசன் அவர்களின் திருப்புகழ் விழாவில் கலந்து கொண்ட சங்கத்தினர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டு கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

– பா. ரவிச்சந்திரன்,
செயலர்.

கோவை :

சங்க கூட்டம் திரு. வேங்கடம், I. மண்டல செயலாளர் அவர்களின் இல்லத்தில் 16–11–2024 அன்று நடைபெற்றது. திரு. வள்ளிநாயகம் அவர்களின் மகள்கள் கலைஸ்ரீ ரஞ்சனா, ரம்யஸ்ரீ, ரஞ்சனா அவர்கள் இறைவணக்கம் பாடினார்கள். தலைவர் திரு. அரியநாயகம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். புதிய உறுப்பினர்கள் திரு. S. முத்துக்குமார், திரு. T. சங்கரலிங்கம், திருமதி. கீதா முத்துக்குமார், திருமதி. சுந்தரி சங்கரலிங்கம் அவர்கள் வருகை தந்தனர். அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் மரியாதை செய்யப்பட்டது. 11–08–24 அன்று நடந்த 45–ஆம் ஆண்டு விழா நிகழ்ச்சி பற்றிய கருத்துக்களும், ஆலோசனைகளையும் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

ஆண்டுவிழாவில் திருமண தகவல் நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தி கொடுத்ததற்காக திரு. கருணாநிதி அவர்களுக்கும் திருமதி. சுந்தரி சிவராஜகோபால் அவர்களுக்கும் பாராட்டு செய்யப்பட்டது.

திரு. சோமசுந்தரம் அவர்கள், கோவை கார்காத்த சங்கம் ஆரம்பித்த முதல் தொடர்ந்து அயராது சுறுசுறுப்புடன் பணியாற்றி வருகிறார்கள். அவர்களை உறுப்பினர்கள் எல்லோரும் பாராட்டி மகிழ்ந்தனர். திரு. அரியநாயகம் அவர்கள் சோமசுந்தரம் அவர்களை சங்க ஆரம்ப காலம் இருந்து இன்று வரை சங்கத்தில் நடந்த முக்கியமான நிகழ்வுகளை குறிப்பெடுத்து தரும்படி வேண்டிக்கொண்டார்கள்.

திரு. சிவராஜ் கோபால் அவர்கள் (பொருளாளர்) ஆண்டு விழா கணக்கினை சமர்ப்பித்தார். அங்கத்தினர்கள் சரிபார்த்து அதனை ஏற்றுக்கொண்டனர். இளைஞர்களுக்காகவும் குழந்தைகளுக்காகவும் மகளிர் மற்றும் தொழில் முனைவோர் பங்கேற்கும் படியான சிறப்பு கூட்டங்கள் ஏற்பாடு செய்வதற்கு ஆலோசனை பெறப்பட்டது. திரு. கருணாநிதி அவர்கள் புதிய உறுப்பினர்கள் சேர்ப்பதற்காகவும் பழைய உறுப்பினர்களை சந்தித்து பேசுவதற்காகவும் பல ஆலோசனைகள் வழங்கினார்கள்.

ஆண்டு விழாவில் மிகச் சிறப்பாக பணியாற்றிய திருவேங்கடம் அவர்களின் குடும்பத்தாருக்கு வாழ்த்துக்களையும் நன்றிகளையும் கூறி பாராட்டு செய்யப்பட்டது. மதிய உணவு சிறப்பான முறையில் திருவேங்கடம் அவர்கள் அங்கத்தினர்களுக்கு விருந்தளித்து உபசரித்தார்கள். திரு. வள்ளிநாயகம் அவர்கள் நன்றியுரை கூறினார்கள்.

7–ம் ஆண்டு நினைவாஞ்சலி

தோற்றம் :
1–1–1936

மறைவு :
28–12–2017

பெண்ணாடம் **கு. வேலாயுதம் பிள்ளை**

Rtd A.S.S.T, SECRETARY (S.A.C.C. Bank)

ஆண்டுகள் பல ஓடிக்கொண்டே -
யிருக்கிறது. உங்களைப்போல
உறவுமில்லை! உங்களைப் போல
பிரிவுமில்லை! இன்னும் எத்தனைநாள்
இந்த தண்டனையை அனுபவிப்பது?

உங்கள் நினைவில் வாழும்

அன்பு **மணிக்கொடி.**

மற்றும் **உங்களை கொண்டாடி மகிழ்வித்த சொந்தமும் பந்தமும்.**

முதலாம் ஆண்டு ஆராதனை



தயைமிகு திரு. **எஸ். மகேஷ்குமார்**

(உரிமையாளர் **சரோஜ் ஏர் கண்ட்ரோல்,** சென்னை) மயிலாடுதுறை மாவட்டம், திருவிளையாட்டம், தெய்வத்திரு. A. சம்பந்தம் பிள்ளை – நலமுடன் S. சரோஜா அம்மாள் அவர்களுக்கு செல்ல மகனாய் அங்குட கோத்திரத்தில் **03–06–1966** அன்று மலர்ந்து **31–12–2023** அன்று இறைவனின் பாதச்சுவடிகளில் தன்னை காணிக்கையாக்கிக் கொண்ட எங்களது தந்தையார் அவர்கள் தன்னுடைய சுய திறமையாலும், கடின உழைப்பாலும் முன்னேறி தானும் உயர்ந்து, தன்னைச் சார்ந்தவர்களையும் உயர்த்திய உத்தமர். புன்னகை, மென்மை, பொது சிந்தனை, அன்பு, அரவணைப்பு, உதவி புரிதல், விட்டுக்கொடுத்தல் போன்ற எண்ணற்ற வாழ்வியல் விழுமியங்களின் உருவாய் வாழ்ந்தவர்.

"பெருவெள்ளம் வந்திட்ட போதும்
சிறுதுளி என எண்ணி
சிந்தை கலங்காது எப்போதும்
சிறப்புடன் அதனை கடந்திடல் வேண்டும்"

என்று வாழ்வியல் முறைமையை எங்களுக்கு கற்றுக் கொடுத்த பேராசான்

உங்களின் பிரிவை தாங்க முடியாமல், வெடித்துச் சிதறும் எரிமலையாய் எங்களின் துக்கம், கண்ணீராய் உங்கள் காலடிகளில் காணிக்கையாக்குகிறோம்.

உங்களின் அருளோடும், ஆசியோடும், வழிகாட்டுதலோடும்.

மனைவி : **எம். புவனேஸ்வரி**

மகள் : **எஸ்.எம். காவியா**

மகன் : **எஸ். எம். வருண்**

KARKATHAR BUSINESS FORUM

கார்காத்தார் தொழில்முனைவோர் பேரவை

கார்குலத்தில் பிறந்து சுயதொழில் செய்து தம்மையும், தம் குடும்பத்தினரையும், சக தொழில் செய்பவர்களையும் சமுதாயத்தினரையும் உயர்த்தும் உயரிய சேவையை ஆற்றிவருகிறது கார்குலம் தொழில்முனைவோர் பேரவை. மின் மாற்றி தொழிலில் ஈடுபட்டு தொழில் சார் நிறுவனத்தின் அனைத்து பாராட்டுகளையும் விருதுகளையும் பெற்ற IPL பொருட்கள் நிறுவனர் திரு.அ.சண்முகவேலாயுதம் ஐயா அவர்களின் 50 ஆண்டுகள் சேவையை பாராட்டி இப்பேரவையின் 77வது கூட்டத்தில் (சென்னை, கிண்டி BLOOM HUB HOTEL) 29.11.2024 அன்று கௌரவித்தது.

நம் குலத் தொழில்முனைவோர்களுக்கு தேவையான பல்துறைப் பயிற்சிகளை நேரிலும், நேரலையிலும் வழங்கி உடன் நின்று உதவி, வணிகம் தந்து, வாழ்க்கைத் தரம் மேம்படும் அனைத்து சேவைகளையும் 8 ஆண்டுகளாக ரூபாய் 53 கோடிக்கு மேல் வணிகம் வழங்கி வரும் இப்பேரவையில் இணைய விரும்புபவர்கள் அழையுங்கள்.

தலைவர் : திரு.M.பாலமுருகன் (9840408549)
செயலர் : திரு.N.பொன்னம்பலம் (9840897878)
பொருளர் : திரு.V.கண்ணன் (9841301835)

அன்புடன்
செயற்குழு
KBF

நூற்றாண்டு நினைவஞ்சலி

S. தையல்நாயகி
1932 – 2012
நெடுங்காடு

K. சுந்தரம் பிள்ளை
1924 – 2015
பெருந்தோட்டம்

முன்னறி தெய்வந்தான் அன்னையும் பிதாவுமென
நன்னெறி போதித்த அவ்வையின் சொற்களை
நெஞ்சினில் நிரப்பி எங்கள் பெற்றோருக்கு
அஞ்சலி செலுத்துகிறோம் அன்புடனே!

சாந்தா - கணேசன்
சங்கரன் - பானுமதி
மலர்விழி - சேகர்
வீழிநாதன் - பானுமதி
கலைச்செல்வி- ராஜேந்திரன்
லதா

பெருந்தோட்டம் – மயிலாடுதுறை மாவட்டம்.

நினைவஞ்சலி

12 ம் ஆண்டு

G.இலஞ்சியம் அம்மாள் அவர்கள்

உதிர்ந்தது : 12.12.2012

4 ம் ஆண்டு

C.கோவிந்தராஜன் பிள்ளை அவர்கள்

தலைமையாசிரியர் பணி நிறைவு

உதிர்ந்தது : 26.11.2020

எடுத்துகட்டி-சாத்தனூர்

என்றும் எங்கள் மனதில் வாழும்... உங்கள் அன்பு நினைவுகளுடன்...

மகன்கள், G.குமார் CREW (P) LTD - APL GUJARATH K.கலாவதி

Er.G.சண்முகம் S.பிரியா

திவ்யா கன்ஸ்ட்ரக்ஷன் & டிரான்ஸ்போர்ட்,

மகள் - மருமகன் M.சித்ரா தலைமையாசிரியர் P.முத்துக்குமார் CREW-MTPS-METTUR

பேரன் - பேத்திகள் E.கிருஷ்ணகாந்த்,B.E.,M.B.A.,. K.திவ்யா,M.E.,

M.கௌதம்ராம்,B.E., G.ஓவியா,B.E.,

S.கிஷோர், S.திஷா, - K.ஸ்ரீ, K.சூரியா கொள்ளு பேத்தி, பேரன் K.பிரதிக்ஷா, K.பிருத்விகா G.திவிஷிக்

மணல், ஜல்லி, கிராவல், M சண்ட் சப்ளையர்ஸ்

செல் : 9443785264

மாப்படுகை - மயிலாடுதுறை

ஏழாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் :
15.08.1947

மறைவு :
15–12–2017

திருமதி. A. தனலெட்சுமி

கானூர்

அன்பின் திருவுருவாய் குடும்பத்தின் தியாகியாய் வாழ்ந்து, எங்கள் அனைவர் இதயத்திலும் நீங்கா இடம் பெற்ற நீ, எங்களை விட்டு விண்ணுலகம் சென்று ஏழு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆனாலும் எங்கள் அனைவரின் இதயத்திலும் உன் நினைவுகள் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்றும் உன் நினைவில் வாழ்ந்து கொண்டிருக்கும் உன்

கணவன் – **செ. ஆதிவராகன்,** Retd HM, கானூர்

Cell: 9487921285

கௌரவத் தலைவர். எம்.ஆர்.வி. நகர் குடியிருப்போர் நலச்சங்கம், லால்புரம், சிதம்பரம்.
மூத்த துணைத்தலைவர், சிதம்பரம் வட்ட தமிழ்நாடு ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கம்.

மருமகன் : திரு. **R. கார்த்திகேயன்,** B.Com Dip.in.cop., (பண்ணப்பட்டு)
மகள் : திருமதி. **K. தமிழ்ச்செல்வி**
மருமகன் : திரு. **Dr. S. விழிநாதன்,** M.Sc, Phd., (பனங்காடி)
மகள் : திருமதி. **V. உமாராணி,** B.Com Dip.in.cop.,
மகன் : திரு. **A. அன்புச்செல்வன்,** B.E Chief Manager T.S.II - N.L.C. நெய்வேலி
மருமகள் : திருமதி. **A. கவிதா**

பேரன் – பேத்திகள்

A. பூரணி, M.Sc.,
Dr. A. வனிதா, M.B.B.S.,
Er. K. நரேந்திரன், B.E. (USA)
Dr. P. பரத்வாஜ், M.D.,
Er. N. கலைவாணி, B.E

கொள்ளு பேத்திகள்

N. மித்திரவள்ளி, N. கீர்த்திலெட்சுமி

கண்ணீர் அஞ்சலி

ஒளி
05–01–1944

நிழல்
22–10–2024

திரு. V. சம்பந்தம் பிள்ளை

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார் கோவில் வட்டம், கஞ்சங்கொல்லை கிராமம், தெய்வத்திரு. K.A. வெங்கடாசலம் பிள்ளை – V. ருக்குமணி அவர்களின் புதல்வரும், தெய்வத்திருமதி. செல்வரெங்கநாயகி அவர்களின் கணவரும் S. சங்கர் மற்றும் S. சேகர் இவர்களின் தந்தையாரும் எங்களின் சகோதரருமான

திரு.V. சம்பந்தம் பிள்ளை அவர்கள்

(பொறியாளர் – ஒய்வு, தமிழ்நாடு மின்சார வாரியம்)

22–10–2024 செவ்வாய்க்கிழமை மதியம் 02.15 மணியளவில் இயற்கை எய்தினார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தனக்கென வாழா
பிறர்க்கென வாழ்ந்தாய்
என்றும்
நினதருட்புகழின்
நிழலில்

சகோதரிகள் :

வசந்தா நடன சபாபதி
மணிமேகலை சபாநாயகம்
சந்திரா பாலசுப்ரமணியம்
சுதாசினி பரமநாதன்

சகோதரர்கள் :

V. சண்முகசுந்தரம்
V. இளங்கோவன்

உறவினர்கள் – நண்பர்கள்.

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
30–12–1940

மறைவு
28–10–2023

கடலூர் மாவட்டம், தீர்த்தினகிரி கிராமம், தெய்வத்திரு. T.S. திருஞானசம்பந்தம் பிள்ளை – மீனாட்சி அம்மாள் இவர்களின் மூத்த குமாரர்

தெய்வத்திரு **T. பாலதண்டாயுதம் பிள்ளை**

(கட்டிட ஆய்வாளர் (ஓய்வு), தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை.)
அவர்களுக்கு முதலாம் ஆண்டு நினைவஞ்சலி.

என்றும் உங்கள் நினைவோடு வாழும்,
மனைவி : **B. மோகனாம்பாள்.**

மகன் : **B. சங்கரன்**
மருமகள் : **S. வசுமதி**
பேரன் : **S. பிரகதீஸ்வர்**

மகள் : **B. சுதா**
மருமகன் : **S.R.S. பழமலை**
பேரன் : **J.N. பரணிதரன்**
பேத்தி : **P. நந்திதா**
பேத்தி : **P. மதுமிதா**
கொள்ளு பேத்தி : **B. மிருதுளா**

மற்றும் **உறவினர்களும் - நண்பர்களும்**

கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
15.09.1935

மறைவு
01.11.2024

திரு. P.S.வேலாயுதம் பிள்ளை அவர்கள்

(தலைமையாசிரியர் பணி நிறைவு, சீர்காழி கார்காத்தார் சங்கம் முன்னாள் தலைவர்)

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், பெருந்தோட்டம், தெய்வத்திரு.K.சண்முகம் பிள்ளை-முல்லையம்மாள் அவர்களின் குமாரரும், சீர்காழி, தென்பாதி, திருவள்ளுவர் நகர், P.S.வேலாயுதம் பிள்ளை அவர்கள் 1.11.2024 வெள்ளிக்கிழமை அதிகாலை 1.30 மணி அளவில் சிவலோகபதவி அடைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நினைவில் வாழும் :
திருமதி, V.விஜயலெட்சுமி

மருமகன் - மகள்கள்
M.சிவசண்முகம் - அன்பழகி
கூட்டுறவுத்துறை பணி நிறைவு
T.ரவிகுமார்
வேளாண்மைத்துறை பணி நிறைவு
மலர் ரவிகுமார்
ஆசிரியை பணி நிறைவு

மகன்-மருமகள்
V.அறிவழகன்
கம்பன் பிரிண்டர்ஸ்
A.திலகம்
மயிலாடுதுறை.

பேரன் A.அக்ஷயகுமரன்

Posted at Pathrikachanel, Egmore
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH(C) / 405 /2022 - 2024 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/22-24
Date of Publication : 15th of Every Month
15th / 16th December 2024

CHOZHA HOTELS

HOTEL KANAKABHISHEGAM

First Hotel From The Temple

We extend our heartfelt gratitude to Mr. O. S. Manian (MLA) and his family for honoring us by dining at our Amirtham Restaurant and blessing us with their presence.

Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

Published by : K. SHANMUGAM, on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**